உ

கடவுள் துணை

# தேசிங்குராஜன் கதை



பல அரியசுவடிகளைக் கொண்டு திருத்தப்பெற்றது

இருபெரும் புலவர்களால் பார்வையிடப்பெற்றது

இதன் விலை]

ஸ்ரீ
ஸ்ரீராம ஜெயம்.

வித்வ சிரோன்மணியாகிய

புகழேந்திப் புலவரவர்கள் இயற்றிய

# தேசிங்குராஜன் கதை

படங்களுடன்



## M. துரைசாமி முதலியார் & சன்ஸ்.

(புத்தக வியாபாரம்)

1-1 மலையபெருமாள் தெரு,

சென்னை-1.

இதன் விலை] 1956 [ரூ. 1-8-0

மனைவி, தங்கை—தமக்கை, அண்ணி—அத்தை, தாயார்
எல்லோரும் படிக்கவேண்டிய புத்தகம்

# மனைவியின் கடமை

* "பெண்கள் இருக்கும் வீட்டில் இந்தப் புத்தகமும் இருக்க வேண்டும்"
* "இது, எல்லாப் பெண்களும் பலமுறை படிக்க வேண்டிய புத்தகம்"
* "படித்துப் பட்டம் பெற்ற பெண்களும் இதைப் படிக்க வேண்டும்"
* "பெண்கள் அறிய வேண்டிய எல்லா நீதிகளையும் இதில் காணலாம்"
* "இது பெண்களுக்குச் சிறந்த அறிவைப் புகட்டும் நூல்"
* "பெண்களுக்கு வேண்டிய போதனைகள் எல்லாம் இதில் இருக்கின்றன"
* "ஒவ்வொரு மனைவியும் இதைப் படிக்க வேண்டும்"
* "கலியாணப் பெண்ணுக்கு இதைப் பரிசாகக் கொடுக்கலாம்"
* "இதைப் படிக்கும் பெண்கள் குடும்ப விளக்குபோல் விளங்குவார்கள்"

இவ்வாறெல்லாம் பலராலும் புகழ்ப் பெறும் "மனைவியின் கடமை" என்னும் புத்தகத்தை உங்கள் குடும்பத்திலுள்ள பெண்களும் படிப்பதற்கு உதவி செய்யுங்கள். அதனால் உங்களுக்கும் நன்மை உண்டாகும்.

விலை ரூ. 2—8—0.

---

புத்தகம் கிடைக்குமிடம்:—

எம். துரைசாமி முதலியார் & ஸன்ஸ்,

1-1, மலையபெருமாள் தெரு, சென்னை—1.

ஸ்ரீராமஜெயம்

# தேசிங்குராஜன் கதை

காப்பு

விநாயகர் தோத்திரம்

மேதினி யரச ரெல்லாம் வியப்புடன் புகழ்வதாக
நீதிசேர் நெறியுஞ் செங்கோல் நிலைமையும் தருமமுற்ற
தீதிலா தென்றுங்காக்கும் தேசிங்குராஜன் னற்சீர்க
கதையை யெடுத்துரைக்கக் கணபதி காப்பு தானே.

முருகர் தோத்திரம்

ஜெயங்கொள் தேசிங்குராஜன் சீர்கதையதனைச் சொல்ல
வயங்கொண் மா மயிலேறும் வந்திரு முருகர்தூய
நயங்கொள் பாதத்தையுந்தா ஞகியமரர்கள் சீரார்
வியங்கொள் பாதத்தையுந்தா விரும்பியே வணங்குவோமே.

சிவ தோத்திரம்

தஞ்சமென்றோரைக் காக்கும் தயாளதேசிங்குராஜன்
எஞ்சலிககதையை சொல்ல வெந்தையாஞ் சுந்தரேசர்
செஞ்சரணத்தேயுந்தன் தேவிபார்வதியாள்பாதங்
கொஞ்சுமா வடிமையுங்கை கூப்பியே வாங்குவோமே.

விஷ்ணு தோத்திரம்

சங்குசக்கரங்கோதண்டந் தண்டுவாள் கரத்திற்கொண்ட
செங்கண்மால்பதமுஞ்சீரார் திருவின்பொற்பாதநாளும்
பொங்கமாயிறைஞ்சியுன்னிப் புகழுந்தேசிங்குராஜன்
துங்கமாங்கதையைசீராய் சொல்லுவோம்புவியினோர்க்கே.

சரஸ்வதி தோத்திரம்

பலகலைகளுணர்ந்தேற்றிப் போற்றுகின்ற
பாலைவாணர்க்குதவி செய்துபாதுகாக்கும்
நிலைமையுடன் தவளநிற முடையார்வாசல்
நிகழும்சரஸ்வதியைக் தாளிறைஞ்சி
அலையெரியுங்கடல்சூழும் புவியோர்மெச்சும்
அங்கஜனைக்கண்டச்சங்கொள் ளழகுறைந்த
விலையிலாமணிமுத்து தேசிங்குராஜன்
வியன்றருசீர்ச்சரித்திரத்தை விளம்புவோமே.

## அவையடக்கம்

முத்தமிழ் பயனுணர்ந்த புலவோர்முன்னே
 மூடனடியேனுமென் பிதற்றுகின்ற
பத்தியிருந்தெழிற்செங்கோல் செலுத்துகின்ற
 பராக்கிரமமதிவீர ராஜனென்றே
எத்திசையும்புகழுந் தேசிங்குராஜன்
 எழிற்கதையிற்சொற்குற்றம் பொருட்குற்றந்தான்
மெத்தவிருக்கினுங்குதலைச் சொல்லைப்போலே
 வியங்கொள்வார்பாராட்டி நயங்கொள்வாரே.

## நாட்டுச் சிறப்பு

சீருஞ்சிலப்புமுள்ள தேசிங்குமகாராஜன்
பேரும்பிரபலமும் பெருகிவரும்படியாய்
செந்நெற்கதிர்பெருத்துச் செழித்துவளர்கிறதும்
கன்னற்கொழுத்துக் காட்டைமறப்பதுவும்
மான் புலியும்பசுவும் மருவியே வாழ்கிறதும்
காடைக்கவுதாரி காட்டுப்புறாகூவுறதும்
பேடைமயிர்கூடிப் பிரியமடைகிறதும்
புன்னைபலாச்சோலை பொருந்திநிறைந்திடவும்
சந்தனச்சோலைகளும் சாதிமல்லிபூத்திடவும்
மந்தாரைகோங்கு மல்லிகைப்பூசாலைகளும்
தாமரைப்பொய்கைகளுந் தடாகமுள்ளஏரிகளும்
வாமமூறும்காறும் வம்புகளுமென்னசொல்வேன்
செஞ்சிநகர்சீரைச் சிலவற்றையெடுத்துரைப்போம்
எஞ்சில்லாவீதிகளு மெழிற்றோரணநிறையும்
வாழைக்கமுகுகளெங்கும் வளமாகக்கட்டியதும்
ஏழைகளைக்கூவியன்னம் இட்டுவருகிறதும்
இந்திரலோகம்போ லிருக்குமரண்மனையும்
சந்தனமின்னார்களின் கற்பின்திறமைகளும்
வேதியர்கள்கூடி வேதம்படிப்பதுவும்
நீதிதவறாமல் நிகர்புலவோர்பாடுவதும்
பொன்னகரைப்போற் பொருந்திநின்றுடுவதும்
மன்னன்சீர்கீர்த்தி வாழ்த்திவருகிறதும்
இப்படியாக இருக்குமந்தசெஞ்சிநகர்.

## கதையின் வரலாறு

வடக்கேவெகுதூரமிருக்குதுபார் மகமேருசாரலொன்று
மகமேருசாரலில்தபசிசெய்கிறார் வர்னலட்சம்ரிஷிகள

கர்த்தனைநோக்கித்தபசுசெய்கிறார் கனத்தமகரிஷிகள்
சிவசிவாவென்றசத்தமங்கே தெய்வலோகங்கேட்கும்
அரகராவென்றசத்தமங்கே ஆகாயமட்டுமெட்டும்
கோவிந்தாவென்றசத்தமங்கே கொடிமுடிதான் கேட்கும்
மாயவாவென்றசத்தமங்கே வைகுந்தந்தான் கேட்கும்
துலுக்கனொருவன் கர்த்தனைநோக்கிக் கோடிதவஞ்செய்தான்
பகவானைநோக்கித் துலுக்கலொருவன் பாரதவஞ்செய்தான்
மந்திரவித்தைதந்திரவித்தை மகாவித்தைதானறிவான்
இந்தப்படியாய்ரிஷிகளெல்லாம் இருந்துதவஞ்செய்தார்

## குதிரையின் பெருமை

தெய்வலோகத்திற்பிறந்தகுதிரை திசைதப்பிவருகுதுபார்
இரங்கர்கிருபையால் திகைத்தகுதிரை நடனமாடுதுபார்
உச்சிமலைகளில்புல்லுகள்மேய்ந்து ஒதுங்கிவருகுதுபார்
சாரலோரம்புல்லுகள்மேய்ந்து சாய்ந்துவருகுதுபார்
கொடியசூரியனுதித்ததுபோல் குலுங்கிவருகுதுபார்
தங்கமயமானகுதிரைக்கண்டான் தவம்செய்யுந்துலுக்கன்
குதிரையைகண்டுஓடிவருகிறான் கொங்குதேசதுலுக்கன்
துலுக்கனைகண்டுகர்ச்சனைசெய்தது தெய்வலோககுதிரை
அஞ்சனம்போட்டுக்குதிரைவலிமையை அறிந்துகொண்டானும்
மந்திரவலையைவீசிப்போட்டு மடக்கிப்பிடித்தானும்
மந்திரத்தாலேகுதிரைப்பாகரை வரிசையாய்வைத்தானும்
நாலாயிரங்குதிரைபாகரை நடுவேவைத்தானும்
குதிரைமேலேகூடாரம்போட்டு கொண்டுமேவாரானும்
ஐந்துநாழிகைதூரமிருந்து அதட்டிமேவாரானும்
தூரத்திலிருந்துகுதிரைப்பாகரும் சூழ்ந்துவாரானும்
தகத்தகாயமாய்நடுவிலிருந்து தாண்டுதுமுன்னாலே
தந்திரவலையிலகப்பட்டகுதிரை வருகுதுமுன்னாலே
மந்திரத்தாலேமாயாபக்கிரி மடக்கிகொண்டுவாரான்
டில்லிக்குவெகுமதிகொடுப்பேனென்று சேரகொண்டுவந்தான்
டிவகுமதிசெய்யபாராசாரியை வெளியில்கொண்டுவந்தான்
வெளியில்நிறுத்திபக்கிரியவனும் வேலைஎன்னசெய்தான்
குதிரையைச்சுற்றிகூடாரம்போட்டுக் கொடியகாவல்வைத்தான்
யானைச்சங்கிலிபோட்டுமடக்கினன் அந்தக்குதிரையைத்தான்
மந்திரவலையையவிழ்த்துவிட்டான் மாயாபக்கிரியும்
மயக்கந்தெளிந்துகண்ணாலேகண்டது வர்ணமேகுதிரை
அண்டமிடிந்து விழுந்தாற்போல் அலறிகனைத்ததுபார்
கோட்டையிடிந்துவிழுந்தாற்போல் குலுங்ககனைத்ததுபார்
டில்லிபட்டணங்காதவழியும் சேரவேநடுங்குதுபார்

கூடகோபுரமாடமண்டபம் குலுங்கிநடுங்குதபுரா
பட்டணமுள்ளஜனங்களெல்லாம் பதறிவிழுந்தார்கள்
பாட்சாதகத்துநடுங்கியவனும் பதறிவிழுந்தானும்
மூன்றரைநாழிகைமூர்ச்சையாயினர் முழுதும்ராஜாக்கள்
பட்டணத்திலுள்ளஜனங்களெல்லாம் பதறிமூர்ச்சையானர்
டில்லிபதுரைமூர்ச்சைதெளிந்து சிதைந்துவிழுந்தானும்
அண்ணுவாடாதம்பிவாடா இராஜலிங்கபாபு
இதுவென்னவதிசமமென்னவதிசயம் இராஜலிங்கபாபு
அண்டமிடிந்துவிழுந்ததோ சொல்லும்ராஜலிங்கபாபு
ஏழுலோகமுங்கூடிவந்ததோ இராஜலிங்கபாபு
சலுதியிலோடிசுற்றிப்பாரும் இராஜலிங்கபாபு
ஒற்றைக்குதிரைக்காரனையா இராஜலிங்கபாபு
ஓடியேசுற்றிப்பார்த்தானையா இராஜலிங்கபாபு
வடக்குதிசையில்மின்னுதுபாரு வர்ணமேகப்புரவி
குதிரைவருவதைக்கண்ணாலேகண்டான் ரோகங்குபக்கிரியும்
எதிரில்வந்துசலாஞ்செய்தான் இருந்தபாலகனும்
பதில்சலாமுக்கொடுத்தனையா இராஜலிங்கபாபு
சலாம்செய்துகுதிரையைக்கண்டான் இராஜலிங்கபாபு
குதிரையைக்கண்டுபெருமூச்செறிந்தான் இராஜலிங்கபாபு
ஐயாகேளுமையாகேளும் கோங்குபக்கிரியே
எந்ததேசத்திலிருந்தகுதிரை இங்கேகொண்டுவந்தீர
தெரியவெனக்குநீர்சொல்லும் தேசத்துயபக்கிரியே
அந்தப்பேச்சைகாதிலேகேட்டான் கோங்குபக்கிரியும்
ஐயாகேளுமையாகேளும் இராஜலிங்கபாபு
இந்தவுலகத்திற்பிறந்தல்ல இந்தப்புரவியுந்தான்
அந்தப்பேச்சைக்காதிலேகேட்டது குதிரையாலும்
கோபம்வந்துமூண்டுகொண்டது குதிரைக்காரலும்
கடகடகடகடகடகடவென்று கனைத்துநின்றதுவே
தெய்வலோகத்திற்பிறந்தகுதிரை சொர்னமேகக்குதிரை
பன்னிரண்டுவயதாச்சுதுபாரு பாராசாரிகுதிரை
வெள்ளிக்கிழமையிற்பிறந்தகுதிரை வேகமானகுதிரை
ஒருவருமண்டக்கூடாதுபாரு உயர்ந்தமேகக்குதிரை
இந்தஉலகத்திலொருவருமில்லை இந்தக்குதிரையேற
மனதுதனிந்துஏறினாலும் மாண்டுபோய்விடுவார்
தைரியங்கொண்டுஏறினாலும் சிதைந்துபோய்விடுவார்
தெய்வவரத்தினாற்பிறந்தபிள்ளை வந்துஏறவேணும்
வரத்தினாலேபிறந்தபிள்ளை வந்துஏறவேணும்
பூமிபாரந்தீர்க்கவந்தவன் இப்புறவிஏறவேணும்
தேவரடியிற்பிறந்தபிள்ளை தேசிஏறவேணும்

அந்தசொல்லைகேட்டவுடனே அலறிவிழுந்தார்கள்
டிலலிபதுரைக்குஇணைகொடுக்கத் தேடிவந்தேனென்றான்
அந்தப்பேச்சைகாதிலேகேட்டான் இராஜலிங்கபர்பு
கேட்டவுடனேமன தகலங்கி கீழேவிழுந தானும்
விழுந்தவுடனே தைரியங்கொண்டு மெள்ளஎழுந்தானும்
எழுந்தவுடனே ராஜதுரைக்கு எழுதிவிட்டானும்
ஓலையைக்கொண்டுகையில்கொடுத்தார் ஓடிவந்ததூதர்
ஓலையைப்பிரித்துவாசித்துப்பார்த்தான் டில்லிபதுரைதானும்
கலகலவென்றுசிரித்தானையா டில்லிபதுரைதானும்
அண்ணாவாடாதம்பிவாடா மந்திரிதுரைமாரே
தெய்வலோகத்துபுரவியொன்று தேடியேவந்ததாம்
குதிரைஏறிச்சவாரிசெய்து கொண்டுபோகவேணும்
சல்திசல்திகுதிரைகொண்டுவாடா அர்க்காருபர்ப்பையா
பட்டத்துயானைகொண்டுவாடா அர்க்காருபாப்பையா
சலாம்வாங்கிதிரும்பினானையா அர்க்காருபாப்பையன்
தண்டுக்குச்சைகையூதினானையா அர்க்காருபாப்பையன்
பட்டத்துயானைவந்துநின்றது இராஜன்முன்னாலே
யானைமேலேஏறினானையா டில்லிபதுரைதானும்
முதல்மந்திரிஇராஜலிங்கனும் முன்னேபோயிருந்தான்
போட்டிக்குவந்தஇராஜதுரைகள் பின்னேநடந்தார்கள்
நாலாயிரம்துருப்புகுதிரை நடந்ததுமுன்னாலே
காலால்சேனைஆயிரம்பேர் கடுகநடந்திடுவே
திமிதிமிதிமிதிமிதிமிதிமியென்று சேனைநடந்திடவே
சேனைவருவதைக்கண்ணாலேகண்டது தெய்வலோககுதிரை
கிடுகிடுகிடுகிடுகிடுவென்று கெர்ச்சனைசெய்ததுவே
கர்ச்சனைசெய்தசத்தத்தினாலே கீழேவிழுந்தார்கள்
அண்டமிடிந்துவிழுந்தாற்போல் அலறிவிழுந்தார்கள்
ஆனைசேனைகுதிரைகளெல்லாம் அங்கேவிழுந்திடவே
டில்லிபதுரையானைமீதில் திடுக்கிட்டுவிழுந்தானும்
சுற்றிலுமிருந்தராஜதுரைகள் துள்ளிவிழுந்தாராம்
மூலைக்குமூலைதுருப்புக்குதிரை முறித்துகொண்டோடுதுபார்
அவ்வதிசயத்தைக்கண்ணாலேகண்டான் டில்லிபதுதானும்
அண்ணாவாடாதம்பிவாடா ராஜலிங்கபாபு
வந்தொருமந்திரிமாரும் நடுங்கியோடிவந்தார்
கலகலவென்றுசிரித்தானையா டில்லிபதுரைதானும்
இதுஎன்னவதிசமென்னவதிசயம் ராஜலிங்கபாபு
இத்தனைநாளுமிந்தகுதிரையை எங்கும்பார்த்ததில்லை
டில்லிபதுரையைக்கண்ணாலேகண்டான் தேசத்துபக்கிரியும்
முழங்கால்சிலைபோட்டவனும் முன்னேசலாம்செய்தான்

பதில்சலாமுங்கொடுத்தனையா டில்லிபதுரை தானும்
சுற்றிலும்மிருந்த இராஜதுரைகள் சூழ்ந்தேசலாம்செய்தார்
போட்டிக்குவந்தஇராஜதுரைகள் பெரியசலாம்செய்தார்கள்
ஐயோகேளுமையாகேளும் டில்லிபதுரையேநீ
தெய்வலோகத்திற்பிறந்தகுதிரை தேடிக்கொண்டுவந்தேனுன்
இனுங்கொடுக்கக்கொண்டுவந்த ளிந்தப்புரவியைத்தான்
இந்தப்புறவியேறுகிறராஜா இந்தவுலகிலில்லை
இதற்கென்றுபிள்ளைபிறக்கப்போகிறான் இந்தவுலகிலேதான்
அந்தமட்டும்பாராசாரியை அடக்கிவையுமையா

கொங்கு பக்கிரி டில்லி பாட்சாவுக்கு கு[illegible]ரையை கொடுத்து
வெகுமதி பெற்றுக் கொண்டது

அந்தப்பேச்சைகாதிலேகேட்டான் டில்லிபதுரைதானும்
சந்தோஷமாகப்பக்கிரியவனைத் தழுவிக்கொண்டானும்
என்னுடன்கூடிடில்லியில்நீயும் இருந்துபோகவேணும்
விருந்துபொசித்துஇனுங்கொடுப்பதை வேண்டிப்போகுமையா
ஆனால்நல்லதாகட்டுமென்றான் அந்தப்பக்கிரியும்
அண்ணாவாடாதம்பிவாடா இராஜலிங்கபாபு
குதிரைகொட்டடியில்கொண்டுபோய்வையும் இராசலிங்கபாபு
கொள்புல்தண்ணீர்கூசாமல்வையும் இராசலிங்கபாபு
அந்தப்படிக்குத்தாரங்கொடுத்தான் டில்லிபதுரைதானும்
ஆனால்நல்லதாகட்டுமென்றான் இராசலிங்கபாபு
அண்ணாவாடாதம்பிவாடா அர்க்காருசின்னையா
ஜல்திஜல்திதயார்செய்யடா அர்க்காருசின்னய்யா
ஆனால்நல்லதாகட்டுமென்றான் அர்க்காருசின்னையன்
கோடிபாகரைகூப்பிட்டழைத்துவந்தான் அர்க்காருசின்னையன்
குதிரைகொட்டடிகொண்டுபோய்சேர்த்தான் அர்க்காருசின்ன [யன்
கோடிபாகரைகொலுவாகவைத்தா னர்க்காருசின்னையன்
சுற்றிலிருந்துருசிப்பாய்வைத்தான் அர்க்காருசின்னையன்
பந்தோபஸ்தாயிருந்ததுபார் பாராசாரிகுதிரை
டில்லிபதுரையும்பக்கிரியவனை தேடிக்கொண்டுவந்து
விருந்துசெய்துசந்தோஷமாக மெச்சிஎன்னசெயதான்
ஊருபதிகள்நாடுகளெல்லாம் உறுதியாகக்கொடுத்தான்
வேண்டியமட்டும்திரவியங்கொடுத்து வேண்டிக்கொண்டானும
தங்கமயமானசாலுவையென்று தலைக்குக்கொடுத்தானும்
அந்தவெகுமதிபெற்றுக்கொண்டான் அந்தப்பக்கிரியும்
அந்தநாளுடசென்றதுமறுநாள் ஆச்சுதுஐயாவே
தங்கத்தகத்திலிருந்தரசு தனிமையாய்செய்கிறானும்
தகத்திலிருந்துயோசனைசெய்தான் டில்லிபதுதானும்

அண்ணுவாடா தம்பிவாடா மந்திரி துரைமாரே
இந்தப்புரவியேறுகிறராஜன் இந்தவுலகிலுண்டோ
பாராசாரியேறுகிறராஜன் பத்துதிக்கிலுமுண்டோ
இந்தப்புரவியேறுகிறராஜனை புகழ்ந்துகாணவேண்டும்
யோசனைசெய்துதெரியச்சொல்லும் என்னுடனேபாபு
அந்தபபேச்சைக்காதிலேகேட்டார் அந்தமந்திரிமாரும்
எல்லோருங்கூடியோசனைசெய்தார் அந்தசபையிலேதான்
முதல்மந்திரிஇராஜலிங்கனும் முன்னேயோடிவந்தான
முழங்கால்மண்டிபோட்டவனும் முன்னேசலாஞ்செய்தான்
ஐயாகேளுமையாகேளும் டில்லிதுரையேநீர்
ஐம்பத்தாறு தேசராஜரை அறிந்துசொல்கிறேன் கேள்
எட்டுதிசையிலுமுள்ள ராஜர்இதற்குதவமாட்டார்
கோடிராஜரிருக்கிறாரையா குதிரையேறமாட்டார்
தெரிந்தமட்டும்சொல்கிறேன்கேள் டில்லிபதுரையேநீர்
தெற்கேவெகுதூரமிருக்கிறது செஞ்சிகோட்டைதுருகப்
செஞ்சிதுருகத்திலரசுபண்ணுகிறான் சூரசிங்குராஜன்
சூரசிங்குகுமாரனையா தரணிசிங்குராஜன்
தோரணிராஜன்தம்பியையா தரணிசிங்குராஜன்
அண்ணனுந்தம்புயுமாளுகிறாரையா செஞ்சிகோட்டையைதான்
அவருக்குமிஞ்சியொருவருமில்லை அந்தக்குதிரையேற
பத்துதிக்கிலுமொருவருமில்லை பாராசாரியேற

டில்லிபாட்சா ஓலையெழுதி தோரணிமகாராஜனை அழைத்தது

செஞ்சிராஜனையழைத்தீராணல் தேசியேறிடுவார்
அந்தப்பேச்சைக்காதிலேகேட்டான் டில்லிபதுரையும்
கலகலவென்றுசிரித்தானையா டில்லிபதுரையும்
நீயேவாடாநீயேவாடா கணக்கபிள்ளைவாரும்
ஆயிரங்கணக்கபிள்ளைக்குபெரிய கணக்கபிள்ளைவாரும்
செஞ்சிக்கோட்டைக்குஓலையெழுத கணக்கபிள்ளைதானும்
சலாமையாசலாமையா தோரணிமகராசா
டில்லிபதுரையும்ஓலையெழுதுகிறான் தோரணிராசருக்கு
உன்னிடபேட்டிகாணவேணும் உயர்ந்தசெஞ்சிராஜா
தேசத்துராசர்போட்டிக்குவந்தார் தெரிசனம்செய்தோமே
உன்னிடபேட்டிஒருநாளுங்கானேன் உத்தமராசாவே
என்மீதுதயவுமிருக்கிருக்குமேயானு லிங்குவரவேணும்
அந்தப்படியேயெழுதிமுடித்தார் அந்தஓலையிலே
அண்ணுவாடாதம்பிவாடா அர்க்கார்பாப்பையா
செஞ்சிசேதிதெரிந்துவாடா அர்க்கார்பாப்பையா
இருபதுநாளில்சேதிசொல்லடா எந்தனுக்காணலும்

அங்கிருந்துவெளிப்பட்டானையா அர்க்கார்பாப்பையன்
தபால்மார்க்கமாய்தனியேபோருன் அர்க்காபாப்பையன்
பத்துநாளில் பழஞ்செஞ்சிசேர்ந்தா னர்க்கார்பாப்பையன்
புதுசெஞ்சில்தபசிபண்ணுகிருன் தோரணிமகராசன்
அரசுமுகத்தில்வந்துநின்ருன் அர்க்கார்பாப்பையன்
முழங்கால்மண்டிபோட்டவனும் முன்னேசாலம்செய்தான்
பதில்சலாமுங்கொடுத்தானையா தோரணிமகாராசன்
ஒலைகொண்டுகையில்கொடுத்தா னர்க்கார்பாப்பையன்
ஒலைமுகத்தைகண்ணுலேபார்த்தான் தோரணிமகாராசன்
வந்ததூதரைவரிசையால்ப்பார்த்தான் தோரணிமகாராசன்
எங்கிருந்துயிங்குவந்தீர்கள் எனக்குசொல்லுமையா
அந்தப்பேச்சைக்காதில்கேட்டான் அர்க்கார்பாப்பையன்
டில்லியிலிருந்துவந்தோமையா தோரணிமகாராசா
தம்பிவாடதம்பிவாடா தரணிசிங்குராசா
டில்லியிருந்துசேதிவந்தது தரணிசிங்குராஜா
ஒலையைப்பிரித்துசேதிசொலலும தரணிசிங்குராசா
அந்தப்பேச்சைகாதிலேகேட்டான் தரணிசிங்குராஜன்
ஒலையைப்பிரித்துவாசித்துப்பார்த்தான் தரணிசிங்குராஜன்
டில்லிசேதியைச்தெரியச் சொன்னுன் தரணிசிங்குராஜன்
அந்தப்பேச்சைக்காதிலேகேட்டான் தோரணிமகாராஜன்
கலகலவென்றுசிரித்தானையா தோரணிமகாராசன்
அண்ணுவாடாதம்பிவாடா மந்திரிதுரைமாரே
ஆயிரம்குதிரைதபால்வையடா மந்திரிதுரைமாரே
அண்ணுடஞ்சேதியடிக்கடியெழுதும் மந்திரிதுரைமாரே
என்னிடசேதியெழுதியனுப்புகிறேன் என்மந்திரிமாரே
அந்தப்பேச்சைகாதிலேகேட்டார் அந்தமந்திரிமாரும்
ஆனல்நல்லதாகட்டுமென்ருர் அந்தமந்திரிமாரும்

### தோரணிமகராஜன் மனைவியிடத்துக்குப் போய் விடைபெற்றுக்கொள்ளுதல்

அரசுகடந்துவரண்மனைபோனு ரண்ணனுந்தம்பியுமாய்
இராணிவசத்தில்நடந்தாரையா நல்லதுரைமார்கள்
தோரணிராசன்பெண்சாதியையர் தெய்வராம்பாயி
பத்துமாதங்கர்ப்பமையா தெய்வராம்பாயி
பூரணகர்ப்பமானையா புண்ணியாரம்பாயி
புருஷனைக்கண்டுபூசைபண்ணிஞள் புண்ணியரம்பாயி
பெண்சாதிமுகத்தைக்கண்ணுல்கண்டான் தோரணிமகாராசன்
மனதுகலங்கிஎதிரிலேநின்ருன் வந்தமகாராசன்
பெண்ணேகேளும்பெண்ணேகேளும் புண்ணியராம்பாயி

நான்போய்வாரேன் நான்போய்வாரேன் புண்ணியராம்பாயி
டில்லியிலிருந்துசேதிவந்தது தெய்வராம்பாயி
அந்தப்பேச்சைக்காதிலேகேட்டாள் அந்தராம்பாயி
இன்றோநாளையோகெர்ப்பமென்று இருக்குதென் துரையே
என்னைவிட்டுநீரெப்படிபோறீர் என்பிராணகாதா
அந்தப்பேச்சைக்காதிலேகேட்டான் தேரணிமகாராஜன்
பெண்சாதிமுகம்பெருமையாய்ப்பார்த்தான் தேரணிமகாரா
பெண்ணேகேளும்பெண்ணேகேளும் புண்ணியராம்பாயி [ஜன்
சனுதியிலென்னைவரவேயெழுதினன் டில்லிமகாராசன்
சீக்கிரம்யென்னைவரவேயெழுதினன் டில்லிமகாராசன்
போகாதேபோனல்பிழைகள்வருமே புண்ணியராம்பாயி
மூன்றுமாதத்தில்வந்துசேருகிறேன் முத்துராம்பாயி
தோழியும்நீயும்சுகமாயிருங்கள் சொகுசுராம்பாயி
பாங்கியும்நீயும்பயனமாயிருங்கள் பத்மராம்பாயி
நான்போனவுடனே ஓலையெழுதுகிறேன் பொன்னுராம்பாயி
இவ்விடஞ்சேதிஎனக்குத்தெரியஎழுதும்பெண்மயிலே
அந்தப்பேச்சைக்காதிலேகேட்டாள் அந்தராம்பாயி
போய்விட்டுவாரும்போய்விட்டுவாரும் புருஷசிங்கமேநீர்

### தேரணி மகாராஜன் டில்லிபட்டணம்வந்து டில்லிபதுரையைக் காணல்

ஆனல்நல்லதாட்டுமென்று அப்புறந்தானடந்தார்
செஞ்சியைவிட்டுபுறப்பட்டானையா தேரணிமகாராசன்
அண்ணனுந்தம்பியுங்கூடநடந்தார் அந்ததேசம்விட்டு
தபால்மார்க்கமாய்வாறாரையா தம்பியுமண்ணனுமாய்
அதற்குமுன்னமேஎழுதிவிட்டார் அந்தத்தேசத்திற்கு
தேசத்தரசர்கள்வரவேஎழுதினன் டில்லிபதுரைதானும்
ஐம்பத்தாறுதேசராஜர்கள் அடங்கலும்வாரார்கள்
சுற்றிலுதுருந்தராஜதுரைகள் சூழவேவந்தார்கள்
டில்லிபட்டணமுழுதிலும்ராஜர் சூழவேவந்தார்கள்
கொலுநிறைந்தயிருந்தாரையா செஞ்சிதுரைமார்கள்
டில்லியைத்தேடிவாராரையா கோடிதுரைமார்கள்
வரிசையாகவேடில்லிபட்டணம் வந்துபுகுந்தார்கள்
டில்லிதகத்தின்முன்னேவந்தான் தேரணிமகாராஜன்
முழங்கால்மண்டிபோட்டேயவனும் முன்னேசலாமவாங்கினன்
பதில்சலாமுங்கொடுத்தானையா டில்லிபதுரைதானும்
வந்தராஜனைக்கண்ணலேகண்டு வாரும்வாருமென்றார்
சிம்மாதனத்திலிருமென்றனே டில்லிமகாராசன்
சிம்மாதனத்திலுட்கார்ந்தையா தேரணிமகாராசன்

அண்ணமாரே தம்பிமாரே ராஜதுரைமாரே
நானொருபேச்சுசொல்லுகிறேன்கேளும் ராஜதுரைமாரே
உலகத்திலில்லாதகுதிரை என்னிடம்திகைதப்பிவந்தது
ஐம்பத்தாறுதேசராஜாக்கள் அடங்கலும்வந்தார்கள்
குதிரைசவாரிசெய்யவேணும் கோடிதுரைமாரே
புரவியும்க்கினுங்கொடுக்கிறேன் புண்ணியதுரைமாரே
அந்தப்பேச்சிலேகாதிலேகேட்டார் அந்ததுரைமார்கள்
ஆனால்நல்லதாகட்டுமென்று அனைவருந்தானெழுந்தார்
தேரணிராஜனேருகிறேனென்று திடுக்கிட்டெழுந்தானும்
ஏறுகிறோமென்றுதைரியமாக எல்லோருமெழுந்தார்கள்
சந்தோஷமாகஎழுந்தராஜரை தைரியமாயப்பார்த்தார்
கலகலவென்றுசிரித்தானையா டில்லிபதுரைதானும்
இன்னொருபேச்சுசொல்லுகியறன்கேளுந்தன் துரைமாரே
புரவியைக்கண்டுபயப்பட்டீரானால் பிடித்துக்கொள்வேன் நான்
தேசியைக்கண்டுபயப்பட்டீரானால் சிறையில்போடுவேன் நான்
இந்தப்படிசம்மதியிருந்தால் எல்லோரும்வாருமென்றான்
ஆனால்நல்லதாகட்டுமென்று அனைவருந்தாமெழுந்தார்
சந்தோஷமாகவெளியேவந்தார் சகலத்தேசத்தாரும்
சிம்மாசனம்விட்டுக்கீழேகுதித்தான் டில்லிமகாராஜன்
முதல் மந்திரிராஜலிங்கனும் முன்னேநடந்தானும்
மற்றமந்திரிதந்திரிகளும் கூடநடந்தாராம்
குதிரைகொட்டடிவந்துநின்றா கோடிதுரைமார்கள்
குதிரையைசுற்றிபார்த்தாரையா கோடிதுரைமார்கள்
வந்தராசரைக்கண்ணால்கண்டது வர்ணமேகக்குதிரை
பார்த்தராசரைக்கண்ணால்கண்டது பாராசாரிகுதிரை
கடகடகடகடகடகடவென்று கனைத்துக்குதித்ததுபார்
குதிரைகனைத்தசத்தத்தினாலே கொப்பென்றுவிழுந்தார்கள்
அண்டமிடிந்துவிழுந்தாற்போல் அலறிவிழுந்தார்கள்
கோட்டையிடிந்துவிழுந்தாற்போல குப்புறவிழுந்தாராம்
முன்னேயிருந்தராஜதுரைகள் மிரண்டுவிழுந்தாராம்
பின்னேயிருந்தராஜதுரைகள் பிரண்டுவிழுந்தாராம்
தேரணிராஜன்கண்ணால்கண்டு திகைத்திருந்தானும்
தரணிசிங்குகுதிரையைக்கண்டு தலையைக்குனிந்தானும்
குதிரையைக்கண்டுபெருமூச்செறிந்தார் கோடிதுரைமார்கள்
தலையைக்குனிந்துஎதிர்நின்றார் சகலதேசத்தாரும்
எதிரில்நின்றராஜதுரைகள் ஏறிட்டுப்பார்த்தானும்
கலகலவென்றுசிரித்தானையா டில்லிபதுரைதானும்
குதிரையைக்கண்டுவிழுந்தசேதியை கூசாமல்சொல்லுங்கள்
அவ்வார்த்தையைக்காதில்கேட்டார் அந்ததுரைமார்கள்

ஐயாகேளும்மையாகேளும் தேசத்தாராஜவே
ஊரிலிருக்குங்குதிரையென்று ஓடிவந்தோமையா
தேசத்திலிருக்குங்குதிரையென்று தேடிவந்தோமையா
தெய்வதோகப்பாசாரிமேல் தேவர்களேறவேணும்
இந்தலோகத்துராசரேறினல் இறந்துபோய்விடுவார்
தப்பித்தவறிஏறிளுல் சிதைந்துபோய்விடுவார
குதிரையைப்பார்த்தால்குடல்நடுங்குது டில்லிமகாராஜாவே
தேசியைப்பார்த்தால்திக்குமுக்காடுது டில்லிமகாராசா
பாராசாரியைப்பார்த்தவுடன் பலகொடுங்கிப்போகுது
என்ன ஆக்கினை செய்தாலும்நாங்கள் ஏற மாட்டோமையா
உயிருடன்நாங்கள்தப்பிப்பிழைக்க உத்தாரந்தாருமையா
அந்தப்பேச்சைக்காதில்கேட்டான் டில்லிமகாராசன்

இராஜாக்கள் குதிரை ஏருததனல் சிறையில் அடைத்தல்
நாளெருபேச்சுசொல்லுகிறேன் கேள்கோடிதுரைமாரே
ஐந்துவருஷமென்னிடம்நீங்கள் அடிமைசெய்யவேணும்
ஏழரைவருஷமென்னிடம்நீங்கள் இருந்துபோகவேணும்
அந்தப்பேச்சையழித்தீரானல் அரசுக்கீனமையா
ஆனல்நல்லதாகட்டுமென்று அனைவரும்சம்மதித்தார்
டில்லியில்நடந்தசேதியெல்லாம் தெரியவெழுதினர்கள்
அந்தந்ததேசஓலைவந்ததை அறிந்துகொண்டார்கள்

தேசிங்குராஜன் பிறந்தது
செஞ்சியில்நடந்தசேதியெல்லாம் தெரியச்சொல்லுகிறேன்
தேரணிராஜன்போனஏழாம்நாள் செல்வன்தான்பிறந்தான்
பட்டணத்தில்பிள்ளைபிறந்தசேதியை பலருமறிந்தாகள்
பிள்ளைபிறந்துசெஞ்சிநகரம் புகழ்ச்சியடைந்தார்கள்
குழந்தைபிறந்தநாளிலக்கணம் குறிப்பையளந்தார்கள்
குறிப்பறிந்துசந்தோஷமானர் கொலுவுமந்திரிமாரும்
சந்தோஷமாகத்தானங்கொடுத்தார் சகலதேசத்தார்க்கும்
வண்டியில்சர்க்கரைவழங்கினர்கள் வந்ததேசத்தார்க்கும்
ஊருபதிகள்பிராமணருக்கு உறுதியாய்த்தான்கொடுத்தார்
நல்லநாள்பகொண்டுதொட்டிலுமிட்டார் இராஜாவுக்கானலும்
தேசிங்குபாலனென்றுசொல்லி திஷ்டிகழித்தாராம்
தேசிங்குபிறந்து இருபதுநாளில் சேதிவந்ததுபார்
சங்கதியைக்கண்டுதிகைத்தழுகிருள் தெய்வாம்பாயி
மந்திரிமாரும்செஞ்சினமும் மனதுகலங்கினர்கள்
அலண்டுபுரண்டு அல்றிவிழுந்தாள் அந்தராம்பாயி
குழந்தைமுகத்தைக்காணுமல்நீர் கொடியதேசம்போனீர்
மைந்தன்முத்தைக்கண்டுநீரும் மகிழ்ச்சியடையாமல்

இரங்கர்கிருபையிப்படியிருந்தால்நான். என்னசெய்வேனையா
ஆனால்நல்லதாகட்டுமென்று அம்மனுமேதுசெய்தால்
மைந்தன்பிறந்திசேதியெல்லாம் தெரியவேதானெழுதி
ஓலையெழுதியனுப்பினாளையா உத்தமியம்மாளும்
தோணிராசனைதேடியுமங்கே சேதிவந்ததுபார்
சேதிகளைகேட்டுதிகைத்து நின்றார்தோணிமகாராசன்
ஓலையைக்கண்டுஒதுங்கிநின்றார் தோணிமகாராசன்
இரங்கரைநோக்கிவிசனமடைந்தான் நல்லமகராஜன்
ஆனால்நல்லதாகட்டுமென்று அங்கேதானிருந்தார்
செஞ்சியிற்பிறந்ததேசிங்குபாலன் சேதியைசொல்கிறேன்கேள்
பாலன்பிறந்தமூன்றும்மாதம் பதைத்துவிழுந்தானும்
குழந்தைபிறந்தஏழாம்மாதம் குலுக்கிவிழுந்தானும்
தொட்டிலைவிட்டுக்கீழேயிறங்கி துள்ளிவிழுந்தானும்
தங்கத்தொட்டிலைஎட்டியுதைத்து தரையில்குதித்தானும்
பத்தாம்மாதம்தவழ்ந்துநடந்தான் பலருமறியவேதான்
தாய்மடியில்வந்துவிளையாடி தகப்பனெங்கேயென்பான்
பள்ளிக்குப்போய்படிக்கயெடுக்க பாலனுமறிந்தானும்
கூடியிருந்துதுரைகளுடன் குதிரையேறிபோவான்
காடுமலைகள்செடிகளெல்லாம் கலங்கவடிப்பானும
குதிரைஏறிசவாரிசெய்து கோட்டையில்வருவானும்
இரங்கரைகண்டுபூசைகள்செய்து நலமாய்வருவானும்
தாயாரெடுதுமடியில்வைத்து சாந்திகழிப்பாளாம்
முக்கனிசக்கரைபாலமுதுடன் முன்னேயூட்டுவாளாம்
கொஞ்சிகொஞ்சிசாப்பிடுவானையா குழந்தைதேசிங்கு
சாப்பிட்டிளைப்பாறிவெளியேவந்து சண்டைசெய்வானும்
கூடப்படித்தமோரவுத்துக்காரனைக் கூப்பிட்டழைப்பானும்
இருவருங்கூடிகுதிரையேறியே எங்குந்திரிவாரும்
காடுமலைகள்செடிகளெல்லாம் கலங்கவடிப்பாராம்
புலிகரடிசிங்கத்தைக்கண்டால் புகுந்துவெட்டுவாராம்
வேட்டையாடிவெளியில்வந்து வெற்றிகொண்டோமென்பார்
சங்கராபாணிக்கரையிலிருந்து தாண்டிக்குதிப்பாராம்
ஒருவருக்கொருவயர்ந்தபேடையு துதும்பிகுதிப்பாராம்
சையதுசாயபுவைசலாம்செய்து தாண்டிவிழுவார்கள்
மண்டிகள்போட்டுமலைகளைத்தூக்கி வாரியடிப்பாராம்
மலைகளை ஓங்கிக்குத்தினாரானல் யருந்தபுகைகிளம்பும்
செடிகளைஓங்கித்தினாரானல் சிதைந்துமுறிந்துபோகும்
பத்துபனைமரமுயரக்கிளம்பி பல்டியடிப்பாராம்
மூச்சுபிடித்துக்கிளம்பிவிழுந்தார் மூன்றரைநாழிகைநேரம்
ஆகாயமாககமந்தர்பல்டி அடித்துவிழுவாரம்

குன்றுகளேறிக்குத்தாரானல் குதிரைப்பள்ளமாகும்
பனைமரங்களைத்தூக்கியெடுத்து பந்துசெண்டாடுவார்கள்
தேறித்தெளிந்தான் வித்தைகளாடி தேசிங்குமகிபாலன்
ஆடியலண்டுகோட்டையில்வந்தான் அந்தப்பாலகனும்
தாயாண்டைவந்துபசிக்குதென்று தள்ளாடிவிழுவானும்
தாயாரெடுத்துமடியில்வைத்து சாந்திகழிப்பாளாம்
முக்கனிசர்க்கரைபாலமுதுடனே முன்னேவூட்டுவாளாம்
சாப்பிட்டிளைப்பாறித்தாயார்முகத்தைத் தனியேபார்ப்பானும்
அம்மாளுகேளும்அம்மாகேளும் என்னைபெற்றதாயே
உன்னிடமனதில்என்னவிசனம் ஒளியாதுசொல்லென்று
ஊரிலிருக்கும்பிள்ளைகளுக்கு உதவிமெத்தவுண்டு
தாயுந்தகப்பனுமிருக்கிறாரம்மா தாயேபெற்றவளே
என் தாயாரிருக்கஎன் தகப்பன் எங்கேஎன்றுகேட்டான்
ஜல்தியெனக்குத்தெரியசொல்லும் தாயேபெற்றவளே
அந்தப்பேச்சைகாதிலேகேட்டாள் அவனைபெற்றதாயும்
வாரியெடுத்துமடிமீதில்வைத்து மகனைமுத்தமிட்டாள்
உச்சிமுகந்துதிருஷ்டிகழித்தாள் உத்தமிபெற்றவளும்
கண்ணேமணியேரத்தினமேயென் கருவிளமேகேளாய்
ஐம்பத்தாறுதேசராஜர்க்கும் அதிபதிதுரைதானும்
டில்லியிருக்கும்பெரியபாஷா சேதியனுப்பினாராம்
சேதியறிந்துஉன்னிடதகப்பன் தோரணிமகாராஜன்
தம்பிதரணிசிங்குராஜனைத் தனியேயழைத்தாராம்
இருவருங்கூடிபோனாரயைா எந்தன்கண்மணியே
போனவிடத்தில்புரவியொன்று புதிதாய்வந்ததுவாம்
தெய்வலோகத்துபுரவிஏறவே சேதிகள்சொன்னாராம்
ஏறுவோமொன்றுதைரியமாக எல்லோரும்வந்தாராம்
கண்ணுற்கண்டடில்லிபதுரையும் கடினமாகச்சொன்னா
ஏறாமல்போனல்ஏழுவருஷம் இடுவேன்சிறையிலென்றார்
புரவியைப்பார்த்துபயந்தீரானல் போடுவேன்சிறையிலென்றார்
ஆனல்நல்லதாகட்டுமென்று அனைவரும்சொன்னாராம்
அந்தப்படியேசத்தியம் பண்ணி அனைவரும்போனாராம்
குதிரையைச்சுற்றிப்பார்த்தவுடன் பதைத்துவிழுந்தாராம்
முன்னேயிருந்தராஜதுரைகள் மூர்ச்சையாய்விழுந்தாராம்
பின்னேயிருந்தராஜதுரைகள் புரண்டுவிழுந்தாராம்
மூர்ச்சைதெளிந்தராஜதுரைகள் முன்னேஓடிவந்தார்
இந்தக்குதிரைஏறினோமானல் இறந்துபோய்விடுவோம்
ஏழுவருஷம்சிறையிலிருந்து எங்களுருபோரேம்
அந்தப்பேச்சைக்காதிலேகேட்டார் டில்லிபதுரைதானும்
ஆனல்நல்லதகாட்டுமென்று அருஞ்சிறைவைத்தானும்

ஐந்துவருஷஞ்சென்றதுபாரு அருமையானமகனே
இன்னமிரண்டுவருடஞ்சென்றால் நிமிஷமிருக்கார்கள்
அந்தப்பேச்சைகாதில்கேட்டான் அலரும்சிங்கம்போல
பல்லைபடபடவென்றுகடித்து பதறியெழுந்தானும்
கண்கள்நெருப்புப்பொறிபறக்க கனைத்தெழுந்தானும்
தாயைச்சுற்றிவலமாகவந்து சரணங்கள்செய்தானும்
கும்பிட்டெழுந்தஎதிரில்நின்று கூசாமற்சொல்லுகிறான்
எனக்குநல்லவரந்தாவேணும் என்னைப்பெற்றதாயே
சல்தியென்னையனுப்பிவிடவேணும் தாயேபெற்றவளே
அனுப்புமென்றசேதிகேட்டு அலறிவிழுந்தாளாம்
இனியென்னசெய்வேன்கண்மணியென்று ஏங்கிவிழுந்தாளாம்
போகிறேனென்றசெய்தியைகேட்டு பூமியில்விழுந்தாளாம்
மகனிடகோபமறிந்துதாயார் மண்மேல்விழுந்தாளாம்
கைகளைநெறித்தவயிற்றைப்பிசைந்துகண்ணீர்சொறிந்தாளாம்
பூமியில்விழுந்தமூர்ச்சையானல் புண்ணியராமபாயி
இங்கிருந்தாளனுப்பமாட்டாள் என்னைப்பெற்றதாயும்
பூமியில்விழுந்ததாயைப்பார்த்து பின்னிட்டு நடந்தானும்
சங்கராபரணியில்ஸ்நானம்பண்ணி சல்தியோடிவந்து
இரங்கர்கோயில்புகுந்தானையா இராஜாதேசிங்கு
இரங்கரைச்சுற்றிவலமாகவந்தான் இராஜாதேசிங்கு
கும்பிட்டெழுந்தஎதிரிலநின்றான் குழந்தைதேசிங்கு
சவாரிசெய்யடில்லிக்குபோகிறேன் சுவாமிரங்கநாதா
கூடவிருந்துசவாரிசெய்து கொண்டுதிரும்புமையா
உன்குழந்தைநானூருக்குப்போகிறேன் உடனேவாருமையா
சல்திசல்திவாருமையா சுவாமிரங்கநாதா
அந்தப்பேச்சைகாதிலேகேட்டார் ரங்கநாதஸ்வாமி
ஆனல்நல்லதர்கட்டும்வருகிறேன் அருமைக்கண்மணியே
போய்விட்டுவாடாபோய்விட்டுவாடா புத்தியுள்ளமகனே

### தேசிங்குராஜனும் மோவுததுகாரனும் டில்லிபட்டணம் வருதல்

அந்தப்பேச்சைகாதிலேகேட்டு அடிபணிந்தானும்
கும்பிட்டெழுந்துவெளியில்வந்தான் குழந்தைதேசிங்கு
அண்ணாவாடாதம்பிவாடா மோவுத்துகாரா
மோவுத்துக்காரனைகூப்பிட்டழைத்து முன்னமேதுசொல்வான
தெய்வலோகத்துப்புரவியொன்று டில்லியிலிருக்குதாம்
எனதுதகப்பன்தேரணிராஜன் அங்கேயிருக்கிறாராம்
குதிரையேறிசவாரிசெய்து கொண்டுவரவேணும்

சல்திசல்திபுறப்படுமென்றான் மோவுத்துக்காரனை
ஆனால்நல்லதாகட்டுமென்று அதட்டிஎழுந்தானும்
கொட்டடிசென்றுகுதிரையை யிரண்டுகொண்டுவந்தானும்
வழிசெலவுக்குகானலட்சம்பொன் மடியில்வைத்தானும்
சல்தியாகவேகொண்டுநிறுத்தினான் தபால்குதிரைகளை
குதிரையைக்கண்டுசந்தோஷமானான் குழந்தைதேசிங்கு
அரிகரியென்றுதட்டியேறினா ரிருவருமப்போது
ஏறினவுடனேவெள்ளிக்குறடா எடுத்துஅடித்தார்கள்
அடித்தவுடனேஐந்துநாள்பயணம் அதிரநடந்ததுபார்
பத்துநாளையிலேவந்துசேர்ந்தார் பாலரிருவருந்தான்
டில்லிசேர்ந்துதெருவில்நடந்தார் தேசிங்குபாலகனும்
கோட்டைகொத்தளம் தாண்டிவாரான்குழந்தைதேசிங்கு
சிங்காரளிகையில்வந்துசேர்ந்தான் சிங்கக்குட்டிபோல
அவ்வேளையிலென்னசெய்கிறான் டில்லிபதுரைதானும்
தங்கத்தகதிலிருந்தேயரசு தனிமையாய்செய்கிறாராம்
பொன்னின்தகத்திலிருந்தேயரசு பெருமையாய்ச்செய்கிறாராம்
சுற்றிலுமிருந்தராஜதுரைகள் சூழவிருந்தாகள்
நற்புத்தியுள்ளமந்திரிமாரும் நடுவேயிருந்தார்கள்
ஐம்பத்தாறுதேசராஜரும் அருகில்இருந்தார்கள்
சிறையிலிருக்கும்ராஜதுரைகள் சேரவிருந்தார்கள்
தோரணிராஜன்தரணிசிங்குமே சேரவிருந்தார்கள்
கொலுநிறைந்தராசதுரைகள் கொல்லென்றிருந்தாகள்
அநதசமயம்வந்துநின்றான் அலருஞ்சிங்கமபோல
பாலசூரியனுதித்ததுபோல பளிச்சென்றுசார்ந்தானும்
கோடிசூரியனுதித்ததுபோல குப்பென்றுசார்நதானும்
வானத்திலிருக்கும்சூரியனைப்போல் வந்துநுழைந்தானும்
நிறைந்கொலுவிருக்கும்துரைகள் சட்டென்றெழுந்தாராம்.
தகத்திலிருக்கும்டில்லிபதுரை தானுமெழுந்தானும்
எழுந்தராஜரைக்கண்ணாலேகண்டான் இராஜாதேசிங்கு

### தேசிங்குராஜனும் மோவுத்துக்காரனும் டில்லிபதுரையைக் கண்டது

சலாமையாசலாமையா டில்லிபதுரையேகேள்
உன்தேசதிலுயாந்தபுரவி யுன்னண்டையிருக்குதாம்
பாராசாரியைசவாரிசெய்ய பாலன்வந்தேனென்றான்
ஏறிசவாரிசெய்வதற்காக இங்கேவந்தேனென்றான்
புரவியேறிசவாரிசெய்துநான் போகவேணுமென்றான்
வானமிடிந்துவிழுந்தாற்போல மைந்தனுஞ்சொல்லிகின்றான்
அண்டமிடிந்துவிழுந்தாற்போல அவனும்கூறிகின்றான்

சொன்னசொல்லைகாதிலகேட்டான் டில்லிபதுரைதானும்
சுற்றிலுமிருந்தராஜதுரைகளைச் சுற்றியேபார்த்தானும்
சித்திரபதுமைபோலேயிருக்கிறார் தேசராசரெல்லாம்
ஒருவர்முகத்தைஒருவர்பார்த்தே ஒதுங்கியிருந்தார்கள்
டில்லிபதுரைகண்ணாலேகண்டு சேதிசொல்லலுற்றார்
எதிரிலிருக்கும்தேசிங்குபாலனை ஏறிட்டுப்பார்த்தானும்

டில்லிபதுரை தேசிங்குராஜனுடைய வளப்பத்தைக் கேட்டல்

மன்மதன்போலகுழந்தையை மண்மேற்பார்த்தானும்
ஐயாகேளும்மையாகேளும் அறியாதபாலகனே
எந்ததேசத்திலிருந்துநீயும் தேடியேவந்தாயப்பா
உந்தனூரும்பேரும்நாடு மூன் தகப்பன்பேரும்
குலமாய்பெற்றதாயின்பேருஞ் சல்திசொல்லுமென்றான்
அவ்வார்த்தையைகாதில்கேட்டா னலருஞ்சிங்கம்போல
சொல்கிறேன்கேள்சொல்கிறேன்கேள் டில்லிபதுரையே
தெற்கேவெகுதூரமிருக்குதுபாரு செஞ்சிகோட்டைநகரம்
செஞ்சிகோட்டையாளும்ராஜன் தேரணிமகாராஜன்
தேரணிராஜன்குமாரன்நான் தேசிங்குமகிபாலன்
சிற்றப்பதுரைதரணிசிங்குமே சிறையிலிருக்கிறாராம்
குதிரையேறவலுவில்லாமல் கொலுவிருக்கிறாராம்
குதிரைஏறிசவாரிசெய்துநான் கொண்டுபோகவந்தேன்
சல்திசல்திகுதிரைகொண்டுவாரும் டில்லிபதுரையேநீர்
கொல்லுஞ்சிங்கக்குட்டியைப்போல் சீறிநின்றானும்
அந்தச்சொல்லைகாதில்கேட்டான் டில்லிமகாராஜன்
தேரணிராஜன்காதிலேகேட்டு தேடியேவந்தானும்
சிற்றப்பதுரைதரணிசிங்குமே தேடியோடிவந்தார்
வாரியெடுத்துமடிமீதில்வைத்து மகனைமுத்தமிட்டார்
சந்தோஷமாகதழுவியெடுத்து திருஷ்டிகழித்தாரம்
சேர்த்துதழுவிமகனையெடுத்து திருஷ்டிகழித்தாராம்
ஐம்பத்தாறுதேசராஜாக்கள் அதிசயப்பட்டாராம்
டில்லிபதுரையும்சந்தோஷமாக சேரஓடிவந்தார்
கண்ணேமணியேரத்தினமேஎன் கருவிளமேகேளாய்
என்மகனைக்கண்டுநானும் மகிழ்ச்சியடையாமல்
உந்தன்சொல்லைக்கேட்டுநானும் உள்ளமகிழ்ந்தேனே
பெற்றதாயுமுன்னைபிரிந்து பின்னுயிர்வைப்பாளா
அரசனைக்கேட்டுசெஞ்சிக்குப்போவோம் வாரும்கண்மணியே
மனுவுகேட்டுவருகிறேனப்பா வாருங்குழந்தையென்றான்
அந்தப்பேச்சைக்காதிலேகேட்டான் அழகுபாலகனும்
கலகலவென்றுசிரித்தெழுந்தான் கதம்பும்சிங்கம்போல
ஐயாகேளுமையாகேளும் என்னைப்பெற்றராஜாவே

குதிரையைக்கண்டுபயந்துநீங்கள் கொடியசிறையிருந்தீர்
பாராசாரியைப்பார்த்துபயந்து பாரசிறையிருந்தீர்
ஏறிசவாரிசெய்துநானுமிப்போ இட்டுபோகிறேன்பார்
குதிரையேறிசவாரிசெய்து கொண்டுபோவேனென்ருன்
சற்றுநேரத்தில்சவாரிசெய்து சிறைமீட்டும்போறேன்
போகாமற்போனுலுன்வயிற்றி் பிறந்ததென்னத்திற்கு
அந்தவார்த்தையைக்கால்கோட்டு அலறிவிழுந்தாராம்

தேசிங்குராஜன் குதிரையேறுதல்

கனைத்துகதும்பிவெளியில்வந்தான காளைசிஞ்கம்போல
குதிரையிருக்குங்கொட்டடிதேடி குதித்தோடிவந்தான்
ஓடிவருகிறராஜரைக்கண்டு உதும்பியெழுந்ததுபார்
கோட்டையிடிந்துவிழுந்தாபோல குலுங்ககனைத்ததுபார்
நாற்றிசையிலுங்கலங்கியங்கே நடுக்கங்கொண்டதுபார்
ஐம்பத்தாறுதேசராஜாக்கள் அதிர்ந்துவிழுந்தார்கள்
குழந்தைகுழந்தையென்றுசொல்லி கூவியழுதார்கள்
டில்லிபதுரைதேரணிராஜனும் திகைத்துவிழுந்தார்கள்
விழுந்தவுடனேகுழந்தையென்று தேடியேவாருர்கள்
கனைத்தகுதிரையைக்கண்ணுலேகண்டு கடுகஓடிவந்தான்
குதிரையைதட்டி சலாம்வாங்கினன் கொல்லுஞ்சிங்கம்போல
அண்ணவாடா தம்பிவாடா மோவுத்துக்காராநீ
கால்கயிற்றைக்கழுத்துகயிற்றை கடுகஅவிழுமென்ருன்
அந்தசொல்லைகாதில்கேட்டான் மோவுத்துக்காரனும்
சொன்னவுடனேசல்தியாகவே சுருக்காயெழுந்தானும்
தங்கத்தாலேசீனிபோட்டு தடவிக்கொடுத்தானும்
அந்தக்குதிரையைக்கண்ணுலேகண்டு அகமுமகிழ்ந்தானும்
அரிபரந்தாமாவென்று அலறியேயெழுந்தானும்
கோவிந்தாஸ்ரீகிருஷ்ணுவென்று கும்பிட்டெழுந்தானும்
பாராசாரியைசலாம்வாங்கி பாய்ந்தேறினனும்
புலிக்குட்டிபோல்பாய்ந்தவனும் புரவியேறினனும்
ஏறினவுடனேபாராசாரி என்னசெய்யுதுபார்
தடதடவென்றுதவிக்குதுபார் அந்தகுதிரைதானும்
கிடகிடவென்றுகிளம்பிகுதித்தது அந்தகுதிரைதானும்
லகானிழுத்துக்கையிலேபிடித்தான் இராஜாதேசிங்கு
ஐயாகேளுமையாகேளு மென்னைப்பெற்றவரே
புரவியேறிச ாரிபோறேன் பெற்றவரேஐயா
தப்பித்தவறிவந்தேனுனல் தழுவிக்கொள்ளுமையா
இன்றைக்குஞ்சாவுநாளைக்குஞ்சாவு இருக்குதுதலைமேலே
ஒன்றுக்குநீஅஞ்சவேண்டாம் உறுதிகொள்ளுமையா
சொன்னசொல்லைக்காதில்கேட்டார் தேசராஜாக்கள்

ஐம்பத்தாறுதேசராஜரு மடங்கலுங்கேட்டார்கள்
மகனேஎன்னசெய்வோமென்று வயிற்றைப்பிசைந்தார்கள்
போகாதேபோகாதேமகனே புரவிகொண்டுபோமே
இந்தலோகத்துப்புரவியல்லவே எந்தன் கண்மணியே
உயிருடனுன்னைவிட்டுப்பிரிந்து உலகத்திலிருப்போமோ
பிறந்தபோதேயிறந்துபோனல் பெரியதுக்கமில்லை
ஐந்துவருஷம்வளர்த்தமாதா அலைந்துமேபோவாள்
குதிரையைவிட்டுக்குதித்துவாடா குழந்தையென்மகனே
என் னுயிர்பூமியிலேதரித்திருக்க இறங்கிவாசுதனே
அந்தப்பேச்சைகாதிலேகேட்டான் அதிரூபதேசிங்கு
கலகலவென்றுசிரித்தானையா கதும்பும்புலிபோல
இங்கேயிருந்தாலென்னகவலை என்னவாகுமோதான்
கோவிந்தாகோவிந்தவெனக் குதிரையைத்தட்டிவிட்டார்
அரிஅரிஸ்ரீமுகுந்தாவென்று அசுவத்தைத்தட்டிவிட்டார்
தட்டினதட்டில்குதிரைகிளம்பி தரையில்நில்லாமல்
ஆகாயமார்க்கம்வந்துபாயுது அந்தமேகக்குதிரை
சூரியன்போலதுலங்குதுபாரு சொர்னமேகக்குதிரை
கண்கண்டதூரம்பார்த்துராஜர்கள் கலங்கிநின்றார்கள்
பாய்கிறகுதிரையைக்கண்ணால்கண்டு பரதவித்திட்டார்கள்
மேகம்மண்டலமாளாயிருவதைப் பார்த்தான்தேசிங்கு
லகானையிழுத்துசிமிட்டாகொடுத்தான் ராஜாதேசிங்கு
சிமிட்டாகொடுத்தவேகத்தினலே சீறிப்பாய்கிறது
கோபம்வந்துமூண்டுகொண்டது ராஜாவுக்கானலும்
காடுமலைகள்செடிகளெல்லாம் கலங்கிநடுங்கிடவே
குலைகளிடிந்துதவிடுபொடியாய் மண்மேல்விழுந்திடவே
குன்றுமலைகள்தாண்டிகுதிரை குதித்துப்போகிறதாம்
குன்றுகளெல்லாம்பொடி பொடியாககுலுங்கிவிழுந்ததுபார்
குதிரைபோகும்வேகத்தாலே குன்றுமலைகளெல்லாம்
குப்பெனஐங்காதவழியும் கொண்டுபோகிறதாம்
ஆறுகுளங்கள்மடுக்களெல்லா மதிரநடுங்குதுபார்
ஐங்காதவழிக்கப்புறமிருக்கிறது அந்தமேகக்குதிரை
குதிரைதட்டிவயேகத்தாலே குழந்தைதேசிங்கு
குலுங்கநகைத்துச்சிமிட்டாகொடுத்தான் குதிரைக்கானலும்
நிமிஷநாழிகைக்குஐந்துகாதம் நிலையாய்ப்பறக்குதுபார்
ஊரைச்சேர்ந்தகாடுமலைகள் ஒடுங்கிநடுங்குதுபார்
குன்றிலிருக்கும்சிங்கம்யானை குலுங்கநடுங்குதுபார்
தேசத்திலிருக்கும்ஜனங்களெலலாம் திரண்டுநடுங்குதுபார்
ஐந்நூறுகர்தம்பஞ்சபுரவி ஆகாயம்போகுதுபார்
அசுவம்போகும்வேகத்தாலே மலையுதுலகமெல்லாம்
மேகம்கிளம்பிவாயைத்திறந்து மின்னல்கக்குதுபார்


மின்னல்வெளிச்சந்தன்னில்பாயுது வேகமானகுதிரை
தேவர்களெல்லாம்மனதுபயந்து திகைத்திருந்தார்கள்
இருந்தவிடத்தைவிட்டேயவர்க ளிறங்கியோடிவிட்டார்
உயாந்தமண்டலம்போட்டேவர்கள் ஒதுங்கிஓடினார்கள்
வடக்கேவெகுதூரம்மகமேருசாரல் வந்துபாய்ந்தது
குதிரைபோகும்வேகத்தாலே பூமிகுலுங்குதுபார்
பர்வதங்கள் படபடவென்று பதறிநடுங்குதுபார்
அங்கிருந்தேகுதிரையைததிருப்பினான் அந்தப்பாலகனும்
தெற்கேமைநாகபர்வதத்தைத் தேடியேபாயுதுபார்
இலங்கையைநான்குசுற்றாகவே நடத்திக்கொண்டுவாரான்
பூமியிலுள்ளஜந்துகண்களில் பொறிபறக்குதுபார்
வானத்திலிருக்கும்மேகபந்திகள் மதிமயங்குதுபார்
மேற்கேவெகுதூரம்கிளம்பி மேலண்டைகொண்டுவாரான்
ஐந்துநாளுமிராப்பகலாக அதிரவேகொண்டுவாரான்

குதிரை தேசிங்குராஜனை மோசஞ்செய்ய நினைத்தது

பாராசாரிமனகலங்கிப் பார்த்துகிமிர்ந்ததுபார்
என்னுயிர்வாங்கயிந்தபாலகன் எங்கேஜென்மித்தானோ
இங்கேயிருந்தாலிரண்டுநாழியில் இறக்கவடிப்பானே
பூமியிலிருந்தால்ஜீவனிப்போ போய்விடும்பிரிந்து
உற்பாதபிண்டம்தேசிங்குபாலன் ஓட்டிக்கொல்வானே
சிவ்வென்றெழும்பிபாராசாரியம் தெய்வலோகம்போகுதுபார்
ஆகாயமட்டும்கிளம்பிப்போகுது அந்தமேகக்குதிரை
புரவிபோகும்வேகமறிந்தான் புலிக்குட்டிதேசிங்கு
தெய்வலோகந்தன்னிலடக்க தேடிப்போகுதென்று
லகானிழுத்துச்சிமிட்டாகொடுத்தான் இராஜாதேசிங்கு
இடதுகாலுக்டிரண்டுசிமிட்டா இடுக்கிக்கொடுத்தானும்
சிமிட்டாகொடுத்தவேகத்திலே திகைத்துநின்றபோது
இடித்தயிடியில்மனதுகலங்கி இருந்துமேஆடுதுபார்
ஆகாயமார்க்கந்தத்தளிக்குது அந்தமேகக்குதிரை
அந்தநாட்டையிந்தநாட்டை அசையாமலேயிடித்து
நாலுதிக்குந்திரும்பிப்பார்த்தான் இராஜாதேசிங்கு
ஊருபதிகள்நாடுகளெல்லாம் ஒன்றுந்தெரியவில்லை
அனனம்புசித்தைந்துநாளாயிற்று அறியாதபாலகனும்
ஆகாயம்பூமிஒன்றாகஇருப்பதை அறிந்தான்பாலகனும்
கண்கள்வந்துசூழ்ந்தவுடனே கண்டுமேதுசொல்வான்

தேசிங்குராஜன் ஸ்ரீரங்கநாதரை நினைத்தல்

கடிவாளத்தைக்கெட்டியாயப்பிடித்து கவிழ்ந்து படுத்தானும்
குதிரைகயிற்றைக்கெட்டியாய்ப்பிடித்து குப்புறப்படுத்தானும்



அரிகரிபரந்தாமாவென்று அலறியழுதானும்
கோவிந்தாஸ்ரீகிருஷ்ணுவென்று கூப்பிட்டழுதானும்
ஆபத்பாந்தவா அனுதரட்சகா ஆதிமூலபொருளே
அடியேனைவந்தரட்சியுமையா இரங்கநாதவென்று
அலறியழுதகவிழ்ந்துபடுத்தான் அந்தக்குதிரைமீதில்
கண்ணைமூடிக்குகவிந்துபடுத்தான் இராஜாதேசிங்கு

## ஸ்ரீரங்கநாதர் தேசிங்குராஜனிடத்தில் வந்தது

அழுதவுடனே ஸ்ரீரங்கநாதர் அருகில்வநதுநின்று
கடிவாளத்தைக்கையிற்பிடித்து கன்னத்திலறைந்தாராம்
குழந்தையைகொண்டாகாயமாற்றம் கொல்லநினையாதே
இன்றையவரை லாகாயமாற்கம் எழும்பிப்போகாதே
கூடஇருந்துதேசிங்குபாலனை கொலுவில்கொண்டுவாரும்
கொஞ்சநாளையில் சண்டைநேரம் குழந்தைக்காணுலும்
சண்டைமுனையில்மோக்ஷமுனக்கு சல்திதாரேமென்றார்
குழந்தையுடனேமோக்ஷமுனக்கு கூடதாரேமென்றார்
அந்தமொழியைக்காதிலேகேட்டு அடிபணிந்ததுபார்
சந்தோஷமாகராஜனைக்கண்டு சாஷ்டாங்கமாகுதுபார்
சேதிகள்சொல்லி ஆகாயமார்க்கம் சேரகொண்டுவந்தார்
டில்லிககுநேரேகொண்டு நிறுத்தினர் தேசிங்குபாலகனை
குழந்தைஎடுத்தகுதிரைமீதில் கூசாமலேவைத்தார்
அஸ்தம்படவேகளைதெளிந்து அதட்டியேயெழுந்தார்
களைதெளிந்துகண்ணைவிழிந்து காத்தனைப்பார்தானே
பார்த்தவுடனே ஆனந்தமாகப் பதறியழுதானும்
ஆபத்பாந்தவா அனுதரட்சகா ஆதிமூலமேநீ
அடியேனைவந்தரட்சித்தீரே ஐயாரங்கநாதா
அந்தவார்த்தையைக்காதில்கேட்டு இரங்கநாதசுவாமி
கண்ணேமணியேரத்தினமேயென் கருவிளமேகேளாய்
டில்லிகுநேரேயிருந்துபாரு தெய்வலோகபுரவி
குதிரையிறங்கி சந்தோஷமாகக் கோட்டைக்குவாருமென்று
போய்வாரேனிப்போபோய்வாரேனிப்போ புத்தியுள்ளமகனே
ஆனல்நல்லதாகட்டுமென்று அடிபணிந்தானும்
பணிந்தவுடனே மாயமாய்ரங்கர் பரவியிருந்தாராம்

## தேசிங்குராஜன் குதிரையை டில்லியிற் கொண்டு வந்திறங்கியது


போனவுடன் தேசிங்குபாலன் புரவியையென்ன செய்தான்
மெள்ளசிமிட்டா கொடுத்தானே மெதுவாய்வாரனே
கலகலகலகலகலகலவென்று கனைத்துவருகுதுபார்
கனைத்தசத்தத்தைக்காதில்கேட்டார் கன்னடதேசத்தார்
ஐம்பத்தாறுதேசராஜரும் ஆகாயமே பார்த்தார்

சூரியனைப்போற்றுலங்கிவருகுது சொர்னமேகக்குதிரை
சந்திரனைப்போலதகதகவென்ன சாரிவருகுதுபார்
வருகிறபாலனைக்கண்ணுல்கண்டு மகிழ்ச்சியடைந்தார்கள்
தோணிராசனும்டில்லிபதுரையும் ஓடிதேடி வந்தார்
ஆனந்தக்கண்ணீரபுட்பமாரியால் அலறியழுதார்கள்
சந்தோஷம்வந்துமூண்டுக்கொண்டது சகலதேசத்தார்க்கும்
அந்தச்சமயத்தில்வந்துநிறுத்தினன் அந்தப்பாலகனும்
பாராசாரியைக்கொண்டு நிறுத்தினன் பாலசூரியன்போல்
நிறுத்தினவுடனேபுட்பமாரி நிலையாய்பொழிந்தாராம்
தேவரெல்லாம்சந்தோஷமாகத் தேன்மாரிபொழிந்தாராம்
தேரனிராஜன் தரணிசிங்கும் தேடிவோடிவந்தார்
வந்தமகனைகண்ணுலேகண்டு வாரிஎடுத்தாராம்
வாரிஎடுத்துமடிமீதில்வைத்து மகனைமுத்தமிட்டார்
தேசிங்கிபாலனைமடியில்வைத்து திருஷ்டிகழித்தாரும்
சந்தோஷமாகமகனையெடுத்து சாந்திகழித்தாரும்
ஐம்பத்தாறுதேசராஜரும் அலாத்தியெடுத்தாரும்
மங்களம்பாடிவதைத்திஎடுத்த மைந்தனைமுத்தமிட்டார்
டில்லிந்துவரையுந்தேசராஜரும் சேரவேவோடிவந்தா
முழங்கால்மண்டியிட்டவர்கள் முன்னேசலாம் செய்தார்
ராமுராமுரேசிதாராமுரே இராஜாதேசிங்கு
பதில்சாலமுங்கொடுத்தானையர் பாலனெழுந்திருந்து
ஊருங்குடித்தனமுமாகவந்து உகந்துசலாஞ் செய்தார்
கையமர்த்திமரியாதைசெய்தான் காளைகுழந்தையவன்
குதிரைக்குவேண்டியபுல்லுந்தண்ணீர் கூசாமலேவைத்தார்
சபையில்வந்துநிறைந்துகொண்டார் சகலதேசத்தாரும்

டில்லிராஜன் தேசிங்குராஜனுக்கு வெகுமதி கொடுத்தது

டில்லிபதுரையுந்தேசிங்குராஜனை சேர்த்தணைத்தெடுத்து
உயர்ந்தசிம்மாதனத்தில்வைத்து ஒதுங்கிபக்கம் நின்றூர்
அண்ணுவாடாதம்பிவாட இராஜலிங்கபாபு
பத்துகளஞ்சியபணத்தையெடுத்து பகுதிகட்டுவென்றூர்
குதிரையாயிரமானையாயிரம் கொண்டுநிறுத்துமென்றூன்
கணக்கில்லாதசேனைகளத்தை கடுகநிறுத்துமென்றூன்
தேசிங்குக்கேற்றமாணிக்கவுடுப்பு தேடிக்கொண்டுவாரும்
மாணிக்கமாலைமுத்தாரங்கள் வரிசைகொண்டுவாரும்
தெய்வலோகத்துபாராசாரியை தேடிகொண்டுவாரும்
தேசத்தார்க்குவெகுமதிசெய்ய தேடிகொண்டுவாரும்
நாண்ஏறும்புரவிநீலவேணியை தூரத்திவாருமென்றூன்
அந்தவார்த்தையைக்காதில்கேட்டான் இராஜலிங்கபாபு
சொன்னநாழிகைககுதயாராச்சுது சூழ்ந்தகொலுவினிலே

தயாரானதைகண்ணாலேகண்டு டில்லிபதுரைதானும்
முத்தாரமுக்ரத்னாமும் முன்னேகட்டிபோட்டான்
தேசிங்குக்கரியவெகுமதியெல்லாம் சேர்த்துகொடுத்தானும்
மோவுத்துக்காரனைகண்ணால்கண்டு முன்னேஓடிவந்தான்
அவரவர்க்குரியவெகுமதியெல்லாம் சேர்த்துகொடுத்தானும்
தேசிங்கருகிலிருக்கும்மவனை திருஷ்டித்துப்பார்த்தானும்
முத்தாரங்கள்ரத்னாரங்கள் கழுத்திற்போட்டானும்
அவனுக்கேற்றவெகுமதியெல்லா மங்குகொண்டுவந்தான்
ஐயாகேளும்மையாகேளும மோவுத்துக்காரனே
நானேறும்புரவிநீலவேணிமேல் நீயேறவேணுமென்றான்
ஐம்பத்தாறுதேசத்திலுள்ள அரசருமேறமாட்டார்
ஏறினால்நீயேறவேணும் என்னென்றுநீகேளாய்
உன்னூரத்தறிந்துஇனமாக உனக்குத்தந்தேனென்றான்
ஆனால்நல்லதாகட்டுமென்று அவனும் ஒத்துக்கொண்டான்
தேசிங்குபாலனைக்கண்ணால்கண்டு சேதிஎன்னசொல்கிறார்
ஐம்பத்தாறுதேசராசர்க்கும் அதிபதிநன்றானே
எனக்குமிஞ்சின அதிபதியாக இருந்தரசுசெய்யும்
என்மகள்ராணியம்மாளை இங்குதந்தேனென்றான்
கலியாணம்செய்வரசுமுகத்தை கார்த்துகொள்ளுமென்றார்
எப்போதிஷ்டமோ அப்போகலியாணம்செய்துபோகவென்றான்
நீ—இட்டவேளையைதலையாள்செய்ய நிச்சயமாகவையா
அவ்வார்த்தைக்காதிலேகேட்டா னறியாதபாலகனும்
கோவிந்தாகோவிந்தாவென்று குப்பென்றெழுந்தானும்
டில்லிபதுரையைச்சேர்த்தணைத்து சேதிசொல்லுகிறான்
ஐயாகேளுமையாகேளும் டில்லிபதுரையேநீர்
சமஸ்தானத்தையறியாதவனும் தாங்குவேனேஐயா
செஞ்சியைவிட்டாறுமாதமாச்சு சிலவுதாருமையா
அந்தமொழியைகாதில்கேட்டான் டில்லிபதுரைதானும்
வாரியெடுத்துமார்மீதணைத்து வர்ணமுதசமிட்டான்
அந்தமொழியைகாதில்கேட்டான் தேரணிராஜனும்
ஐயாகேளுமையாகேளும்டில்லிபதுரையேநீ
இட்போதுகலியாணஞ்செய்ய எனக்குசம்மதியில்லை
இருபதுவயதில்கலியாணஞ்செய்து இட்டுகொண்டுபோறேன்
ஆனால்நல்லதாகட்டுமென்று அவனும்சம்மதித்தான்
அண்ணாவாடா தம்பிவாடா இராஜலிங்கபாபு
திவ்யசேனை ஆனைகுதிரை செஞ்சியில்கொண்டுசேரும்
என்றைக்குஞ்செ ஞ்சிதோப்பூரு ட்ணமில்லையென றுசொல்லும்
ஐம்பத்தாறுதேசராஜர்கள் அனைவரையும்பார்த்து
செஞ்சிராஜனல்சிறைமீண்டுபோங்கள் தேசராஜர்களே
போய்வாரும்போய்வாரும்நீங்கள் புண்ணியதுரைமாரே



## தேசிங்குராஜன் செஞ்சிக்கோட்டை வந்துசேர்ந்தது

தேரணிராஜன் சிற்றப்பதுரையும் தெருவில்வந்தார்கள்
மோவுத்துக்காரன் நீலவேணிமேல் முன்னேவந்துநின்றான்
அவரவர்தேசங்களுக்கு அவரவர்போய்ச்சேர்ந்தார்
செஞ்சிகோட்டையில்வந்துசேர்ந்தான் தேசிங்குபாலகனும்
வருமுன்னேசேதியறிந்து வருந்தியேபெற்றவளும்
ஆயிரந்தோழிமார்களுடனே அங்கேவந்துநின்றாள்
வந்தவுடனேதாயைக்கண்டு வணங்கிநமஸ்கரித்தான்
வந்துபணிந்தமகனையெடுத்து வாரிமுத்தமிட்டாள்
ஆயிரந்தாதிகள்வந்தேமுத்த ஆலாத்திஎடுத்தார்கள்
திருஷ்டிகழித்துமங்களதிருஷ்டி தெருவிலெறித்தார்கள்
முக்கனிசர்க்கரைபாலமுதுடனே முன்னேவட்டித்தார்
மகனையெடுத்துமடியில்வைத்து மகிழ்ச்சியடையாமல்
என்னைவிட்டுநீஎப்படிபோனாய் எந்தன்கண்மணியே
போனநாளன்றையமுதல் புசிப்பெடுப்பதில்லை
தாயுந்தகப்பனும்மைந்தனைப்பார்த்து சந்தோஷமானார்கள்
ஏழுவருஷம்சந்தோஷமாக இருந்தரசுசெய்தார்கள்
பட்டங்கட்டிமூன்றுமாதத்தில் பாலனைப்பெற்றவளும்
பரமபதத்தைபோயடைந்தாள் பாக்கியராம்பாயி
தேசிங்குதித்தஎட்டாம்வருஷம் தேரணிமகாராஜன்
பரமத்தியானம்செய்தேயவரும் பரகதியைச்சேர்ந்தார்
சிற்றப்பதுரைதணிசிங்கு செஞ்சியையாண்டிருந்தார்
டில்லிசென்றுராணியம்மாளை செஞ்சிக்குக்கொண்டுவந்தார்
பதினெட்டுவயதுபாலனான் இராஜாதேசிங்கு
கலியாணஞ்செய்யவெளித்தனித்தார் கண்மணிபாலனுக்கு
சிற்றப்பதுரைதரணிசிங்கு தேடியென்னசெய்தார்
ஆறுமாதமாய்கலியாணம்பண்ணி அறையிலேவைத்தார்
இராணிதேவியைக்கலியாணம்பண்ணி இராஜமுடிதரித்தார்

## செஞ்சிக்கோட்டையில் தேசிங்குராஜன் திருக்கலியாணம் செய்துக்கொள்ளல்

திரைகட்டிகலியாணஞ்செய்தார் செஞ்சிகோட்டையில்
பெண்சாதிமுகத்தைப்பார்த்தறியான் புலிக்குட்டிதேசிங்கு
புருஷன்முகம்பார்த்தறியால் புண்ணியராணியம்மாள்
இரங்கரைநோக்கிபூசைசெய்தாளம் ராணியம்மாளும்
மூன்றரைநாழிகைபூசைசெய்து முழுதுமாண்டிருந்தான்
இப்படிபன்னிரண்டுவயதுவரைக்கும் ஏகசக்ரமாண்டான்
செஞ்சிதேசத்தையாண்டிருந்தான் சிங்கக்குட்டிபோலே
இந்தமட்டோடேஆச்சுதுபாரு அந்தசெஞ்சிசேதி

## டில்லிராஜன் நவாபினிடத்தில் பகுதிக்கனுப்புதல்

டில்லியிலிருக்கும்டில்லிபதுரை சேதிதஎன்னஎன்னசொல்வான்
அண்ணுவாடாதம்பிவாடா இராஜலிங்கபாபு
ஐம்பத்தாறுதேசராஜாக்களுங் பகுதிகட்டுகிறூர்கள்
நூற்றெழுபத்திரண்டுபாளையபட்டுக்கு எஜமானனும்
ஆற்காடாளும்நவாப்புசைதுல்லா அவனுங்கட்டினனும்
சல்திசல்தியாகச்சொல்லு இராஜலிங்கபாபு
அந்தப்பேச்சைக்காதிலேகேட்டான் இராஜலிங்கபாபு
முழங்கால்சிலேபாட்டவனும் முன்னேசலாம்செய்தான்
ஐயாகேளும்ஐயாகேளும் டில்லிபதுரையேநீ
ஐம்பத்தாறுதேசராஜரும் பணங்கட்டினுர்கள்
ஆற்காடுநவாபுசைதுல்லா அவனுங்கட்டவில்லை
சலாம்செய்துபாட்சாபணத்தை சல்திகொண்டுவாரேன்
தோப்புரூபணம்நிலுவையிருக்குது பழஞ்செஞ்சிலே
பன்னிரண்டுவருடம்தோப்புருபகுதி பணமுங்கட்டவில்லை
அந்தச்சொல்லைக்காதிலேகேட்டான் டில்லிபதுரைதானும்
அண்ணுவாடாதம்பிவாட கணக்கப்பிள்ளைவாடா
ஆற்காடாளும்நவாப்புசைதுல்லா பணமுங்கட்டவில்லை
ஐயாகேளும்ஐயாகேளும் நவாப்புசைதுல்லா
பன்னிரண்டுவருஷதோப்புருபகுதி பணமுங்கட்டவில்லை
நூற்றெழுபத்திரண்டுபாளையபட்டு உனக்கேயானலும்
தேசத்துபணமுமுன்னிடபணமும் டில்லிக்குவரவில்லை
எட்டுநாளையிலனுப்பினலாச்சுது இந்தப்பணத்தையெல்லாம்
இல்லாமற்போனல்நவாப்பை இடுவேன்சிறையென்று
சிறையிற்போட்டுமானபங்கஞ் செய்தனுப்புவேனன்
அந்தப்படிக்கேஎழுதிமுடித்தான் அந்தஓலையைத்தான்
நீயேவாடாநீயேவாடா அர்க்காருபாப்பையா
ஐம்பதுபேரட்லர்ய்த்துமாரை அதிரக்கொண்டுபோய்நீ
அரிக்கத்துபண்ணிபணத்தைவாங்கடா அாக்காருப்பையா
ஆனல்நல்லதாகட்டுமென்று அவனுமோடிவாரான்
பத்துநாளையில்ஆற்காடுதேசம் பகுதிகேட்கவந்தான்
சலாமையாசலாமைய நாவப்புசைதுல்லா
டில்லியிலிருந்துஓலைவந்தது நவாப்புசைதுல்லா
டில்லிப்பேச்சைக்காதில்கேட்டு திடுக்கிட்டெழுந்தானும்
அண்ணுவாடாதம்பிவாடா ரங்கநாதப்பிள்ளை
வாசித்துபார்த்துசேதியெனக்கு வகுத்துச்சொல்லுமென்றான்
அந்தவார்த்தையைக்காதிர்கேட்டு திடுக்கிட்டெழுந்தானும்
ஓலையைப்பிரித்துவாசித்துச்சொல்லும் ரங்கநாதபிள்ளை
ஆனல்நல்லதாகட்டுமென்றான் ரங்கநாதபிள்ளை

ஓலையைப்பிரித்துசேதியுரைத்தான் ரங்கநாதப்பிள்ளை
கேட்டவுடனே மனதுகலங்கிக் கீழே ஓடிவந்தான்
கஜானதிதிறந்து திரவியமெல்லாம் கண்ணால்தான் கண்டான்
அண்ணாவாடாதம்பிவாடா பங்காருநாய்க்காகேள்
களஞ்சியபணமும் டில்லிபணமும் கட்டிபோடுமேதான்
அதிகமாகுமோ குறையுமோகேள் அறிந்துகூறுமென்றான்
ஐயாகேளும்ஐயாகேளும் நவாப்சைதுல்லா
டில்லிபணத்திற்களஞ்சியபணமும் கட்டிபோடுமேதான்
கணக்குப்பார்த்துதோப்ருபணத்தை சல்தியனுப்புமென்றான்
இருபதுநாளில்தோப்ருபணத்தை எடுத்தனுப்புமென்றான்
ஆனால்நல்லதாகட்டுமென்று அவனுமோடிவந்தான்
ஐயாகேளுமையாகேளும் அர்க்காருபாப்பையா
கணக்குசோதித்துடில்லிகணக்கைக் கடுகவெகாண்டுவாறேன்
இருபதுநாளில்பாட்சாபணத்தை எடுத்துக்கொண்டுவாறேன்
அப்படியேபோய்வாரும்சல்தி அர்க்காருபாப்பையா
ஆனால்நல்லதாகட்டுமென்றான் அர்க்காருபாப்பையன்
அந்தமட்டேநவாப்புசைதுல்லா அரசுசெய்யலுற்றான்
கோபம்பிறந்துசைதுல்லாவும் குரூரமாயழைத்தானும்
அண்ணாவாடாதம்பிவாடா பங்காருநாய்க்காகேள்
பெரியகணக்குரங்கநாதப் பிள்ளையைப் பிடித்துவாருமென்றான்
நல்லதென்று பங்காருநாய்க்கன் நாடியோடிவந்தான்
சல்திசததியோடிவாடா இரங்கநாதப்பிள்ளை
ஸ்நானஞ்செய்துபூசைமுடித்து சாப்பிட்டிளைப்பாறி
அதிகசந்தோஷங்கொண்டேயிருக்கும் கணக்கபிள்ளைவாடா
அந்தச்சொல்லைக்காதிலேகேட்டான் இரங்கநாதப்பிள்ளை
கணக்கையெடுத்துசலாஞ்செய்து கடுக ஓடிவந்தான்
ஐயாகேளுமையாகேளும் இரங்கநாதப்பிள்ளை
நூற்றெழுபத்திரண்டுபாளையப்பட்டு நமக்கேயானாலும்
பாளையப்பட்டு இராஜதுரைகள் பகுதிகட்டுகிறார்கள்
கட்டாதிருக்கும்ராஜதுரைகளைக் கடுகசொல்லுமென்றான்

## இராஜாக்கள் பகுதி கட்டும் விபரம்

சேதசத்துராஜதுரைகளையும் தெரியச்சொல்லுமென்றான்
ஆனால்நல்லதாகட்டுமென்று அவனுஞ்சொல்லுவாரான்
ஐயாகேளுமையாகேளும் நவாப்புசைதுல்லா
நிறுவையொன்றுமில்லாமலவர்கள் நிலையாய்கட்டுகிறார்கள்
சேத்துப்பட்டுதாவுத்துக்காரனும் திரைபணங்கட்டுகிறான்
திருவண்ணாமலைசுபங்கிதுரை திரைபணங்கட்டுகிறான்
கள்ளக்குறிச்சிகாலுசாயபு கட்டிவாறான்பணத்தை
மதுரைசீமைமலைமாளத்தான் வாய்தாபணங்கட்டுகிறான்

திண்டுக்கல்லுகொலுமுகத்தான் திரைபணங்கட்டுகிருன்
அரியலூருபெரியதுரையும் பணமுங்கட்டிவாருன்
எட்டயாபுரத்துபாளையக்காரன் பணமுங்கட்டிவாருா
னூற்றெழுபத்திரண்டுபாளையக்காரர் பணமுங்கட்டிவாருர்
திமிர்கோட்டைஷேக்முகமது பணமுங்கட்டிவாருர்
இன்றைவரைக்கும்தோப்பூருபணம் கிலுவையொன்றுமில்லே
நானொருசேதிசொல்லுகிறேன் கேள் நவாப்புஸ்சதுல்லா
செஞ்சிகோட்டையாளுகின்ற தேரணிமகாராஜன்
சூரசிங்குமாரனையா தேரணிமகாராஜன்
தேரணிராஜன் குமாரனையா தேசிங்குமகிபாலன்
சிம்மாசனத்தில் அரசுசெய்கிருன் சிங்கக்குட்டிபோல
அந்தசெஞ்சியையாளும்தேசிங்கு பணமுங்கட்டவில்லே
பன்னிரண்டுவருஷந்தோப்புருபணம் செஞ்சியில்வரவேண்டும்
வாய்தாபணமவேறேயிருக்குது பழஞ்செஞ்சியிலே
தோப்புருபணத்துக்குப்போய்வாநீ தோன்றமல்லன்னு
அந்தப்பேச்சைகாதில்கேட்டான் தோன்றமல்லண்ணன்
நானொருமொழிசொல்லுகிறேன் கேளும் நவாபுசைதுல்லா
ஒண்டியாயநான்போகமாட்டேன் நவாபுசைதுல்லா
துப்புகுதிரைமுன்ஹாற்றெனக்கு துரிதமாய்தரவேணும்
சாவிமுங்கில்சவாரிசண்டை தரவேணுல்கூடவேதான்
கோபுரவண்டிகூலாருவண்டி கூடத்தரவேணும்
இநதப்டிக்குகொடுப்பாயானல் நவாபுசைதுல்லா
செஞ்சிகோட்டையான்போய்வாறேன் நவாபுசைதுல்லா
போனநாழிகைசெஞ்சிராஜனும் பிடித்துகொண்டுவாறேன்
வராமற்போனல்செஞ்சிராஜனே மடக்கிகொண்டுவாறேன்
கஜானபணத்தைக்கட்டாமற்போனல் கழுவில்போட்டுவாறேன்
பகுதிபணத்சைக்கட்டாமற்போனல் பாரசிறையிட்டுவாறேன்
சிறையில்வைத்துஅரிகத்துபண்ணி சேரக்கொண்டுவாறேன்
இந்தப்படிக்குத்தாரங்கொடுத்தால் அங்கேபோறேனென்ருர்
அந்தவார்த்தைகாதில்கேட்டான் நவாபுசைதுல்லா
சலாம்வாங்கிதிரும்பினனையா தோன்றமல்லோஜீ
அரண்மனேக்குள்சென்ருனந்த தோன்றமல்லோஜீ
ஸ்நாணம்செய்துசாப்பிட்டானையா தோன்றமல்லோஜீ
தலேக்குத்தலேப்பாபோட்டானையா தோன்றமல்லோஜீ
அங்கிவுருமால்போட்டானையா தோன்றமல்லோஜீ

## தோன்றமல்லன் செஞ்சி போதல்

அரண்மனேவிட்டுவெளியேவந்தான் தோன்றமல்லனும்
அதற்குமுன்னேதயாராச்சுது பட்டத்துயானையும்
ஆனேக்கொம்புக்குக்கத்திகட்டினன் தோன்றமல்லோஜீ

நாராயணாகோவிந்தாவென்று யானையேறினானும்
செஞ்சிகோட்டைக்குப்பயணமானான் தோன்றமல்லனும்
கணகணகண கணகணவென்று கத்திகள்மின்னுதுபார்
பளபளபளபளபளவென்று பட்டாக்கள்மின்னுதுபார்
தடதடதடதடதடதடவென்று குதிரைகள்நடக்குதுபார்
இங்கேயடித்தநகாருசத்தம் திமிரியிற்கேட்குது
அந்தவேளையிலென்னசெய்கிறான் ஷேக்முகம்மதுவும்

தோன்றமல்லன் ஷேக்முகம்மது காணல்

எதிரியெவனோவந்தானென்று ஷேக்முகம்மதுவும்
மூந்நூறுகுதிரை தயாரபண்ணினான் ஷேக்முகம்மதுவும்
எண்ணூறுதருப்புகுதிரையுடன் முன்னே ஓடிவந்தான்
தோன்றமல்லனைக்கண்ணால்கண்டான் ஷேக்முகம்மதுவும்
சல்திசலாமுங்கொடுத்தானையா தோன்றமல்லனும்
எங்கேயிருந்தெங்கேபோகிறீர் தோன்றமல்லண்ணா
இங்கேயிருந்தெங்கேபோகிறீர் தோன்றமல்லண்ணா
நேற்றையநிலுவைபைசாபணமுங் கட்டியனுப்பினேனான்
இன்றையநிலுவைபைசாபணமுங் கட்டப்போகிறேன் நான்
என் சீமையில்நகாருபோட்ட வயணமென்னவையா
அந்தவார்த்தைக்கென்ன சொல்லுகிறான் தோன்றமல்லனும்
சண்டைக்குவரவில்லைசாடிக்கு வரவில்லை ஷேக்முகம்மது
செஞ்சிக்கோட்டைபணத்துக்குப்போறேன் ஷேக்முகம்மது
அந்தப்பேச்சைகாதிலே கேட்டான ஷேக்முகம்மதையா
நானொருவார்த்தைசெல்லுகிறேன் கேளும் தோன்றமல்லண்ணா
அவனும்மகாசூரனையா இராஜாதேசிங்கு
செஞ்சிகோட்டைகது சிப்பாயையா இராஜாதேசிங்கு
கத்திபிடித்தசிப்பாய்மகனும் இராஜாதேசிங்கு
அவன் கண்ணையுருட்டிப்பார்த்தானால் சிப்பாய்தேசிங்கு
கால்பலங்களும் கைபலங்களும் கதறியோடுமேதான்
டாறுடாறாய்தீர்த்துபோடுவான் இராஜாதேசிங்கு
சண்டைபண்ணிஜெயிக்கமாட்டாய் தோன்றமல்லண்ணா
அந்தப்பேச்சைகாதில்கேட்டான் தோன்றமல்லோஜி
என்னப்பேச்சுபேசினையடா ஷேக்முகம்மதையா
அவனிடசூரத்தெனக்குத்தெரியும் ஷேக்முகம்மதையா
செஞ்சிசென்றுளந்தன்வலுமையை தெரிகாண்பிக்கிறேன்
போய்வாரேன்போய்வாரேனான் ஷேக்முகம்மதையா
கட்டியிருந்தகுதிரைகளெல்லாம் நடக்குதுபாளையமும்
போடுபோடென்றுபோரானையா தோன்றமல்லனும்
ஆரணிக்கோட்டைக்கிரண்டுநாழிவழியில் நகாருபோட்டானும்
வேங்கடராயர்சீனிவாசராவு சந்திரமகாராஜாவும்

சதுர்தீர்த்தேயுட்கார்ந்திருந்தார் மூன்றுதுறைமாரும்
கார்பார்பண்ணுகிறவேங்கடராயர் காதில்கேட்டிடவே
எதிரிஎவனேவந்தானென்று வேங்கடராயரும்
ஆயிரம்குதிரைதயார்பண்ணினர் வேங்கடராயரும்
கோட்டையிலிருந்துவெளியேவந்தார் வேங்கடராயரும்
துருப்பிலுள்ள ஆயிரங்குதிரை துரத்திஓடிவந்தார்
தோன்றமல்லனைகண்ணாலேகண்டார் வேங்கடராயனும்
சலாமையாசலாமையா தோன்றமல்லோஜி
நீ-இங்கேவந்தவயனமென்ன தோன்றமல்லோஜி
நேற்றுகிலுவைபைசாபணமும் கட்டியனுப்பிவைத்தேன்
என்சீமையில்நகாருபோட்ட வயனமென்னவையா
நானொருபேச்சுசொல்கிறேன்கேளும் வேங்கடராயரே
சண்டைக்கு ரவில்லைசாடிக்குவரவில்லை வேங்கடராயரே
செஞ்சிகோட்டைபணத்துக்குபோகிறேன் வேங்கடராயரே
அந்தப்பேச்சைகாதிலேகேட்டான் வேங்கடராயரும்
நானொருசேதிசொல்கிறேன்கேளும் தோன்றமல்லன்னு
அவனிடசேதியெனக்குதெரியும் தோன்றமல்லன்னு
அவன்பிறந்தஏழாம்வருஷம் தாயார்சென்றுபோனாள்
தேசிங்குபிறந்தஎட்டாம்வருஷம் தகப்பன்சென்றுபோனாள்
சிற்றப்பதுரைதரணிசிங்கு எடுத்துவளாத்தாராம்
பதினெட்டுவயதில்கலியாணம்பண்ணினர் சிற்றபபராஜாவும்
இப்போ-இருபத்திரண்டுவயதுள்ளபாலன் இராஜாதேசிங்கு
ஐம்பதுதுலாம்பரிகைசத்தி அவனிடகத்தியும்
ஏழுதுலாம்பரிசைபாலா அவன்கைபாலாவும்
அவனுக்கேற்றதெய்வலோகக்குதிரை பாராசாரிகுதிரை
பாராசாரிமேலேறினால் இராஜதேசிங்கு
பட்டாவுருவிகையிலேபிடித்தால் ராஜாதேசிங்கு
பன்னுருகாதம்பாய்ந்து வெட்டுவான்ராஜாதேசிங்கு
இணையொருவரெங்குமில்லை தேசிங்குமன்னுக்கு
பாற்சமுத்திரம்போலதுரைகள் படைகளெதிர்த்தாலும்
பத்துநாழிகையில்பார்த்துகொண்டு பழஞ்செஞ்சிபோவான்
சிங்கம்போலபுகுந்துவெட்டுவான் ராஜாதேசிங்கு
புலியைப்போலவந்துவெட்டுவான் ராசாதேசிங்கு
மாறுமாறென்றுதீர்த்துபோடுவான் ராசாதேசிங்கு
அவனைஜெயிப்பாரொருவருமில்லை தோன்றமல்லண்ணு
சண்டைபண்ணிஜெயிக்கமாட்டாய் தோன்றமல்லண்ணு
சமாதானமாய்ப்போகவேணும் தோன்றமல்லண்ணு
சாமதானத்துக்குட்படமாட்டான் ராசாதேசிங்கு
அந்தப்பேச்சைக்காதிலேகேட்டான் தோன்றமல்லனும்
இனியில்லாதாபயம்பிடித்தது தோன்றமல்லனுக்கு


புலியைப்போலேபுகுந்துவெட்டுவான் ராஜாதேசிங்கு
மாறுமாறென்றுதீர்த்துப்போடுவான் ராஜாதேசிங்கு
அவனைஜெயிப்பாரொருவருமில்லை தோன்றமல்லண்ணு
சண்டைபண்ணிஜெயிக்கமாட்டாய் தோன்றமல்லண்ணு
சமாதானமாய்ப்போகவேணும் தோன்றமல்லண்ணு
சமாதானத்துக்குடன்படமாட்டான் ராசாதேசிங்கு
அந்தப்பேச்சைகாதில்கேட்டான் தோன்றமல்லண்ணன்
இனியில்லாதபயம்பிடித்தது தோன்றமல்லனுக்கு
கையுங்காலுமுதறலெடுத்து கலங்கியிருந்தானும்
அந்தவேளையிலென்னசொல்லுகிறார் வேங்கடராயரும்
மெத்தசூரத்துக்காரனவனும் ராஜாதேசிங்கு
பணமென்றசேதிகாதில்கேட்டால் பாய்ந்துகுத்திடுவான்
சல்-மெத்தக்கெட்டிக்காரனையா ராஜாதேசிங்கு
அவன்-விஷ்ணுபக்திக்காரனையா ராஜாதேசிங்கு
இரவும்பகலும்ரங்கநாதனை எண்ணியிருப்பவன்காண்
நாமத்தைக்கண்டால்பயப்படுவானையா ராஜாதேசிங்கு
அந்தச்சேதியைகாதிலேகேட்டான் தோன்றமல்லனும்
சந்தோஷமாகவேங்கடராயனை தழுவிக்கொண்டானும்
இனியெனக்குபயமில்லையென் றிருமாந்துசொன்னனும்
நாமம்போட்டுசெஞ்சிராஜனை நடத்திக்கொண்டுவாரேன்
எந்தவிதமும்செஞ்சிராஜனை இடுவேன்சிறையென்றன்
ஆற்காடுதேசங்கொண்டவனை அடக்கிபோடுவேன்பார்
செய்யாமற்போனலெனதுபேரும் தோன்றமல்லனல்ல
போய்வாரேன்போய்வாரேனனும் வேங்கடராயரும்
கட்டியிருந்தகுதிரையெல்லாம் நடந்ததுபாளையமும்
போடுபோடென்றுபோறனையா தோன்றமல்லனும்
செஞ்சிகோட்டைமண்ணைமிதித்தான்தோன்றமல்லனும்
செஞ்சிகோட்டைஐந்துநாழிவழி தேவனூருபேட்டை
தேவனூர்பேட்டைஓரத்திலே சங்கராபரணியாறு
ஆற்றங்கரையில்வந்தேயவனும் பாளையம்போட்டானும்
மூன்றுநாள்வரைசத்தம்பண்ணுமல் முழித்திருந்தார்கள்
நாலாம்நாள்காலையங்கே நகாருபோட்டானும்
இங்கேபோட்டநகாருசத்தம் செஞ்சியிற்கேட்டுதுபார்
புதுசெஞ்சியில்பூசைபண்ணுகிறன் ராஜாதேசிங்கு
பழஞ்செஞ்சியில்கார்பார்பண்ணிகிறர் சிற்றப்பாசாவும்

என்றுமில்லாதநகாருசத்தம் இன்றுவந்ததென்ன
அரங்கத்துமேலேறிப்பார்த்தான் சிற்றப்பராசாவும்
ஆற்றங்கரையில்நிறைந்திருக்குது நவாப்புபாளையமும்
கண்ணாலேகண்டுமனதுகலங்கி கடுகயென்னசெய்தான்
ஒற்றைக்குதிரைபோட்டுமேலேறி உடனேஓடிவந்தான்
அந்தவேளையில்பூசைப்பண்ணுகிறான் ராஜாதேசிங்கு
அரிநமோநாராயணாவென்று பூசைபண்ணுகிறானும்
கிருஷ்ணா அரிகோவிந்தாவென்றுபூசைபண்ணுகிறானும்
மாயவாவைகுந்தாவென்று பூசைபண்ணுகிறானும்
செஞ்சிகோட்டைரங்கநாதரை தியானஞ்செய்கிறானும்
பூசைமுகத்திலேவந்துநின்றான் சிற்றப்பராசாவும்
என்னபூசைபண்ணுறையடா மகனேதேசிங்கு
தேவனூரிலேகணகணவென்று நகாருமுழங்குதிப்போ
பாளையம்வந்துநெருங்கியிருக்குது மகனேதேசிங்கு
நாலுமூலையும்நவாப்புபாளையம் நாடியிருக்குதுபார்
ஆற்றங்கரையில்நவாப்புபாளையம் அண்டியுள்ளதுபார்
அந்தப்பேச்சைகாதிலேகேட்டான் ராஜாதேசிங்கு
கண்ணைவிழித்துபார்த்தானையா ராஜாதேசிங்கு
ராமுராமுரேதேவாவுமக்கு சிற்றப்பராசாவே
என்னபேச்சுபேசினீரையா சிற்றப்பராசாவே
கலகலவென்றுசிரித்தானையா ராஜாதேசிங்கு
கோபம்கொண்டுநகைத்தவனும் கொல்லும்சிங்கம்போல
ஐயாகேளுமையாகேளும் சிற்றப்பராசாவே
பனிரண்டுவருஷதோப்புருபணமும் நம்மிடமிருக்குது
நமதுகோட்டைக்குபயமேயில்லை நமக்கேயானாலும்
ராமாராமாராமாவென்று ராஜ்ஜியமாளுகிறோம்
ராஜகுலத்தில்நானும்பிறந்தேன் ரோஷக்காரனாக
எதிராளியான நவாப்புதண்டு எதிரில்விழுந்ததோடா
பகையாளியான நவாப்புதண்டு பக்கத்தில்விழுந்ததோடா
தேசமெல்லாம்சேர்ந்துவந்ததோ சிற்றப்பராஜாவே
இன்னுமரைக்கால்நாழிபொறுத்துகொள்ளும் சிற்றப்பராசாவே
டாருடாராய்கிழித்துபோடுகிறேன் சிற்றப்பராஜாவே
ஆறிலுஞ்சாவுநூறிலுஞ்சாவு சிற்றப்பராஜாவே
பிறந்தவனைறைக்கேசாவிருக்குது சிற்றப்பராஜாவே
வந்தவனாரென்றுகேட்டுப்பாரு சிற்றப்பராஜாவே

இதற்கோ நீயும்பயந்தீரையா சிற்றப்பராஜாவே
பூசைமுகத்தைகெடுக்கவேண்டாம் சிற்றப்பராஜாவே
ஆனால்நல்லதாகட்டுமென்றான் சிற்றப்பராஜாவும்
அந்தவேளையிலென்னபண்ணுகிறான் சிற்றப்பராஜாவும்
சிற்றப்பதுரைதரணிசிங்குமே கொலுவுக்குவாறானும்
இரண்டுபேர் அர்க்காருமாரை தோன்றமல்லனுக்கு
அஞ்சல்மேலே அஞ்சல்போகுது தோன்றமல்லனுக்கு
தோன்றமல்லனைத்தேடிவந்தார் அர்க்காருமார்களும்
வந்தவனைத்தன்கண்ணால்கண்டான் தோன்றமல்லனும்
ராமுராமுரேசீதாராமுரே அர்க்காருமாரே நீர்
என்னைத்தேடிவந்தகாரியம் எனக்குச்சொல்லுமையா
அந்தப்பேச்சைக்காதிலேகேட்டார் அர்க்காருமார்களும்
எம்மையாளும்தேசிங்குராஜா உனையழைக்கச்சொன்னார்
சல்திசல்திபுறப்படுமென்றார் அர்க்காருமார்களும்
இந்தச்சேதியைக்காதிலேகேட்டான் தோன்றமல்லனும்

தோன்றமல்லன் தேசிங்குராஜனிடம் வருதல்

கால்நடுங்கிகைநடுங்கி யானையேறினானும்
சுண்ணும்பெடுத்துஎச்சலுமிழ்ந்து நாமத்தைப்போட்டானும்
ஆனையைக்குத்திரத்தமெடுத்து நடுவில்போட்டானும்
பட்டைநாமம்போட்டானையா தோன்றமல்லனும்
அந்தவேளையிலென்னபண்ணுகிறான் ராஜாதேசிங்கு
பூஜைமுழுதும்முடிந்துதையா ராஜாவுக்கானலும்
பூசையைவிட்டுவெளியேவந்தான் ராஜாதேசிங்கு
சிங்காரமாலிலேவந்தானையா ராஜாதேசிங்கு
திருமணிபெட்டியைகையிலேயெடுத்தான் ராஜாதேசிங்கு
ராமாராயாவென்றுதிருமணி நெற்றியிலிட்டானும்
சரிகைமுண்டாசுதலையிலேதரித்தான் ராஜாதேசிங்கு
கலிக்கத்துறாஎடுத்துக்கட்டினான் கதம்புசிங்கம்போல்
மொகாமெடுத்துத்தலையில்போட்டான் ராஜாதேசிங்கு
கைக்குச்சீராக்கட்டிகொண்டான் ராஜாதேசிங்கு
ஐந்துதுலாம்பரிசைகத்தி கையில்பிடித்தானும்
எமன்போலேஉட்கார்ந்தானையா ராஜாதேசிங்கு
மன்மதன்போலேஉட்கார்ந்தானையா ராஜாதேசிங்கு
அருகிலிருந்தஅர்க்காருமாரை அதட்டிக்கூப்பிட்டான்
கூப்பிட்டழைத்துச்சேதிசொன்னான் கொல்லுஞ்சிங்கம்போலே



## தேசிங்குராஜன் பாளையபட்டரை கொலுவுக்கு வரவழைத்தல்

ஜெயராமுகெங்காராவை கொலுவுக்குவரச்சொல்லும்
நத்தர்சிங்குகோபால்சிங்கு நமதுகொலுவிலழையும்
ராமுசிங்குலட்சுமணசிங்கு நமதுகொலுவிலழையும்
ராமுதாரிலட்சுமணதாரியைகொலுவுக்குவரச்சொல்லும்
ராமுசிங்கைதரணிசிங்கை கொலுவுக்குவரச்சொல்லும்
மான்சிங்குகிருபசிங்கை கொலுவுக்குவரச்சொல்லும்
பேட்டைசிப்பாய்மோவுத்துகாரனை கொலுவுக்குவாகூறு
சிற்றப்பதுரைதரணிசிங்கை கொலுவுக்குவரச்சொல்லும்
ஜல்திஜல்தியென்றுசொன்னான் ராஜாதேசிங்கு
சொன்னநாழிகைக்குகொலுவில் சூழஓடிவந்தார்
இந்தவிதமாகயிருக்குதங்கே செஞ்சிக்கோட்டைக்குள்ளே
அந்தவேளையிலென்னசெய்கிறான் தோன்றமல்லனும்
ஆனைவிட்டுகிழேகுதித்தான் தோன்றமல்லனும்
நாராயணாகோவிந்தாவென்று கோட்டைக்குள்வந்தான்
சதுர்முன்னுக்குவந்தானையா தோன்றமல்லனும்
முழங்கால்கீலேபோட்டேயவனுமுன்னேசலாம்செய்தான்
பதில்சலாமுங்கொடுத்தானையா ராஜாதேசிங்கு
கண்ணால்கண்டுதோன்றமல்லனை கடுகசொல்லலுற்றான்
நீ-இங்கேவந்தவயணமென்ன தோன்றமல்லண்ணா
எனக்கு இருபத்திரண்டுவயது இப்போதாச்சுது
இத்தனைநாளாய்நவாப்புசேனைகள் இங்கேவந்ததில்லை
உயிர்கொடுக்கசெஞ்சிகோட்டைக்கு உகந்துவந்தீரோ
தைரியங்கொண்டுசெஞ்சிகோட்டைக்குசார்ந்துவந்தீரோ
என்சீமையில்நகாருபோட என்னவலுமைகொண்டீர்
சல்திசல்திசொல்லுமென்றான் ராஜாதேசிங்கு
அந்தபேச்சைக்காதிலேகேட்டான் தோன்றமல்லனும்
கால்நடுங்கிகைநடுங்கி காலில்விழுந்தானும்
சலாமையாசலாமையா ராஜாதேசிங்கு [சிங்கு
நான்சண்டைக்குவரவில்லை சாடிக்குவரவில்லைராஜாதே
கோபமில்லாமல்என்னிடபேச்சை சற்றேகேளுமையா
சந்தோஷமாகஎன்னிடபேச்சை சற்றேகேளுமையா
றூற்றெழுபத்திரண்டுபாளையப்பட்டு நவாப்புக்காணும்
செஞ்சிகோட்டைப்பணமும் வரவில்லைராஜாதேசிங்கு

தோப்புருபணமும்வேறேகிடக்குது பழஞ்செஞ்சியிலே
தோப்புருநிலவைக்குவந்தானையா ராஜாதேசிங்கு

தேசிங்கு தோன்றமல்லன்மீது கோபித்தது

பல்லைப்படபடவென்றுகடித்தானையா ராஜாதேசிங்கு
கையைத்தூக்கிகனைத்துதட்டினன் ராஜாதேசிங்கு
இனியில்லாதகோபமாச்சுது ராஜாவுக்கானுலும்
கோபத்தினுலேயவனைக்கொல்ல கத்தியெடுத்தானும்
பார்த்தவுடனேதோன்றமல்லன்பதைத்துவிழுந்தானும்
விழுந்தவுடனேசலாஞ்செய்து வேண்டிக்கொண்டானும்
தலையசைத்துதோள்நெறித்தான் தாவும்சிங்கம்போல
கண்களையுருட்டிக்கதும்பினானையா காளைசிங்கம்போல
அடா-என்னபேச்சுபேசினுயடா தோன்றமல்லண்ணு
நீவந்தயாதிரிநவாப்புவந்தால் நிமிஷமிருக்கமாட்டான்
பணமென்றபேதிகேட்டால் பாய்ந்துவெட்டிடுவேன்
நாளைக்குவரும்நவாபுசாயபை இன்றைக்குவரசொல்லும்
ரோஷக்காரனுனல்நவாபுசாயபை நொடியில்வரக்கூறும்
ஆண்பிள்ளையானுல்நவாபுசாயபை விரலைநீட்டக்கூறும்
மீசையுள்ளவனுனல்நவாப்பை வெளியேவரச்சொல்லும்
கத்தியெடுக்கிறசிப்பாய்களெல்லாம்தோப்புருகட்டுறதோ
தைரியமுள்ளவனுனல்நவாப்பை சலுதியில்வரக்கூறும்
கருவாடுவிற்கிறலப்பைபையலுக்கு கிஸ்திகட்டுகிறதோ
கத்திமுனையிலேபணமுந்தாரேன் நவாப்புக்கானுலும்
பரிசைமுனையிலேபணமுந்தாரேன் நவாப்புக்கானுலும்
போனவருஷத்துக்கித்தவருஷம் வாகுவளைந்தது
வாகுவைக்கல்மெத்தகிடக்குது வாரிபோகச்சொல்லும்
கோட்டைவெளியில்மணல்கிடக்குது கொண்டுபோகச்சொல்லும்
ஒட்டையாயிரமயானையாயிரம் ஓட்டிவரச்சொல்லும்
பொதிகள்போட்டுநவாப்பை எடுத்துபோகச்சொல்லும்
அந்தப்பேச்சைக்காதில்கேட்டான் தோன்றமல்லனும்
கால்நடுங்கிகைநடுங்கி களைத்துவிழுந்தானும்
செத்தபிணம்போலேயிருந்தான் தோன்றமல்லனும்
மூர்ச்சைதெளிந்துஎழுந்தானையா தோன்றமல்லனும்
பார்க்கப்பார்க்ககோபமீறுது ராஜாவுக்கானுலும்
கோபம்வருவதைகண்ணுல்கண்டான்தோன்றமல்லனும்
ரங்கநாதரைவேண்டிகொள்ளுகிறுன்தோன்றமல்லனும்

தெரியாமற்படிக்குசெஞ்சிக்குவந்தேன் ரங்கநாதரே
என்னுயிர்கொண்டுஆற்காடுபோனல் ரங்கநாதரே
ஆயிரம்பேர்க்குஅன்னம்அளிக்கிறேன் ரங்கநாதரே
வஸ்திரதானம்வகைவகையாக வந்தபேருக்களிப்பேன்
மங்களமாகக்கலியாணம் மகிழ்வாய்செய்துவைப்பேன்
சோகிசங்கமரெவர்வந்தாலும் சொர்னதானங்கொடுப்பேன்
வேதவேதியர்கேட்கும்வகைகளை விருப்பமுடன் தருவேன்
கலகலவென்றுசிரித்தானையா ராஜாதேசிங்கு
நானொருசேதிசொல்கிறேன்கேள் தோன்றமல்லண்ணு
நீவந்தாப்போல்நவாப்புவந்தால் குத்திபோடுவேனுன்
உங்கள்நவாப்புக்குபயப்படவில்லை தோன்றமல்லோஜி
உன்-நெற்றிநாமத்தைக்கண்டுபயந்தேன் தோன்றமல்லோஜி
ரங்கர்வார்த்தைக்குநான்பயந்தேன் தோன்றமல்லண்ணு
அந்தப்பேச்சைகாதில்கேட்டான் தோன்றமல்லண்ணன்
ராமூராமூசீதாராமூரே ராஜாதேசிங்கு
எந்தன்மேலேகோபம்வேண்டாம் ராஜாதேசிங்கு
நானிப்போதேஓடிப்போகிறேன் ராஜாதேசிங்கு
சலாஞ்செய்துதிரும்பினானையா தோன்றமல்லனும்
கோட்டைக்குவெளியேவந்தானையா தோன்றமல்லனும்
நானொருபேச்சுசொல்கிறேன்கேளும் சமேதாருமாரே
அந்தப்பேச்சுக்கென்னசொல்கிறன் தோன்றமல்லனும்
நான்-யானைமீதிலேறமாட்டேன் சமேதாருமாரே
குதிரையின்மேலேறமாட்டேன் சமேதாருமாரே
தண்டுக்குள்ளேபடுத்துக்கொள்கிறேன் சமேதாருமாரே
நாம்-சீக்கிரமாகமூன்றுநாள்பயணம் செஞ்சிக்குவந்தோமே
இன்றையராத்திரிஆற்காட்டுக்குகொண்டுபோகவேணும்
அந்தப்பேச்சைகாதிலேகேட்டார் சமேதாருமாரும்
கட்டியிருந்தகுதிரைசேனையும் சடுதியில்நடந்திடவே
காற்றுப்போலபறக்கிறரையா சமேதாருமாரும்
ஆற்காடுவீதியில்நகாருசத்தம் அன்பாகவடித்தானும்
அங்கேபோட்டநகாருசத்தம் நவாப்புகேட்டானும்
அந்தவேளையிலென்னசொல்கிறன் நவாப்புசைதுல்லா
அண்ணவாடாதம்பிவாடா பங்காருநாய்க்கா நீ
சல்-செஞ்சிகோட்டைபணமுய்வருது பங்காருநாய்க்கா நீ
சதுருஜமக்காளம்போடச்சொன்னன் நவாப்புசைதுல்லா

சராப்புபெட்டியையழைக்கசொன்னன் நவாப்புசைதுல்லா
தூங்காவிளக்கைவைக்கச்சொன்னன் நவாப்புசைதுல்லா
அந்தவேளையிலென்னசெய்கிருன் தோன்றமல்லனும்

நவாப்பினிடத்தில் தோன்றமல்லன் வந்து சோல்லல்

நவாப்புமாலில்வந்தானையா தோன்றமல்லனும்
சலாஞ்செய்துஎதிரிலே நின்ருன் தோன்றமல்லனும்
பதில்சலாமுங்கொடுத்தானையா நவாப்புசைதுல்லா
கொள்ளுகுத்தினவுலக்கைபோலே முன்னே நின்ருனும்
தோன்றமல்லனை கண்ணுல்கண்டான் நவாப்புசைதுல்லா
என்னகாரியம்பண்ணிஞயடா தோன்றமல்லண்ணு [லா
பணமுமெங்கேகாசுமெங்கே தோன்றமல்லண்ணு [ல்லா
ஐயா-பணமுங்காணேன்காசுங்காணேன் நவாப்புசைது
தூற்றெழுபத்திரண்டுபாளையப்பட்டுக்கு நான்போயிருக்க
இந்தனை நாளுமிவனைப்போல நானும்பார்த்ததில்லை
இனியில்லாதபாடுபடுத்திஞன் ராஜாதேசிங்கு
ராஜாபடுத்தினபாடுபாருமையா நவாப்புசைதுல்லா
செத்துப்போனவன்திரும்பிவந்தேன் நவாப்புசைதுல்லா
வாயிஞலேசொல்லமாட்டேன் நவாப்புசைதுல்லா
செஞ்சிகோட்டையான்ஓலையெழுதிஞன் நவாப்புசைதுல்லா
ஓலைமுகத்தைக்கண்ணுலேபாரும் நவாப்புசைதுல்லா
ஓலையெடுத்துஎதிரேவைத்தான் தோன்றமல்லனும்
அந்தவேளையிலென்னசொல்லுகிருன் நவாப்புசைதுல்
ஆயிரங்கணக்கப்பிள்ளைக்குபெரிய கணக்கப்பிள்ளைவாரும் [லா
வாசித்துப்பார்த்துதலையைகுனிந்தான் ரங்கநாதபிள்ளை
என்னகாரியம்பண்ணிஞயடா நீ ரங்கநாதபிள்ளை
இரண்டுநாழியிலிடித்துபோடுறேன் செஞ்சிகோட்டையைநான்
எதிர்த்துவந்ததேசிங்குராஜனை இடித்துபோடுவேன்நான் [குள்
ஆண்சிறைபெண்சிறைதள்ளிபிடிக்கிறேன் செஞ்சிகோட்டைக்
உண்டானசேதிவெளியிலேசொல்லும் ரங்கநாதபிள்ளை
அந்தவேளையிலென்னசொல்கிருன் ரங்கநாதபிள்ளை
நாஞெருசேதிசொல்கிறேன்கேள் நவாப்புசைதுல்லா
ஆண்பிள்ளையாஞல்நவாபுசாயபை இன்றைக்குவரச்சொல்லும்
சல்-பெண்பிள்ளையாஞல்நவாப்பை அங்கேயிருக்கச்சொல்லும்
மீசைமுளைத்தஆண்பிள்ளையாஞல் சண்டைக்குவரச்சொல்லும்

கத்திமுனையில்பணமுந்தாரேன் நவாப்புக்காறனும்
ஈட்டிமுனையில்பணமுந்தாரேன் நவாப்புக்காறனும்
போனவருஷத்துக்கிந்தவருஷம் வாகுமெத்தவிளைவாம்
வாகுவைக்கல்மெத்தக்கிடக்குது வாரிபோகச்சொல்லும்
கோட்டையின்மேல்புல்லுகிடக்குது கட்டிபோகச்சொல்லும்
கோட்டையின்வெளியில்மணல்கிடக்குது வாரிப்போகச்சொல்
இத்தனைசமர்த்துமிருந்ததேயானால் இங்கேவரச்சொல்லும் [லும்
திராணியில்லாதபெண்பிள்ளையானால் அங்கேயிருக்கசொ
இப்படியாகஎழுதியிருக்குது நவாப்புசைதுல்லா [ல்லும்
அந்தப்பேச்சைகாதில்கேட்டான் நவாப்புசைதுல்லா
கேட்டவுடனேவயிறெரியுது நவாப்புக்காறனும்
நீலவிழிகள்எரியுதையா நவாப்புக்காறனும்
மீசைபடபடவென்றுதுடிக்குதையா நவாப்புக்காறனும்
சல்-பட்டாவுருவிகையில்பிடித்தான் நவாப்புசைதுல்லா
அண்ணவாடாதம்பிவாடா பங்காருநாய்க்கனே [னே
உனக்கானைசெத்தாலும்ஆனைதாரேன் பங்காருநாய்க்க
குதிரைசெத்தாலும்குதிரைதாரேன் பங்காருநாய்க்கனே
தளங்கள்மடிந்தால்தளங்கள்தாரேன் பங்காருநாய்க்கா நீ
சண்டாயிழுத்துவெளியில்போடு பங்காருநாய்க்கா நீ
அவ்வேளையிலென்னசொல்லுகிறான் பங்காருநாய்க்கரும்
நூற்றெழுபத்திரண்டுபாளையக்காரரைக் கொலுவுக்குவரச்சொல்லும்
ஓலைஎழுத்தாணிகையில்பிடித்தான் பங்காருநாய்க்கனும்
ஓலைஎழுதிதயார்பண்ணினான் பாங்காருநாய்க்கனும்
எழுபத்திரண்டுஅர்க்காருமாரை தயார்பண்ணினான்
அஞ்சல்மேலேஅஞ்சல்வைத்தான் பங்காருநாய்க்கனும்
ஓலையெடுத்துகையில்கொடுத்தான் அர்க்காருமாருக்கு

அர்க்காருமார்கள் பாளையப்பட்டுக்கு
ஓலைகொண்டு போகுதல்

காற்றுபோல்பறக்குறாரையா அர்க்காருமார்களும்
மேகம்போல்பறக்குறாரையா அர்க்காருமார்களும்
இரண்டுநாழிகையிற்போனாரையா அர்க்காருமார்களும்
ஓலையைக்கொண்டுகையில்தந்தார் அர்க்காருமார்களும்
ஓலையைபிரித்துபார்த்தாரையா பாளையக்காரரும்
அவர்களுக்கேற்றதுருப்புகுதிரை தயார்பண்ணினாறும்

### நவாப்பினிடத்தில் பாளையப்பட்டார் வருதல்

தேசத்துரங்காரவு கொலுவுக்குவாருனும்
திருவண்ணுமலைசுபங்கி துரையும் கொலுவுக்குவாருனும்
திமிரிகோட்டைஷேக்மூகம்மது கொலுவுக்குவாருனும்
வாலிகோட்டைஅப்துல்காதரும் கொலுக்குவாருனும்
மதுரைசீமைமலையாளத்தானும் கொலுவுக்குவாருனும்
ஆரணிகோட்டைவேங்கடராயர் கொலுவுக்குவாருனும்
அரியலூர்பெரியதுரையும் கொலுவுக்குவாருனும்
ஆச்சிநாய்க்கன்பொம்மிநாய்க்கன் கொலுவுக்குவாருனும்
எட்டியபுரத்துபாளையக்காரன் கொலுவுக்குவாருனும்
நூற்றெழுபத்திரண்டுபாளையர்களுகொலுவுக்குவாருராம்
ஆற்காட்டுஜங்காதவழி வந்துநிறைந்தாரும்
பாளையக்காரர்வந்தசேதியை காதிலேகேட்டானும்
சீமைக்குநாட்டார்வந்தசேதியை காதிலேகேட்டானும்
சிங்கக்குட்டிபோல்பாளையக்காரரை கண்ணில்கண்டானும்
அந்தவேளையிலென்னசெய்கின்ருன் நவாப்புசைதுல்லா

### நவாப்பு பங்காருநாய்க்கனுக்கு சேனைகளையும் கிஸ்தியையும் தயார்செய்யச் சொல்லல்

பெரியகணக்குப்பங்காருநாய்க்கனை கிட்டவரச்சொன்னுர்
அண்ணுவாடா தம்பிவாடா பங்காருநாய்க்கா நீ
மூன்றுமாதத்தில்கிஸ்திகட்டடா பங்காருநாய்க்கா நீ
நூற்றெழுபத்திரண்டுபாளையகாரருக்கு விருதுகட்டடா நீ
அறுபதினுயிரம்ரேக்லாபீரங்கி தயார்பண்ணடா நீ
எண்பதுகோடிபாருதுப்பாக்கி தயார்பண்ணடா நீ
அதற்குதகுந்தகுண்டுமருந்து தயார்பண்ணடா நீ
ஐந்நூருபேர்சமேதாருக்கு சேதிசொல்லடா நீ
நூற்றெழுபத்திரண்டுபாளையபட்டுக்கு கிஸ்திகட்டடா நீ
வெள்ளைகூடாரம்பச்சைக்கூடாரம் தயார்பண்ணடா நீ
கணக்கில்லாதசேனைதளத்தை தயார்பண்ணடா நீ
அவ்வேளையிலென்னபண்ணினன் பங்காருநாய்க்கனும்
ஐம்பதுகோடிபீரங்கிகுண்டு தயார்பண்ணினனும்
அறுபதாயிரம்பீரங்கிகுண்டு தயார்பண்ணினனும்
எண்பதாயிரம்பீரங்கிகுண்டு தயார்பண்ணினனும்
நூருயிரம்ரேக்லாகுண்டு தயார்பண்ணினனும்

இருபதாயிரம்யானைகளும் தயார்பண்ணினும்
ஐம்பதாயிரம்ஒட்டகங்களும் தயார்பண்ணினும்
எண்பதாயிரம்பாலாயீட்டிகள் தயார்பண்ணினும்
லக்ஷத்திருநூறுசிப்பாய்மாரை தயார்பண்ணினும்
அவரவர்க்கேற்றவஸ்துகளெலாம் தயார்பண்ணினும்
அறுபத்துநாலுசண்டாமாமும் தயார்பண்ணினும்
பதிங்காதவழிபாவியிருக்குது நவாப்புபாளையமும்
அந்தவேளையிலென்னபண்ணினன் பங்காருநாய்க்கனும்
சலாமையா சலாமையா நவாப்புசைதுல்லா
பாளையமெல்லாம்தயாராச்சுது நவாப்புசைதுல்லா
அந்தப்பேச்சைகாதிலேகேட்டான் நவாப்புசைதுல்லா
மாலுக்குள்ளேபுகுந்தானையா நவாப்புசைதுல்லா
காலுக்குத்தமான்போட்டானையா நவாப்புசைதுல்லா
இடுப்புக்குக்கச்சையிருக்கிகட்டினன் நவாப்புசைதுல்லா
அங்கிதமான்போட்டானையா நவாப்புசைதுல்லா
தலுப்பாயெடுத்துதலையில்தரித்தான் நவாப்புசைதுல்லா
கலிக்கத்துருகட்டினனையா நவாப்புசைதுல்லா
பட்டாயுருவிகையிலேபிடித்தான் நவாப்புசைதுல்லா
தனக்குவளர்த்தபட்டத்தயானையை சல்திவாசொன்னன்
ஆனைகொம்புக்குகத்திகட்டினன் நவாப்புசைதுல்லா
ஆனையைசுற்றிமுகமல்கட்டினன் நவாப்புசைதுல்லா
அம்பாரிக்குள்ளேதொட்டிற்கட்டினன் நவாப்புசைதுல்லா
ஆனையைதொட்டுசலாம்வாங்கினன் நவாப்புசைதுல்லா
வலதுகாலைதூக்கிக்கொடுத்தது பட்டத்துயானையும்
இருப்புலக்கைகையிலிருக்குது யானைக்காரனும்
அல்லாகுஅல்லாகுவென்று யானையேறினும்

நவாப்பும் மற்ற பாளையப்பட்டாரும் சேனைகளும்
சேஞ்சிக்கு சண்டைக்கு வருதல்

செஞ்சிக்கோட்டைக்குபயணமென்று நகாரடித்தானும்
கணகணகணகணகணகணவென்று நகாருமுழங்குதுபார்
பளபளபளபளபளபளவென்று பட்டாக்கள்மின்னுதுபார்
தடதடதடதடதடதடவென்று தமுறுமுழங்குதுபார்
துந்துபிபேரிகைசில்லரிசல்லரி தொந்தோமெனவே
அவுதாருமாலைவீசுகிறார்கள் நவாப்புக்கானும்
வெள்ளைவெண்சாமறைபோடுகிறார்கள் நவாப்புக்கானும்

அந்தவேளையிலென்னசெய்கிறார் ராஜாதேசிங்கு
புதுசெஞ்சியிலேபூஜைபண்ணுகிறார் ராசாதேசிங்கு
பழஞ்செஞ்சிலேகார்பார்பண்ணுகிறார் சிற்றப்பராசாவும்
அலங்கத்துமேலேறிப்பார்த்தான் சிற்றப்பராசாவும்
திடுதிடுவென்றுபயந்துநடுங்கி கீழேவிழுந்தாராம்
கீழேவிழுந்தசிற்றப்பாராஜா திட்டென்றெழுந்தாராம்


சிற்றப்பராஜன் தேசிங்குராஜனிடத்தில் வந்து சொல்லுதல்

மைந்தரருகிலோடிவந்தான் சிற்றப்பாராஜாவும்
காஞ்சிநாதரைகாவேட்டிரங்கரை பூசைபண்ணுகிறாராம்
ஸ்ரீஹரிகோவிந்தாவென்று பூசைபண்ணுகிறாராம்
கண்ணைமூடிபூசைசெய்கிறான் ராஜாதேசிங்கு
பூஜைமுகத்தில்வந்துநின்றான் சிற்றப்பாராஜாவும்
என்னபூசைபண்ணுறையடா மகனேதேசிங்கு
உன்-பூசைமுகத்தில்இடிவிழுந்தது மகனேதேசிங்கு
கோட்டையைசுற்றிவளைந்திருக்குது நவாப்புபாளையமும்
செஞ்சிகோட்டைஐந்துநாழிவழி தேவனூர்பேட்டை
தேவனூர்பேட்டைஓரத்திலே சங்கராபரணியாறு
சங்கராபரணிக்கரையில்வந்தது நவாப்புபாளையமும்
அண்ணவாடாதம்பிவாடா பங்காருநாய்க்கா நீ
தண்டுசேனையைபிடித்துபோடடா பங்காருநாய்க்கா நீ
தண்டுமுன்னேபிரித்துப்போடடா பங்காருநாய்க்கா நீ
மெத்தையின்மேல்பீரங்கியேத்து பங்காருநாய்க்கா நீ
துருப்புகுதிரைசுற்றிலும்வையும் பங்காருநாய்க்கா நீ
ஒருபளுத்தாசல்தியாதிரும் பங்காருநாய்க்கா நீ
அந்தப்படியுத்தாரங்கொடுத்தார் நவாப்புசைதுல்லா
நானொருசேதிசொல்கிறேன்கேளும் நவாப்புசைதுல்லா
ஆராருக்குப்பயணஞ்சொல்ல நவாப்புசைதுல்லா
உத்தாரங்கொடுத்தநிமிஷத்திலே பங்காருநாய்க்கனும்
சல்திசலதிபளுத்தாதீர்த்தான் தேவனூர்பேட்டையிலே
அந்தப்பளுத்தாகாதிலேகேட்டார் நவாப்புபாளையமும்
மரங்கள்மட்டைகள்தரித்துபோடுகிறார் நவாப்புபாளையமும்
தேவனூர்பேட்டையைபிடித்துபோடுகிறார் நவாப்புபாளையமும்
இனியில்லாதகொள்ளையிடுகிறார் நவாப்புபாளையமும்
சரிகைவுருமாலைவீசுகிறார் நவாப்புக்காலும்
நெருங்கிக்கொண்டுவாறானையா நவாப்புசைதுல்லா

பதிங்காதவழிபாவிபிருக்குது நவாப்புபாளையமும்
எள்ளுபோட்டாஎள்ளுவிழாது நவாப்புபாளையத்தில்
கிள்ளினமண்ணுகீழேவிழாது நவாப்புசைதுல்லா
அந்தவேளையில்எங்கேவாரூர் நவாப்புசைதுல்லா
திமிரிகோட்டையைதேடியேவாரார் நவாப்புசைதுல்லா
ஒரேதினத்தில்வந்திறங்கினனையா நவாப்புசைதுல்லா
பங்காருநாய்க்கனைபக்கமழைத்தான் நவாப்புசைதுல்லா
சம்பளம்போடுரஸ்துகள்போடு பாங்காருநாய்க்கா நீ
இறங்கிசம்பளம்கொடுத்தானையா பங்காருநாய்க்கனும்
தண்டுக்குரஸ்துபோட்டானையா பங்காருநாய்க்கனும்
அவ்விடடவிட்டுபுறப்பட்டானையா நவாப்புசைதுல்லா
ஆரணிகோட்டைதாண்டிவாரூர் நவாப்புசைதுல்லா
அவ்விடமிறங்கிகூடாரம்போட்டு நவாப்புசைதுல்லா
அன்றிராத்திரிஅங்கேவந்தான் நவாப்புசைதுல்லா
போடுபோடென்றுவாரூனையா நவாப்புசைதுல்லா
எரிஞ்சிக்கொண்டுவாரூனையா நவாப்புசைதுல்லா
பாதிபூசையைத்தள்ளிபோட்டா மகனேதேசிங்கு
தோப்புருபணத்தை கட்டியனுப்பும்மகனேதேசிங்கு
இந்தச்சேதிகாதிலேகேட்டான் ராஜாதேசிங்கு
மூடினகண்ணைதிறந்துபார்த்தான் ராஜாதேசிங்கு

தேசிங்குராஜன் சிற்றப்பாவுக்கு சொல்லல்

என்னபேச்சுபேசினீரையா சிற்றப்பாராஜாவே
அறுபதுவயதுசென்றவுமக்கு அறிவுகொஞ்சமில்லே
பூசைமுகத்தைக்கெடுக்கவேண்டாம் சித்றப்பாராஜாவே
அரைக்கால்நாழிபொறுத்துகுதிரையைதயார்பண்ணச்சொல்லு
வெள்ளரிக்காய்வீசினுற்போல வீசிப்போடுகிறேன்
பத்தல்பத்தலாய்க்கிழித்துபோடுகிறேன் நவாப்புபாளையங்களை
சக்கைசக்கையாய்சிதைத்துபோடுகிறேன் சேனைகளையெல்லாம்
அரைக்கால்நாழிபொறுத்துக்கொள்ளும் சிற்றப்பாராஜாவே
தலைதலையாயுருட்டிப்போடுகிறேன் தளங்களையெல்லாம்
கதறிபதறிசிதறிட்டோட கரிகளைவாட்டுகிறேன்
இந்தப்படிசெய்யாமற்போனல் என்பேர்தேசிங்கல்ல
டாறுடாருய்க்கிழித்துபோடுகிறேன் நவாப்பையானாலும்
ஆனல்நல்லதாகட்டுமென்றுன் சிற்றப்பாராஜாவும்



அந்தவேளையிலென்னபண்ணுகிருன் ராஜாதேசிங்கு
கண்ணைமூடிபூஜைசெய்கிருன் ராஜாதேசிங்கு [னும்
இந்தவேளையிலென்னபண்ணுகிருன் சுபங்கிதுரைதா
திருவண்ணுமலைசுபங்கிதுரையும் நவாப்புமுன்வந்தான்

சுபங்கிதுரை நவாப்பைக் கேட்குதல்

சலாமையாசலாமையா நவாப்புசைதுல்லா
நானொருசேதிசொல்கிறேன்கேளும் நவாப்புசைதுல்லா
இரண்டுநாழியிற்பிடித்துகொடுக்கிறேன் செஞ்சிகோட்டையை
மூவாயிரம்வீடுகளிருக்குது தேவனூர்பேட்டை [லா
அரைக்கால்நாழிகொள்ளைகொடுமையா நவாப்புசைதுல்
நிமிஷநேரத்தில்பிடித்துவருகிறேன் நவாப்புசைதுல்லா
மூவாயிரங்குதிரையுடனே கொள்ளைக்குப்புறப்பட்டான்

சுபங்கிதுரை தேவனூரைக் கொள்ளையிடுதல்

தேவனூர்க்குள்ளேபுகுந்தானையா சுபங்கிதுரைதானும்
இனியில்லாதகொள்ளையிடுகிருன் சுபங்கிதுரைதானும்
வீடுவாசலையிடித்துபோகிருன் சுபங்கிதுரைதானும்
மாடமண்டபமிடித்துபோடுகிருன் சுபங்கிதுரைதானும்
ஆண்சிறைபெண்சிறைதள்ளிபிடிக்கிருன் சுபங்கிதுரை
மாடுகன்றுகள்மடக்கிப்போகிருன் சுபங்கிதுரைதானும்[தானும்
பெட்டிபேழைஎடுத்துடைக்கிருன் சுபங்கிதுரைதானும்
பொன்னுவெள்ளிகள்மூட்டைகட்டுகிருன் சிப்பாய்துரைதானும்
அந்தப்படிச்சிறையழித்துப்போடுகிருன் சுபங்கிதுரைதானும்
கொள்ளையடித்துவெளியில்வந்தான் சுபங்கிதுரைதானும்
நவாப்புபாளையம்வந்துசேர்ந்தான் சுபங்கிதுரைதானும்
இந்தப்படிக்குஇருக்கிருனையா நவாப்புசைதுல்லா
தேவனூரிலேயிருந்தஜனங்கள் திகைத்தோடிஞர்கள்
காடுமலைகள்செடிகளெல்லாங் கடந்தோடிஞர்கள்
கோவென்றசத்தமாச்சுதையா செஞ்சிக்கோட்டையிலே
அந்தவேளையிலென்னசெய்கிருர் குடியானமார்களும்
தலையில்கையைவைத்து அழுகிருர்குடியானமார்களும்
அந்தவேளையிலென்னசொல்லுகிருர் ராஜாதேசிங்கு
ஸ்ரீநந்தாகோவிந்தாவென்று தோத்திரஞ்செய்கிருனும்
மங்கைலட்சுமிமணுளாவென்று மனதிலெண்ணுகிருன்
பூசைமுகத்தில்வந்துநின்ருர் குடியானமார்களும்

குடிகள் தேசிங்குராஜனிடத்தில் முறையிடுதல்

என்னபூசைபண்ணுகிறீரையா ராஜாதேசிங்கு
தேவனூரில்கொள்ளையடிக்கிறான் சுபங்கிதுரைதானும்
வீடுவாசலையிடித்துப்போட்டான் சுபங்கிதுரைதானும்
மாடுகன்றுகள்மடக்கிபோடுகிறான் சுபங்கிதுரைதானும்
அகப்பட்டசிறையைபிடித்து போட்டான்சுபங்கிதுரை
பெட்டிபோச்சுபேழைபோச்சுதுராஜாதேசிங்கு [தானும்
பெண்சாதிபோச்சுதுபிள்ளைபோச்சுது ராஜாதேசிங்கு
ரொக்கம்போச்சுதுரோசனம்போச்சுது ராஜாதேசிங்கு
நாங்களென்னமாய்பிழைக்கப்போகிறோம் ராஜாதேசிங்கு
கண்கள் நிறையதண்ணீர்விட்டார் குடியானமார்களும்
ஐயா நாங்களென்னசெய்குவோம் ராஜாதேசிங்கு
இத்தனை நாளாய்சீராய்பிழைத்தோம் ராஜாதேசிங்கு
இன்றையகஷ்திஎன்னசொல்லுவோம் ராஜாதேசிங்கு
தாமரையிலையிற்றண்ணீர்போல தவிக்குறோமையா
ஊரையுமெங்களைக்காக்கவேணும் ராஜாதேசிங்கு
கதறியழுதுபுலம்புகிறாரையா குடியானமார்களும்
அந்தப்பேச்சைக்காதிலேகேட்டான் ராஜாதேசிங்கு

தேசிங்கு குடிகளுக்குத் தேறுதலைச் சொல்லல்

பதறவேண்டாம்பதறவேண்டாம் குடியானமார்களே
என்சீமையில்தேவனூர்பேட்டை ஒருகொள்ளைபோச்சு
நவாப்புசீமையடங்கலுங்கொள்ளை யுங்களுக்குவாங்கித்தாரேன்
நமதுசீமையில்தமிழ்ச்சிறை ஒன்றுபோச்சுது
துலுக்கன்சிறையைபிடித்துதாரேன் குடியானமார்களே
ஒருகொள்ளைக்குஒன்பதுகொள்ளை நான்வாங்கித்தாரேன்
ஒன்றுக்கு நீங்களஞ்சவேண்டாம் குடியானமார்களே
பூசைமுகத்தைகெடுக்கவேண்டாம் குடியானமார்களே
ஆனால்நல்லதாகட்டுமென்று அப்புறம்போனார்கள்
கண்ணைமூடிப்பூசைபண்ணுகிறான் ராஜாதேசிங்கு
அந்தவேளையிலென்னபண்ணுகிற னவனிடதாயாதி
தேசிங்குராஜன்தயாதியையா தன்சிங்குராஜாவும்
ஒற்றைக்குதிரைபோட்டுக்கொண்டு ஓடிவந்தானெதிரே

நவாப்புஜனமும்செஞ்சியில்வந்து அலங்கமேறினாராம்
இரண்டுநாழிகையில்நவாப்பைவெட்டி இரத்தக்களறிபண்ணி
ஆற்காடுநகர்வீதியெல்லாம் அத்துவானம்பண்ணி
செஞ்சிராஜனுக்குமகுடஞ்சூட்டி சிறையைக்கொண்டுவாறேன்
நவாப்புமகளை தாலிகட்டுகிறேன் என்னைப்பெறறதாயே
கட்டாமற்போனால்நவாப்புகையில் கடுகசெத்துப்போறேன்
இன்றைக்குஞ்சாவுநாளைக்குஞ்சாவு இருக்குது தலைமேலே
பிள்ளைபிறந்தால்சண்டைமுகத்தில் பேரெடுக்கவேணும்
மைந்தன்பிறந்தாலன்னங்கொடுத்து மகிழ்ச்சியாகவேணும்
உந்தன்வயிற்றில்பிள்ளைபிறந்து ஊதாரியாவேனோ
ஆறிலுஞ்சாவுநூறிலுஞ்சாவு என்னைப்பெற்றதாயே
பிறந்தவன்றைக்கேசாவிருக்குது என்னைப்பெற்றதாயே
இரணக்களத்தில்செத்துப்போனால் நல்லபதவியுண்டு
கத்திமுனையில்சாவேனானால் கனத்தபதவியுண்டு
ஈட்டிமுனையில்சாவேனானால் இனியபதவியுண்டு
சண்டைமுகத்தில்செத்தேனேயானால் ஜல்திமோக்ஷமுண்டு
குண்டுமுககதில்செத்தேனேயானால் கோடிலாபமுண்டு
மருந்துபுகையிலேசெத்தேனானால் மகாபதவியுண்டு
என்றைக்கும்பேரிருக்கவேணும் இந்தவுலகினிலே
புல்லும்பூமியுள்ளவரைக்கும் பேரெடுக்கவேணும்
சண்டைகெலித்துவந்தேனேயானால் தாலிகட்டுகிறேன்
போரைகெலித்துவந்தேனேயானால் புகழ்ந்துகட்டுகிறேன்
மாண்டுமடிந்துபோவேனேயானால் மனதுகலங்காதே
சந்திரசூரியருள்ளவரைக்கும் தாயேபெற்றவளே
வருஷமொருதிருநாள்செய்ய மனுவுகேட்கிறேனன்
உற்றாருறவோருள்ளவரைக்கும் உருசுசெய்யவேணும்
போய்வாறேன்போய்வாறேனிப்போ புண்ணியவதிதாயே
அந்தப்பேச்சைக்காதில்கேட்டு அலறிவிழுந்தாளாம்
மைந்தன்பேச்சைக்காதில்கேட்டு மண்மேல்விழுந்தாளாம்
கங்கணக்கையைப்பார்த்துபார்த்து கதறியழுதாளாம்
மஞ்சளுடுப்பைப்பார்த்துப்பார்த்து மயங்கிவிழுந்தாளாம்
முகத்தினொளியைக்கண்டுவருந்தி மூர்ச்சையானாளாம்
கலியாணப்பெண்ணைக்கண்டுமெலிந்து கலங்கியழுதாளாம்
இந்தவிதிக்கோஇவ்வகைசெய்தோ மென்றுமெலிந்தாளாம்
சந்தோஷக்காரியந்தடங்கலாச்சுதென்று தயங்கியழுதாளாம்
பந்தலைவிட்டுவெளியேவந்தான் மோவுத்துக்காரனும்
குதிரைலாயத்தில்வந்தானையா மோவுத்துக்காரனும்
மூந்நூறுகுதிரைக்குதுடிப்பானகுதிரை நீலவேணிகுதிரை
நீலவேணியருகில்வந்தானையா மோவுத்துக்காரனும்
கழுத்துகயிற்றைகால்கயிற்றைக் கத்தியால்வெட்டினான்

மோவுத்துக்காரன் குதிரையேறுதல்

நெற்றிமயிரைப்பிடித்தானையா நீலவேணிமேலே
பிடித்தேறினமோவுத்துக்காரனைக் கண்ணாலேகண்டது
பரதநாட்டியமாடிவருகுது நீலவேணிகுதிரை
கண்ணிற்கண்டான் கோபமாச்சுதுமோவுத்துக்காரனும்
கோபத்தினாலேசிமிட்டாகொடுத்தான் நீலவேணிக்கு
பின்னாலேவிழுந்துபோகுதுபாரு நீலவேணிகுதிரை
குதிரையைவிட்டுக்கீழேகுதித்தான் மோவுத்துக்காரனும்
என்னமோசம்பண்ணினையடா நீலவேணியேநீ
நவாப்புமேலேசண்டைக்குப்போறேன் நீலவேணியேநான்
சண்டைகெலித்துவந்தேனேயானால் நீலவேணியேநீ
தங்கத்தாலேஜீனிபோடுகிறேன் நீலவேணியேநான்
என்று-நீலவேணிக்குச்சலாம்வாங்கினான் மோவுத்துக்காரனும்
சலாம்வாங்கிதிரும்பினானையா நீலவேணிமேலே
மேகம்போலபறக்குதையா நீலவேணிகுதிரை
குதிரைக்கனைப்புதெரிந்தநாழிக்கு குதிரைதெரியவில்லை
கத்திமின்னல்தெரிந்தநாழிக்கு அவனேதெரியவில்லை
கோட்டையைச்சுற்றிவளைத்திருக்குது நவாப்புபாளையமும்
நவாப்புபாளையங்கண்ணாலேகண்டான் மோவுத்துக்காரனும்
கலகலவென்றுசிரித்தானையா மோவுத்துக்காரனும்
பாளையஞ்சுற்றிபோவோமென்றால் இரண்டுநாழிசெல்லும்
பாளையங்குறுக்கேபோறானையா நீலவேணிமேலே
ஒற்றைக்குதிரையைக்கண்ணாலேகண்டார் நவாப்புபாளையத்தில்
மூந்நூறுகுதிரையைக்கண்ணாலேகண்டான்மோவுத்துக்காரனும்
இடதுகாலுக்குச்சிமிட்டாகொடுத்தான் நீலவேணிக்கு
கரகரவென்றுசுழலுதுபாரு நீலவேணிகுதிரை
கால்கயிற்றைக்கழுத்துக்கயிற்றை அவிழ்க்கநேரமில்லை
இடதுகாலுக்குச்சிமிட்டாகொடுத்தான் நீலவேணிக்கு
சிமிட்டாகொடுத்தநிமிஷநேரத்தில் நீலவேணிகுதிரை
தாண்டிதாண்டிதரைமண்டலங்கொண்டது நீலவேணிகுதிரை
ஆறுகுளங்கள்தாண்டிவிழுகுது நீலவேணிகுதிரை
போடுபோடென்றுபோகுதையா நீலவேணிகுதிரை
லகானுமில்லைஜீனியுமில்லை நீலவேணிகுதிரை
குறடாயில்லைசேர்ப்பந்தில்லை நீலவேணிகுதிரை
கால்கயிற்றோடேஓடிவருகுது நீலவேணிகுதிரை
கழுத்துக்கயிற்றோடேஓடிவருகுது நீலவேணிகுதிரை
பெரியபெரியகல்லுகளெல்லாம் புரண்டுபோகுதுபார்
சின்னசின்னகல்லுகளெல்லாம் செந்தூளாகுதுபா
காடுமலைகள்செடிகளெல்லாம் கலங்கிநடுங்குதுபார்


காற்றுப்போலவேபறந்துவருகிறது நீலவேணிகுதிரை
குதிரைசுழன்றநிமிஷநாழிகைக்குள் மூந்நூறுகுதிரையும்
கரணைகரணையாய்விழுந்துபோச்சு நவாப்புபாளையமும்
அல்லோகல்லோமாகுதையா நவாப்புபாளையமும்
கட்டியிருந்தகுதிரையெல்லாம் அறுத்துக்கொண்டோடுது
சோறுதின்றசிப்பாய்மார்களும் பதுங்கியோடினார்கள்
பாராயிருக்கிறசிப்பாய்மார்களும் பதுங்கியோடினார்கள்
ஓடுகிறபேரைக்கண்ணால்கண்டான் மோவுத்துக்காரனும்
இடதுகாலுக்குச்சிமிட்டாகொடுத்தான் நீலவேணிக்கு
நடுவேவிட்டுபிளந்தானையா நவாப்புபாளையத்தை
இவனைஎதிர்ப்பாரொருவருமில்லை நவாப்புபாளையத்தில்
இரண்டுநாழிக்குள்வந்துசேர்ந்தான் செஞ்சிகோட்டைக்குள்ளே
சிங்காரமாலில்வந்தானையா மோவுத்துக்காரனும்
குதிரைவிட்டுக்கீழேகுதித்தான் மோவுத்துக்காரனும்
இராஜாபேட்டிக்குவாரானையா மோவுத்துக்காரனும்
மண்டிபோட்டுசலாம்வாங்கினான் மோவுத்துக்காரனும்
என்னகாரியம்பண்ணினீரையா இராஜாதேசிங்கு
இத்தனைமறதியுனக்கேனையா இராஜாதேசிங்கு
இரண்நாழிக்குமுன்னேசொன்னால் நான்வரமாட்டேனோ
இத்தனைநாழிநவாப்புஜனமும் இங்கேயிருக்குமா
சல்திசல்தியுத்தாரந்தாரும் இராஜாதேசிங்கு
கலகலவென்றுசிரித்தானையா இராஜாதேசிங்கு
கண்ணாலேகண்டான்கோபமாச்சுது இராஜாவுக்கானும்
என்னகாரியம்பண்ணினையடா மோவுத்துக்காரனே
கல்யாணவுடுப்புகட்டியிருக்கிறாய் மோவுத்துக்காரனே
கங்கணங்கையிற்கட்டியிருக்கிறாய் மோவுத்துக்காரானீ
கஸ்தூரிசந்தனம்பூசியிருக்கிறாய் மோவுத்துக்காரானீ
தாலிகட்டிவந்தாயோயில்லையோ மோவுத்துக்காரானீ
சல்திசல்திசொல்லுமென்றான் இராஜாதேசிங்கு
அந்தப்பேச்சைக்காதில்கேட்டான் மோவுத்துக்காரனும்
என்னபேச்சுபேசினீரையா இராஜாதேசிங்கு
கத்திபிடித்தசிப்பாய்மாருக்கு பெண்டாட்டியென்னத்திற்கு
நானொருபெண்ணைதாலிகட்டுவேனோ இராஜாதேசிங்கு
நவாப்பைவெட்டிநவாப்புமகளைத் தாலிகட்டவேணும்
ஆற்காட்டில்கலியாணம்பண்ணுகிறேன் இராஜாதேசிங்கு
என் கலியாணத்திற்குநீவரவேணும் இராஜாதேசிங்கு
நல்லதந்தபேச்சிருக்கட்டும் இராஜாதேசிங்கு
நீர்வாநீரோநான்போகட்டுமா இராஜாதேசிங்கு
சல்திசல்தியுத்தாரந்தாரும் இராஜாதேசிங்கு
கனைத்துக்கதும்பிஎழுந்தானையா மோவுத்துக்காரனும்

அந்தப்பேச்சைக்காதிலேகேட்டான் இராஜாதேசிங்கு
சந்தோஷம்வந்துமூண்டுகொண்டது இராஜாவுக்காளும்
மோவுத்துக்காரனைக்கிட்டவழைத்து கையைப்பிடித்தானும்
கையைப்பிடித்துத்தழுவினனையா இராஜாதேசிங்கு
ஐயாகேளுமையாகேளும் மோவுத்துக்காரனே
ஒருவனய்சண்டைபோடவேண்டாம் மோவுத்துக்காரனே
நானுங்கூடவருகிறேனப்பா மோவுத்துக்காரனே
இன்னொருசேதிசொல்கிறேன்கேளும் மோவுத்துக்காரனே
நான்-கலியாணம்பண்ணிமூன்றுவருஷம் மோவுத்துக்காரனே
பெண்சாதிமுகத்தைப்பார்த்துவாறேன் மோவுத்துக்காரனே
ஆனல்நல்லதாகட்டுமென்றான் மோவுத்துக்காரனும்
அந்தநாழிக்கேயோடிவந்தான் இராஜாதேசிங்கு
சிற்றப்பராஜாகிட்டேவந்தான் இராஜாதேசிங்கு
ஐயாகேளும்ஐயாகேளும் சிற்றப்பராஜாவே
நவாப்புமேலேசண்டைக்குப்போகிறேன் சிற்றப்பராஜாவே
நான்-மனைவிமுகத்தைபார்த்துப்போகிறேன் சிற்றப்பராஜாவே
அந்தப்பேச்சைக்காதில்கேட்டான் சிற்றப்பராஜாவும்
என்னகாரியம்பண்ணினயடா குழந்தைதேசிங்கு
நீபிறந்ததுவெள்ளிக்கிழமை மகனேதேசிங்கு
இராணிபிறந்ததுவெள்ளிக்கிழமை மகனேதேசிங்கு
உன்-குதிரைபிறந்ததுவெள்ளிக்கிழமை மகனேதேசிங்கு
சண்டைபிறந்ததுவெள்ளிக்கிழமை மகனேதேசிங்கு
இந்த-நாளும்பிறந்ததுவெள்ளிக்கிழமை மகனேதேசிங்கு
இன்றைக்கிருந்துநாளைக்குப்போனல் மகனேதேசிங்கு
சண்டைகெலித்துவருவாயடா மகனேதேசிங்கு
அந்தப்பேச்சைக்காதில்கேட்டான் இராஜாதேசிங்கு
கலகலவென்றுசிரித்தானையா சிப்பாய்தேசிங்கு
என்னபேச்சுபேசினீரையா சிற்றப்பராஜாவே
நானொருசேதிசொல்லுகிறேன்கேள் சிற்றப்பராஜாவே
இத்தனைநாளும்நவாப்புஜனங்கள் இங்குவந்ததோ
இப்போ-கோட்டைசுற்றிவளைந்திருக்குது நவாப்புபாளையமும்
கோட்டைகொள்ளையடித்தாரையா சிற்றப்பராஜாவே
இரங்கர்கோயிலில்துலுக்கன்புகுந்தால் சும்மாயிருப்பேனே
டாறுடாறய்க்கிழித்துப்போடுகிறேன் நவாப்புப்பாளையத்தை
நவாப்பைவெட்டிசெஞ்சிக்குவாறேன் சிற்றப்பராஜாவே
இராஜகுலத்தில்நான்பிறந்தேன் ரோஷக்காரனுக
ஆறிலுஞ்சாவுநூறிலுஞ்சாவு சிற்றப்பராஜாவே
பிறந்தவன்றைக்கேசாவிருக்குது சித்றப்பராஜாவே
நான்-முன்வைத்தகாலைப்பின்வைப்பேனே சிற்றப்பராஜாவே
அந்தப்பேச்சைக்காதில்கேட்டான் சிற்றப்பராஜாவும்

என்னபேச்சுபேசினுயடா மகனேதேசிங்கு
என்வார்த்தையைநீகேட்கிறதில்லே மகனேதேசிங்கு
உன்னையெடுத்துயானும்வளர்த்தேன் மகனேதேசிங்கு
உந்தனிடசோறுநான் தின்னவில்லே மகனேதேசிங்கு
எந்தன்சோறுநீயேதின்ருய் மகனே தேசிங்கு
ஆறுமாதமாகாதென்று நம்மிடகுருசொன்னுர்
மூன்றுமாதமாச்சுதடா மகனேதேசிங்கு
இன்னம்-மூன்றுமாதம்போகவேணும் மகனேதேசிங்கு
அவ்வார்த்தையைக்காதில்கேட்டான் இராஜாதேசிங்கு
கண்கள்சிவந்துகோபமாச்சுது இராஜாவுக்கானும்
கோபம்வருவதைக்கண்ணுல்கண்டான் சிற்றப்பராஜாவும்
நானெருபேச்சுச்சொல்கிறேன்கேளும் மகனேதேசிங்கு
நடுவில்திரையைப்போடச்சொல்லும் மகனேதேசிங்கு
அந்தப்பேச்சைக்காதில்கேட்டான் இராஜாதேசிங்கு
ஆனல்நல்லதாகட்டுமென்ருன் சிப்பாய்தேசிங்கு

தேசிங்குராஜன் இராணியிடம் வருதல்

பெரியஅரண்மனைவாராணையா இராஜாதேசிங்கு
ராணியரண்மனைவந்துநின்ருன் இராஜாதேசிங்கு
அதற்குமுன்னமேதிரைகட்டினுர் சோபுதார்மார்களும்
சோபுதார்மாரைக்கண்ணுல்கண்டான் ராஜாதேசிங்கு
சல்திசல்திராணியையழையும் சோபுதார்மார்களே
என்றவுடனேசோபுதார்மார்கள் சிதைந்தோடினுர்கள்
அழைத்துமன்னன்ராணியைநீங்கள் கூட்டிவாவெனவே
நல்லதென்றுதாதிமார்கள் நடந்தார்களப்போது
அம்மாகேளும்அம்மாகேளும் எங்கள்மாதாவே
எங்களையாளும்ராஜாவிப்போ உங்களையழைக்கச்சொன்னுர்
இந்தச்செய்திகாதிலேகேட்டாள் ராணியம்மாளும்
மயிலேக்குயிலேமருளச்செய்யும் மாதுராணியம்மாள்
அன்னநடையைபின்னிடையச்செய்யும் அன்னராணியம்மாள்
சந்தோஷங்கள்மிகவுண்டாகி சரீரம்பூரித்தாள்
மெத்தமனதிலாச்சரியமாக வியப்புத்தான்கொண்டாள்
இராஜனழைத்தகாரியமறிய நாலமாயெழுந்திருந்தாள்
சிங்காதனம்விட்டுக்கீழேகுதித்தாள் ராணியம்மாளும்
மஞ்சநீர்சாலேயில்ஸ்நானஞ்செய்தாள் சுந்தரராணியம்மாள்
சுத்தஜலத்தில்ஸ்நானஞ்செய்தாள் கனகராணியம்மாள்
இந்திரவர்னப்பட்டுடுத்தினுள் எங்கள்ராணியம்மாள்
சீவிவகுத்துகொண்டையிட்டாள் திகழும்ராணியம்மாள்
வண்ணவிழிக்குமையிட்டாளே மாதுராணியம்மாள்
சந்திரபிறைபோல்பொட்டுமிட்டாள் தங்கராணியம்மாள்



கச்சையிறுக்கிமுடிந்தாளையா காதலிராணியம்மாள்
ரத்தினத்தாலேகொங்குமல்லிகை நாயகிமார்தரித்தார்
முத்துக்குச்சுகொப்புதொங்கல் முடியதொங்கவிட்டாள்
ரவைகளிழைத்தகம்மல்ஜிமிக்கை நற்கொப்புமயிர்மாட்டி
நானிலம்புகழும்கத்திரிப்பாவல் நலமாய்தரித்தார்கள்
கண்டசரங்கள்பொன்னின்வளையல் கையிற்றரித்தார்கள்
இடையில்ஒட்டியாணம்பலவிதகொலுசு இனிதாய்மாட்டினார்கள்
கலகலெனசுருள்கொலுசு காலில்கொஞ்சிடவே
அரசனிருக்குமரண்மனைக்குள் வாருள்ராணியம்மாள்
திரைக்கப்பாலேவந்துநின்றாள் ராணியம்மாளும்
கலகலவென்றிடுஞ்சத்தம்ராஜன் காதில்கேட்டானே
திரையைக்கண்டுகோபங்கொண்டாள் ராணியம்மாளும்
என்னையழைத்தகாரியமென்ன நடுவிலேதிரையென்ன
அந்தப்பேச்சைக்காதிலேகேட்டான் ராஜாதேசிங்கு
நானொருசேதிசொல்லுகிறேன்கேள் எந்தன்ராணியே
நவாப்புமேலேசண்டைக்குப்போறேன் எந்தன்ராணியே
உமக்குச்சொல்லிபோகவந்தேன் எந்தன்ராணியே
சல்திசல்தியுத்தாரந்தாரும் எந்தன்ராணியே
அந்தப்பேச்சைகாதிலேகேட்டாள் ராணியம்மாளும்
என்னபேச்சுபேசினீரையா என்பிராணநாதா
ஐந்துவருஷசண்டைசெய்யலாம் நமதுகோட்டைக்குள்
கோட்டையைவிட்டுபோகவேண்டாம் என்பிராணநாதா
இந்தச்சேதிகாதில்கேட்டான் இராஜாதேசிங்கு
என்னபேச்சுபேசினயடி எந்தன்கண்மணியே
பெண்புத்திசண்டைக்கேற்குமோ என்பிராணநாயகியே
நானிப்போதேபோய்வருகிறேன் என்பிராணநாயகியே
கலியாணம்பண்ணிமூலையில்வைத்தீர் என்பிராணநாதா
நான்-சந்தோஷசுகமொன்றுமறியேன் என்பிராணநாதா
நீர்-சண்டைக்குப்போகவேண்டாமையா என்பிராணநாதா
எந்தன்பேச்சுதடுத்துபோமீர் என்பிராணநாதா
சண்டைசெய்துஜெயிக்கமாட்டீர் என்பிராணநாதா
இந்தசவுரியமிருக்கவேண்டும் என்பிராணநாதா
சண்டைக்குப்பயந்துவந்தீரானால் என்பிராணநாதா
கோட்டைக்கதவைசாத்திப்போடுவேன் என்பிராணநாதா
அலங்கத்துமேல்பீரங்கியேற்றுவேன் என்பிராணநாதா
அடியோடேகொளுத்திபோடுவேன் என்பிராணநாதா
ஆனல்சுகமாய்போய்வாரும் என்பிர்ராணநாதா
கலவலவென்றுசிரித்தானையா ராஜாதேசிங்கு
நானொருபேச்சுசொல்கிறேன்கேளும் எந்தன்ராணியேநீ
எந்தன்மேலேகோபம்வேண்டாம் என்பிராணநர்யகியே

நானிப்போதேபோய்வருகிறேன் பிராணநாயகியே
கோட்டைபத்திரம்பார்த்துக்கொள்ளும் எந்தன்ராணியே
அந்தப்பேச்சைகாதிலேகேட்டாள் ராணியம்மாளும்
பாக்குவெற்றிலைகையிலேபிடித்தாள் ராணியம்மாளும்
திரைக்குள்ளேகைநீட்டினரையா ராஜாதேசிங்கு
பாக்குவெற்றிலைகையில்கொடுக்க ராணியம்மாளும்
இராஜன்கையைஉள்ளுக்கிழுத்தாள் ராணியம்மாளும்
கையைப்பார்த்துஅழுகிறாளையா ராணியம்மாளும்
என்னகாரியம்பண்ணினீரையா என்பிராணநாதா
பாபிநான்செய்தபாபமிதுதானோ என்பிராணநாதா
என்தலையெழுத்துயிப்படியிருக்குதோ என்பிராணநாதா
கையையெடுத்துகண்ணில்ஒத்தினள் ராணியம்மாளும்
கதறியழுதுபுலம்பினளையா ராணியம்மாளும்
கண்ணீர்ஜலமுங்கையிலேகண்டான் ராஜாதேசிங்கு
என்னகாரியம்பண்ணினயடி எந்தன்ராணியே
நானிப்போதேபோய்வருகிறேன் எந்தன்ராணியே
ராணிவார்த்தையைவிட்டுவாறான் ராஜாதேசிங்கு

தேசிங்கு ராணியிடம்விட்டுக் கோலுவுக்கு வருதல்

சிங்காரமாளிகையில்வந்தானையா ராஜாதேசிங்கு
கண்ணையுருட்டிக்கதும்பினனையா ராஜாதேசிங்கு
சல்திசல்திகுதிரைகொண்டுவாரும் அர்க்காருமார்களே
சலாம்வாங்கித்திரும்பினரையா அர்க்காருமார்களும்
குதிரைலாயத்தில்வந்தாரையா அர்க்காருமார்களும்
குதிரைப்பாகரைக்கண்டுசொல்கிறார் அர்க்காருமார்களும்
சல்திசல்திகுதிரைகொண்டுவா குதிரைப்பாகாரே
ஆனல்நல்லதாகட்டுமென்றார் குதிரைப்பாகரும்
நாலுகாலுவண்டயம்போட்டார் பாருசாரிக்கு
நடுவிலேசுங்குவிட்டாடையா பாருசாரிக்கு
கழுத்திலேசரம்போட்டாரையா பாருசாரிக்கு
கன்னத்துக்குக்கண்ணடிகட்டினரையா பாருசாரிக்கு
தங்கத்தாலேஜீனிபோட்டார் பாருசாரிக்கு
வாய்க்குத்தங்கக்கடிவாளம்போட்டார் பாருசாரிக்கு
குதிரையைக்கொண்டுநிறுத்தினரையா குதிரைப்பாகரும்

தேசிங்குராஜன் குதிரை வந்ததைக் காணல்

குதிரைவந்ததைக்கண்ணாலேகண்டான் ராஜாதேசிங்கு
தனக்கென்றுவளர்த்தபாராசாரியை முன்னேவரச்சொன்னான்
முன்னேவந்துநிற்குதையா பாருசாரியும்
குதிரைக்குச்சேதிசொல்கிறானையா இராஜாதேசிங்கு

நவாப்புமேலேசண்டைக்குப்போறேன் பருசாரியே
சண்டைகெலித்துவந்தேனேயானல் பருசாரியே
தங்கத்தால்முத்துதுருபோடுகிறேன் பருசாரியே

குதிரை விசனப்படல்

சகிருமென்றுதெரியுதையா பாருசாரிக்கு
கோடுகோடென்று அழகுதையாபாருசாரியும்
தரையைத்தரையைப்பார்க்குதந்த பாருசாரியும்
பூமியிற்காலைபுரட்டுதந்த பாருசாரியும்
வாயைச்சும்மாமெல்லுதந்த பாருசாரியும்
மிரளமிரளக்கண்ணைசுழட்டுது பாருசாரியும்
தேகம்படபடவென்றுநடுங்குது பாருசாரிக்கு
வாலைச்சுழட்டிவிசிறிதட்டுது பாருசாரிகுதிரை
குதிரைமுகத்தைக்கண்ணாலேகண்டான் ராஜாதேசிங்கு

தேசிங்கு பாருசாரிக்கு திட்டஞ் சோல்லல்

என்னகாரியம்பண்ணினையடா பாருசாரியே
பன்னீராயிரம்வராகன்கொடுத்து உன்னைவாங்கினேனே
முப்பதினாயிரம்வராகன்தின்றாய் பாருசாரியே
தண்ணீர்வைத்தாலாகாதென்று சாருயம்வைத்தேனே
கொள்ளுவைத்தாலாதென்று கடலைவைத்தேனே
மெத்தைபோட்டுவளர்த்தேனுன்னை பாருசாரியே
ஆயிரங்கட்டுபுல்லிலேநல்ல ஒருகட்டுபுல்லையும்
பொறுக்கிபோட்டுவளர்த்தேனடா பாருசாரியே
சாகத்தானுபயப்பட்டாய்நீ பாருசாரியே
ஆறிலுஞ்சாவுநூறிலுஞ்சாவு பாருசாரியே
பிறந்தவனிறக்கேசாவிருக்குது பாருசாரியே
சண்டைமுனையில்செத்தோமானல் பாருசாரியே
சல்திமோக்ஷங்கிடைக்குமடா பாருசாரியே
நீ-செத்தவிடத்திலேநானுஞ்சாகிறேன் பாருசாரியே
ஒன்றுக்குமஞ்சவேண்டாம்நீ பாருசாரியே
அந்தப்பேச்சைக்காதில்கேட்டது பாருசாரியும்

பாருசாரி தைரியம் கோள்ளல்

சந்தோஷமாகக்கனைத்ததுபாரு பாருசாரியும்
ராஜன்முன்னேவந்துநின்றது பாராசாரியும்
நெற்றிமயிரைபிடித்தானையா பாராசாரியை
வெள்ளிசமக்காளம்போட்டானையா பாராசாரிக்கு
லகானையிழுத்துகையிலேபிடித்தான் ராஜாதேசிங்கு
நாராயணாகோவிந்தாவென்று குதிரைஏறினனும்

அவ்வேளையிலென்னபண்ணுகிறான் சிற்றப்பராஜாவும்
சிற்றப்பதுரைதரணிசிங்கும் குதிரைஏறினானும்
இராமுசிங்குலட்மணசிங்கு குதிரைஏறினானும்
இராமுதாரிலட்மணதாரி குதிரைஏறினானும்
மான்சிங்குகிரிபுசிங்கு குதிரைஏறினானும்
பேட்டைசிப்பாய்மோவுத்துக்காரனும் குதிரைஏறினானும்
மூந்நூறுகுதிரைபுறப்பட்டதையா ராஜன்முன்னாலே
இடதுகாலுக்குசிமிட்டாகொடுத்தான் பாருசாரிக்கு
சுற்றிவந்துசவாரிவாங்குது பாருசாரியும்
பரதநாட்டியமாடிவருகுது பாருசாரியும்
அந்தவேளையிலென்னபண்ணுகிறான் ராஜாதேசிங்கு
குதிரையைவிட்டுகீழேகுதித்தான் சிப்பாய்தேசிங்கு
கோயில்மடப்பளிபுகுந்தானையா ராஜாதேசிங்கு
என்னென்னவகையெடுத்தானையா ராஜாதேசிங்கு
புனுகுசவ்வாதுஅத்தர்சவ்வாது கையிலேபிடித்தானும்
வெட்டிவேருமருக்கொழுந்து கையிலேபிடித்தானும்
கண்டமாலைதண்டமாலை கையிலேபிடித்தானும்
பொன்னின்செம்பிலேபன்னீரங்கே நெற்றியிலிட்டானும்
பொன்னிலேதிருமணியங்கே நெற்றியிலிட்டானும்
தூங்காவிளக்கையேற்றிவைத்தான் இராஜாதேசிங்கு
நானொருசேதிசொல்கிறேன்கேளும் ரங்கநாதரே
நவாப்புமேலேசண்டைக்குப்போறேன் ரங்கநாதரே
சண்டைகெலிக்கவுத்தாரந்தாரும் ரங்கநாதரே
சண்டைகெலித்துவந்தேனானால் ரங்கநாதரே
தங்கத்தாலேகலசம்வைக்கிறேன் ரங்கநாதரே
சண்டைமுனையில்தப்பித்துக்கொள்ள ரங்கநாதரே
எனக்குநல்லவரந்தரவேணும் ரங்கநாதரே
நன்மைதுன்மையிரண்டுமெந்தன் கண்ணிற்காட்டாயோ
நாராயணாகோவிந்தாவென்று நாடிவிழுந்தானும்
நந்தகோபாலாவென்று சேவடிதொழுதானும்
பக்தவச்சலாகேசவாவென்று காலில்விழுந்தானும்
சங்குசக்ரகோதண்டாவென்று சரணஞ்செய்தானும்
மதுசூதனதாமோதராவென்று மலரடிபணிந்தானும்
கரிமுறைபயந்தீர்த்தவாவென்று கழலில்பணிந்தானும்
இப்படியாகதோத்திரஞ்செய்து இருகரந்தனைக்கூப்பி
சரணஞ்செய்துஎதிரிலேநின்றானும் இராஜாதேசிங்கு

தேசிங்குராஜன் சகுனம் காணல்

என்னசகுனமாகுதையா இரங்கர்கோவிலிலே
கண்டமாலைதண்டமாலை கருகிப்போயிற்று

கழுத்திலிருந்தமுத்தாரங்கள் கழன்றுவிழுந்ததுபார்
கண்ணில்நிறையதண்ணீர்சொரியுது ரங்கநாதருக்கு
மார்பின்மீதுகண்ணீரோடுது ரங்கநாதருக்கு
அத்தர்சவ்வாதுபன்னீரங்கே கரைந்துவிழுந்தது
நெற்றியிலிருந்ததிருமணியப்போ திலத்தில்விழுந்ததுபார்
கழுத்திலிருந்ததுளசிமாலை சுழன்றுவிழுந்ததுபார்
ஏற்றிவைத்ததிருவிளக்கங்கே திட்டென்றுவிழுந்ததாம்
எதிரிலிருந்தகோபுரமங்கே இடிந்துவிழுந்ததாம்
பக்கத்திலிருந்தலட்சுமியங்கே பதறிவிழுந்தாளாம்
எதிரிலிருந்தகருடஸ்தம்ப மிரண்டாய்விழுந்ததுபார்
கிழக்குமுகத்திலிருந்தசாமி மேற்குத்திரும்பினராம்
இத்தனை சகுனங்கண்ணாலேகண்டான் இராஜாதேசிங்கு
கோபம்வந்துமூண்டுக்கொண்டது ராஜாவுக்கனும்
உனக்கென்னகேடுவந்தது சாமி ரங்கநாதரே
நானல்லவோபயப்படவேண்டும் ரங்கநாதரே
நீர்சொன்னல்பயப்படவேண்டுமோ ரங்கநாதரே
நான்-முன்வைத்தகாலைபின்வைப்பேனே ரங்கநாதரே
நீ-சாகவுமாட்டாய்பிழைக்கவுமாட்டாய் ரங்கநாதரே
ஒரேஜெனனமெடுத்தீரையா ரங்கநாதரே
இன்னெருசேதிசொல்கிறேன்கேளும் ரங்கநாதரே
நானிப்போதேபோய்விடுகிறேன் ரங்கநாதரே
என்னை-அநியாயமாய்க்கொல்லவேண்டாம் ரங்கநாதரே
முடிவுசண்டையில்கொல்லுமையா ரங்கநாதரே
நாளை-செத்தாலும்பிழைத்தாலும் ரங்கநாதரே
உன்பாதத்திற்சேர்த்துக்கொள்ளும் ரங்கநாதரே
கும்பிட்டுக்கொண்டுவந்தானையா ராஜாதேசிங்கு
கோயிற்வெளியில்வந்தானையா ராஜாதேசிங்கு
கண்ணையுருட்டிக்கதும்பினனையா ராஜாதேசிங்கு
பன்னிரண்டங்குபடிவைத்தகுதிரை முன்னுக்குவந்தது
நாராயணாகோவிந்தாவென்று அசுவமேறினனும்
அச்சுதாபரந்தாமாவென்று அசுவமேறினனும்
இரங்கர்கோயிலைவலமாகவந்தான் ராஜாதேசிங்கு
இடதுகாலுக்குசிமிட்டகொடுத்தான் ராஜாதேசிங்கு
போடுபோடென்றுபோருனையா ராஜாதேசிங்கு
கோட்டையைவிட்டுவெளியேவந்தான் ராஜாதேசிங்கு
பாராசாரியைக்கண்ணாலேபார்த்து நவாப்புபாளையமும்
அல்லோகல்லோலமாகுதையா நவாப்புபாளையமும்
கள்ளக்குறிச்சிக்கோடிபோகுது நவாப்புபாளையமும்
திருவண்ணாமலைக்கோடிபோகுது நவாப்புபாளையமும்
கணவாக்குறிஞ்சிக்கோடிபோகுது நவாப்புபாளையமுல்

புலியாயிருந்தபாளையமெல்லாம் பூனையாய்ப்போச்சுது
மூக்காதவழிக்குப்பரவியிருக்குது நவாப்புபாளையமும்
அந்தவேளையிலென்னசெய்கிறான் பங்காருநாய்க்கனும்
நவாப்பருகேவோடிவந்தான் பங்காருநாய்க்கனும்

பங்காரு நாய்க்கன் நவாப்புக்கு சேதி சொல்லல்

சலாமையாசலாமையா நவாப்புசைதுல்லா
நானொருசேதிசொல்கிறேன்கேளும் நவாப்புசைதுல்லா
எமனைப்போலேவாறானையா ராஜாதேசிங்கு
சிங்கம்பபாலேவாறானையா ராஜாதேசிங்கு
புலியைப்போலேவாறானையா ராஜாதேசிங்கு
யானைப்போலேவாறானையா ராஜாதேசிங்கு
வருமுன்னேவீசிப்போடுவான் ராஜாதேசிங்கு
இதற்கொருவுபாயஞ்சொல்கிறேன்கேள் நவாப்புசைதுல்லா
ஆலமரமுழுகியிருக்குது தாழனூர்ஏரியிலே
பனைமரமுழுகியிருக்குது மலையனூர்ஏரியிலே
பதின்காதவழிக்குபரவியிருக்குது இரண்டுஏரிதண்ணீர்
இரண்டையும்வெட்டிதிருப்புகிறேன் சங்கராபரணியிலே
தண்ணீர்மேலேவரமாட்டான் ராஜாதேசிங்கு
சாவகாசமாய்ப்போகலாமையா நவாப்புசைதுல்லா
அந்தப்பேச்சைக்காதில்கேட்டான் நவாப்புசைதுல்லா

நவாப்பு பங்காரு நாய்க்கனுக்கு ஏரியை வெட்ட
உத்தரவு கொடுத்தது

மாறுமாறென்றுஉத்தாரங்கொடுத்தான் நவாப்புசைதுல்லா
சலாம்வாங்கிதிரும்பினானையா பங்காருநாய்க்கனும்
ஐந்துபேர்வேலைக்காரரை கூட்டிப்போனனும்
ஏரிக்கரைமேலேவந்தானையா பங்காருநாய்க்கனும்
கீழ்மண்ணுமேல்மண்ணுகுது சங்கராபரணியிலே
தலைக்குமேல்ஓராள்பரியந்தம் தண்ணீரோடுகுது
பாம்புபோலபுரண்டுவருகுது சங்கராபரணியிலே
பாளையத்தில்வந்தானையா பங்காருநாய்க்கனும்
ஏரியைவெட்டிநவாப்புபாளையம் வந்துசேர்ந்தானும்
வருகுமுன்னேதயார்பண்ணினான் பங்காருநாய்க்கனும்
திருவண்ணமலைசுபங்கிதுரையும் முன்னேவந்தானும்
இரண்டாங்கணவாயவுள்தாரையா மோவுத்துக்காரனும்
மூன்றாங்கணவாவல்லிகொண்டான் அப்துல்காதரும்
நாலாங்கணவாயெட்டியாபுரம் பாளையக்காரனும்
ஐந்தாங்கணவாசெங்கற்பட்டு பாளையக்காரனும்
ஆறாங்கணவாயரியலூரு பெரியதுரைதானும்

ஏழாங்கணவாபாஞ்சாலக்குறிச்சி பாளையக்காரனும்
எட்டாங்கணவா ஆரணிக்கோட்டை வெங்கடராயரும்
ஒன்பதாங்கணவாயூகம்வகுத்தான் ஷேக்குமூகம்மதையா
பந்தோபஸ்தாயிருக்குதையா நவாப்புபாளையமும்
பாளையநடுவிலிருக்கிறானையா நவாப்புசைதுல்லா
அந்தவேளையிலென்னபண்ணுகிறான் ராஜாதேசிங்கு
நவாப்பெங்கேயெங்கேயென்று இவனும்வந்தானும்
பக்கத்திலிருக்கும்சமேதார்மாரை கண்ணாலேகண்டானும்

தேசிங்குராஜன் சேனைகளுக்குச் சொல்லல்

அண்ணமாரேதம்பிமாரே சமேதாருமாரே
நானொருசேதிசொல்கிறேன்கேளும் சமேதாருமாரே
எனக்குத்தெய்வபலமில்லையடா சமேதாருமாரே
என்கைபலங்கொண்டுபோறேனடா சமேதாருமாரே
பாலுஞ்சோறுதின்கிறவரானால் செஞ்சிக்குப்போங்களடா
இரத்தஞ்சோறுதின்கிறவரானால் என்பின்னேவாங்களடா
பெண்சாதிமுகத்தில்விழியாதவரானால் என்பின்னேவாங்களடா
சண்டைபண்ணிகெலித்தோமானால் சல்திமோக்ஷமுண்டு
போர்க்களத்தில்செத்தோமானால் புகழுங்கீர்த்தியுண்டு
இரணக்களத்தில்செத்தோமானால் நல்லபதவியுண்டு
சாவுக்கென்றுபயப்படவேண்டாம் சமேதாருமாரே
சல்திசல்திவாருமென்றான் இராஜாதேசிங்கு
சங்கராபரணிக்கரையிலேவந்தான் ராஜாதேசிங்கு
ஆற்றிலேதண்ணீர்வருவதைக்கண்டான் ராஜாதேசிங்கு
சிற்றப்பன்முகத்தைத்திரும்பிப்பார்த்தான் ராஜாதேசிங்கு

தேசிங்குராஜன் சிற்றப்பனுககுச் சொல்லல்

இரண்டுநாழிகைக்குமுன் தண்ணீரில்லையேசிற்றப்பராஜாவே
இப்போது-தண்ணீர்வந்தவயணமென்ன சிற்றப்பராஜாவே
ஐயாகேளுமையாகேளும் ராஜாதேசிங்கு
நானொருசேதிசொல்கிறேன்கேளும் ராஜாதேசிங்கு
இந்தசீமைக்கொள்ளைக்காரன் பங்காருநாய்க்கனும்
தாழனூரேரிமலையனூரேரி தள்ளிவெட்டினனும்
இரண்டுதண்ணீரும்வருகுதடா மகனேதேசிங்கு
இரண்டுநாழியில்வற்றிப்போகுது இந்தஏரிதண்ணீர்
பிற்பாடுபுறப்பட்டுப்போகலாமடா மகனேதேசிங்கு
கலகலவென்றுசிரித்தானையா ராஜாதேசிங்கு
என்னபேச்சுபேசினீரையா சிற்றப்பராஜாவே
எனக்குப்பயந்துதண்ணீர்கொண்டுவந்தான் நவாப்புசைதுல்லா
தண்ணீர்க்குப்பயந்திருப்பேனோநான் சிற்றப்பராஜாவே

பயந்துபோனால்விடுவேனோநான் சிற்றப்பராஜாவே
என்று-கனைத்துக்கதும்பிதட்டினானையா பாராசாரியை
ஆற்றினக்கரையிரண்டுநாழிவழி சங்கராபரணியாறு
தண்ணீர்வந்ததைப்பார்த்தானையா ராஜாதேசிங்கு
இடதுகாலுக்குச்சிமிட்டாகொடுத்தான் பாராசாரிக்கு
பன்னிரண்டங்குபடிவைத்தகுதிரை பாராசாரிகுதிரை
அந்தநாழிகைக்குக்கண்ணாலேகண்டார் சமேதாருமாரும்
நத்தர்சிங்குகோபால்சிங்கு ஆற்றிலேகுதித்தாராம்
சிற்றப்பதுரைதரணிசிங்கு ஆற்றிலேகுதித்தாராம்
ராமுசிங்குலட்சுமணசிங்கு ஆற்றிலேகுதித்தாராம்
ராமுதாரிலட்சுமணதாரி ஆற்றிலேகுதித்தாராம்
பேட்டைசிப்பாய்மோவுத்துக்காரனும் ஆற்றிலேகுதித்தாராம்
ஆற்றுத்தண்ணீரைப்பார்த்துபயந்தார் சமேதாருமாரும்
பயந்தகுதிரைதிரும்பிப்போச்சு செஞ்சிக்கோட்டையுள்ளே
முப்பதுகுதிரையைக்கண்ணாலேகண்டான் ராஜாதேசிங்கு
முப்பதுகுதிரையும்சலாம்வாங்குது ராஜாவுக்கானாலும்
பதில்சலாமுங்கொடுத்தானையா ராஜாதேசிங்கு
முப்பதுகுதிரைக்குச்சர்தாரையா மோவுத்துக்காரனும்
கண்ணால்கண்டான்கோபமாச்சுது மோவுத்துக்காரனுக்கு
இடதுகாலுக்குச்சிமிட்டாகொடுத்தான் நீலவேணிக்கு
கரகரவென்றுசுழன்றுவருகுது நீலவேணிகுதிரை
இராஜாமுன்னேசுற்றிவந்தான் மோவுத்துக்காரனும்
குதிரைவிட்டுக்கீழேகுதித்தான் மோவுத்துக்காரனும்
மண்டிபோட்டுசலாம்வாங்கினான் மோவுத்துக்காரனும்

மோவுத்துக்காரன் சண்டைக்குப் போவதற்கு
தேசிங்குராஜனைக் கேட்குதல்

நானொருசேதிசொல்கிறேன்கேளும் ராஜாதேசிங்கு
முதற்சண்டைக்குத்தாரந்தாரும் ராஜாதேசிங்கு
சந்தோஷமாகவுத்தாரந்தாரும் ராஜாதேசிங்கு
முதல்யூகத்திலிருக்கிறானையா சுபங்கிதுரைதானும்
கடைசியூகத்திலிருக்கிறானையா நவாப்புசைதுல்லா
இரண்டுபேரையும்வெட்டிக்கெலிக்கிறேன் ராஜாதேசிங்கு
அந்தப்பேச்சைக்காதில்கேட்டான் ராஜாதேசிங்கு
கலகலவென்றுசிரித்தானையா ராஜாதேசிங்கு

தேசிங்குராஜன் மோவுத்துக்காரனுக்குச் சொல்லல்

என்னபேச்சுபேசினையடா மோவுத்துக்காராநீ
அண்ணனுமில்லைதம்பியுமில்லை மோவுத்துக்காராநீ
கையிற்கங்கணங்கட்டியிருக்கிறாய் மோவுத்துக்காராநீ

சண்டைமுகத்தைப்பார்த்தறியாயே மோவுத்துக்காராநீ
ஒண்டியாய்சண்டைபோடவேண்டாம் மோவுத்துக்காராநீ
நீயும்நானும்புகுந்துவெட்டுவோம் மோவுத்துக்காரனே
அந்தப்பேச்சைக்காதிலேகேட்டான் மோவுத்துக்காரனும்
என்னபேச்சுபேசினீரையா ராஜாதேசிங்கு
நானும்நீயும்புகுந்துவெட்டினல் ராஜாதேசிங்கு
உமதுபேருண்டாகுமேயன்றி என்பேருண்டாகாது
சல்திசல்தியுத்தாருந்தாரும் இராஜாதேசிங்கு
கத்திபிடித்தசிப்பாய்நானுமானல் ராஜாதேசிங்கு
கால்நாழிநீர்கண்ணல்பாரும் ராஜாதேசிங்கு
நவாப்பின்பாளையத்தையிப்போ அதஞ்செய்யாவிட்டால்
எந்தன்பேருமோவுத்துகாரனென் றெண்ணுவார்களோ
தூள்தூளாகத்தும்சம்செய்கிறேன் துரகம்யாவற்றும்
அணுவளவாயதஞ்செய்கிறேன் பாளையம்யாவற்றும்
தவிடுபொடியாய்சிதைத்துப்போடுகிறேன் தளங்கள்யாவற்றும்
காற்றிலிலவம்பஞ்சாகச்செய்கிறேன் கனத்தபடையெல்லாம்
அரைநாழிகைஎனக்குத்தாரந்தாருமையா ராஜாதேசிங்கு
அந்தப்பேச்சைக்காதில்கேட்டான் ராஜாதேசிங்கு
கலகலவென் றுசிரித்தானையா இராஜதேசிங்கு
நானென்னசொன்னலும்கேளேனென்றாய் மோவுத்துகாரனே
சந்தோஷமாகதலையையசைத்தான் இராஜாதேசிங்கு
முதற்சண்டைக்குத்தாரங்கொடுத்தான் ராஜாதேசிங்கு
சந்தோஷமாகச்செலவுவாங்கினன் மோவுத்துக்காரனும்

மோவுத்துகாரன் சண்டைக்குப் போகுதல்

சலாம்வாங்கித்தாண்டினனையா நீலவேணிமேலே
இடதுகாலுக்குச்சிமிட்டாகொடுத்தான் நீலவேணிக்கு
காற்றுப்போலேபறக்குதையா நீலவேணிக்குதிரை
மேகம்போலேபறக்குதையா நீலவேணிகுதிரை
ஒற்றைக்குதிரையைக்கண்ணல்கண்டான் சுபங்கிதுரைதானும்

சுபங்கிதுரை தன் சேனைக்குச் சொல்லல்

அண்ணமாரேதம்பிமாரே சமேதாருதாரே
ஒற்றைக்றைக்குதிரைக்காரன்வாரான் சமேதாருமாரே
ஜல்திஜல்திபிரங்கிபோடும் சமேதாருமாரே
ஆனல்நல்லதாகட்டுமென் று சாமேதாருமாரும்
சொல்லிவாயைமூடுமுன்னமே சமேதாருமாரும்
பளபளவென் றுபளுத்தாதீர்த்தார் சமேதாருமாரும்
பளுத்தாசத்தங்காதிலேகேட்டது நீலவேணிக்கு
குண்டுக்குமேலேசாணுயரம் வேகமாய்ப்பறக்குது

நடுத்தண்டிலேவந்துவிழுந்தது நீலவேணியும்
தண்டுக்குச்சைகையூதினனையா சுபங்கிதுரைதானும்
மோவுத்துக்காரனைகண்டாலேகண்டான் சிப்பாய்துரைதானும்
மூவாயிரங்குதிரைவந்துவளைத்தது மோவுத்துக்காரனை
லகானையிழுத்துகையிலேபிடித்தான் மோவுத்துக்காரனும்
பட்டாவுருவிகையிலேபிடித்தான் மோவுத்துக்காரனும்
ஆகாயவாணியைசாக்ஷிவைத்தான் மோவுத்துக்காரனும்
பூமிதேவியைசாக்ஷிவைத்தான் மோவுத்துக்காரனும்
இடதுகாலுக்குச்சிமிட்டாகொடுத்தான் மோவுத்துக்காரனும்
கரகரவென்றுசுழன்றுவருகுது நீலவேணிகுதிரை
குதிரைசுழன்றநிமிஷத்துக்குள் மோவுத்துக்காரனும்
வடக்குமுகம்திரும்பினனையா மோவுத்துக்காரனும்
அங்கேயிருந்தஆயிரங்குதிரை வந்துவளைந்தது
குதிரைகள்வந்ததைக்கண்ணால்கண்டான் மோவுத்துக்காரனும்
இடதுகாலுக்குசிமிட்டாகொடுத்தான் நீலவேணிக்கு
கரகரவென்றுசுழலுதுபாரு நீலவேணிகுதிரை
குதிரைசுழன்றநிமிஷநாழிகைக்கு மோவுத்துக்காரனும்
கண்கள்சிவந்துபொறிகள்பறக்க மோவுத்துக்காரனும
கனைத்துக்கதும்பிமீசையுருவியே மோவுத்துக்காரனும்
கத்தியையெடுத்துவீசினனையா மோவுத்துக்காரனும்
அங்கேயிருந்தஆனைகுதிரை டாருய்விழுந்தது
மேற்குபக்கம்திரும்பினனையா மோவுத்துக்காரனும்
அங்கேயிருந்தஆயிரம்குதிரை வந்துவளைந்தது
குதிரைவருவதைக்கண்ணால்கண்டான் மோவுத்துக்காரனும்
இடதுகாலுக்குச்சிமிட்டாகொடுத்தான் நீலவேணிக்கு
கரகரவென்றுசுழன்றதுபாரு நீலவேணிகுதிரை
குதிரைச்சுழன்றநிமிஷநாழிக்கு மோவுத்துக்காரனும்
குடல்சரிந்திடசில்குதிரைகள் வந்துவிழுந்ததுபார்
தலைகள்துண்டாய்சிலகுதிரைகள் தவறிவிழுந்ததுபார்
இடதுகாலுக்குச்சிமிட்டாகொடுத்தான் நீலவேணிக்கு
சிங்கம்போலவாரானையா மோவுத்துக்காரனும்
புலியைப்போலபுகுந்தானையா மோவுத்துக்காரனும்
துண்டுதுண்டாய்தூக்கிவெட்டுகிருன் மோவுத்துக்காரனும்
தலைதலையாயுருட்டிப்போடுகிருன் மோவுத்துக்காரனும்
சப்பைசப்பையாய்க்கிழித்துப்போடுகிருன் மோவுத்துக்காரனும்
கால்மாடுதலைமாடாய்ப்போகுதுபார் நவாப்புப்பாளையமும்
அந்தவேளையிலென்னபண்ணுகிருன் சுபங்கிதுரைதானும்
மூவாயிரம்பீரங்கியைத் தயார்பண்ணினனும்
சுற்றிலுமிருந்தசிப்பாய்மார்கள் பளுத்தாதீர்த்தார்கள்
அத்தனைகுண்டுக்குந்தப்பிவருகுது நீலவேணிகுதிரை

ஒருகுதிரைமேலாயிரங்குதிரை வந்துவளைந்தது
ஆயிரங்குதிரையைத்தாண்டிவருகுது நீலவேணிகுதிரை
ஒருகத்தியின்மேலாயிரங்கத்தி வந்துவிழுந்ததுபார்
ஆயிரங்கத்தியுந்தள்ளிவெட்டுகிறான் மோவுத்துக்காரனும்
மருந்துபுகையில்புகுந்துவெட்டுகிறான் மோவுத்துக்காரனும்
தலைதெரியாதுபுகுந்துவெட்டுகிறான் மோவுத்துக்காரனும்
கிழக்குபக்கந்திரும்பினனையா மோவுத்துக்காரனும்
அங்கேயிருந்தஆயிரங்குதிரை வந்துவளைந்தது
மார்கள்பிளந்திடசிலகுதிரைகள் மாய்ந்துவிழுந்ததுபார்
மண்டைதிறந்திடமூளைசிதறிட மாய்ந்ததுசிலகுதிரை
இப்படியாகசிதைத்தறுத்து இம்சைகள்செய்தபின்பு
சிந்தைமகிழ்ந்துசிமிட்டாகொடுத்தான் நீலவேணிக்கு
அங்கேயிருந்துதண்டில்புகுந்தது நீலவேணிகுதிரை
தண்டில்புகவேசந்தோஷமானன் மோவுத்துக்காரனும்
பாளையங்களைக்கண்ணால்கண்டான் மோவுத்துக்காரனும்
கொசுக்கள்போலேதேய்ப்பேனென்றான் மோவுத்துக்காரனும்
தூசுபோலாகிடுவேனென்றான் மோவுத்துக்காரனும்
பஞ்சுபோல்பறக்கடிப்பேனென்றான் மோவுத்துக்காரனும்
மெத்தைரியங்கொண்டுதிரிகிறான் மோவுத்துக்காரனும்
அரிந்தரிந்துபோட்டானையா மோவுத்துக்காரனும்
முன்வீச்சுக்காயிரம்விழுந்ததுபார் நவாப்புபாளையமும்
பின்வீச்சுக்காயிரம்விழுந்ததுபார் நவாப்புபாளையமும்
தெற்கேயிருந்தசுபங்கிதுரையைக் கண்ணாலேகண்டானும்
ஆனையின்மேலம்பாரிபோட்டே அவனுமிருக்கின்றான்
அந்தவேளையிலென்னபண்ணுகிறான் மோவுத்துக்காரனும்
ஆனைகூட்டம்மெத்தயிருக்குது சுபங்கிதுரையண்டை
ஆனைவேடிக்கைபார்த்துவாரான் மோவுத்துக்காரனும்
குதிரைவருவதைக்கண்ணாலேகண்டான் சுபங்கிதுரைதானும்
ஆயிரம்யானைமுன்னேதுரத்தினன் சுபங்கிதுரைதானும்
ஆனைவருவதைக்கண்ணாலேகண்டான் மோவுத்துக்காரனும்
கலகலவென்றுசிரித்தானையா மோவுத்துக்காரனும்
பாலாவுருவிக்கையில்பிடித்தான் மோவுத்துக்காரனும்
இடதுகாலுக்குசிமிட்டாகொடுத்தான் நீலவேணிக்கு
யானைக்குமேல்ஜானுயரம் அதிர்ந்துபாய்கிறது
குதிரைபோகிறவேகத்தினலே குத்திசாய்க்கிறானும்
கரகரவென்றுசுழன்றுவருகுது நீலவேணிகுதிரை
கால்மாடுதலைமாடாக குத்திசாய்க்கிறானும்
கடகடவென்றுசாயுதுபாரு யானைகளானலும்
ஆயிரம்யானைகுத்தியுருட்டினன் மோவுத்துக்காரனும்
தெற்கேயிருந்தசுபங்கிதுரையைக் கண்ணால்கண்டானும்



இடதுகாலுக்குசிமிட்டாகொடுத்தான் நீலவேணிக்கு
முன்னங்காலைத்தூக்கிவைத்தது யானைத்தலைமேலே
பாலாயுருவிகையிலேபிடித்தான் மோவுத்துக்காரனும்
அல்லாகுஅல்லாகுவென்றுபோட்டான் பாலாதன்னாலே
முன்னேயிருந்தமாவெட்டியான் நிலத்தில்வீழ்ந்தானும்
மாருக்குபலமாயிழுத்துபிடித்தான் மோவுத்துக்காரனும்
ஓடிப்போகிறேன்ஓடிப்போகிறேன் மோவுத்துக்காரனே
ஓடிப்போகிறசிப்பாய்மகனும் சண்டைக்கேன்வந்தாய்
சௌரியமில்லாதவனேநீயும் சண்டைக்கேன்வந்தாய்
இனியில்லாதகோபமாச்சுது மோவுத்துக்காரனுக்கு
வலதுகையைப்பிடித்தானையா மோவுத்துக்காரனும்
வலதுகையுந்தானுமாகவே பூமியில்விழுந்தானும்

சுபங்கிதுரை மோவுத்துக்காரனை வணங்கிக் கேட்குதல்

இடதுகையில்சலாம்வாங்கினான் சுபங்கிதுரைதானும்
நானொருசேதிசொல்கிறேன்கேளும் மோவுத்துக்காரனே
உந்தன்மேல்சண்டைக்குவரவில்லை மோவுத்துக்காரனே
பெண்சாதியிழந்தேன்தெண்டமையா மோவுத்துக்காரனே
பிள்ளையிழந்தேன்அல்லாவறிய மோவுத்துக்காரனே
ஊருமிழந்தேன்பதவியுமிழந்தேன் மோவுத்துக்காரனே
நீசொன்னபடிநானுங்கேட்பேன் மோவுத்துக்காரனே
சோறுகூடதின்னவில்லை மோவுத்துக்காரனே
நானிப்போதேஓடிப்போகிறேன் மோவுத்துக்காரனே
இப்போதென்னைவிட்டுவிடவேண்டும் மோவுத்துக்காரனே
ஆனால்நல்லதாகட்டும்போடா சுபங்கிதுரையேநீ
ஒற்றைக்கையோடோடிப்போனானும் சுபங்கிதுரைதானும்
அவ்வேளையிலென்னபண்ணுகிறான் மோவுத்துக்காரனும்
இடதுகாலுக்குசிமிட்டாகொடுத்தான் நீலவேணிக்கு
நவாப்புஎங்கேஎங்கேஎன்று இவனும்வாரானும்
குதிரைவருவதைக்கண்ணாலேகண்டது நவாப்புபாளையமும்
அல்லோலகல்லோலமாகஓடுது நவாப்புப்பாளையமும்
அங்கேயிருந்துதண்டில்நுழைந்தான் மோவுத்துக்காரனும்
திமிரிக்கோட்டைஷேக்முகம்மது வந்துயெதிர்த்தானும்
ஷேக்முகம்மதைகண்ணாலேகண்டான் மோவுத்துக்காரனும்
ககலவென்றுசிரித்தானையா மோவுத்துக்காரனும்
கண்ணாலேகண்டான்கோபமாச்சுது நவாப்புபாளையத்தை
கத்தியையெடுத்துநீலவேணியைக் கலங்கதட்டினானும்
தட்டினவுடனேநீலவேணியும் தண்டில்பாயுதுபார்
பாய்ந்தவுடனேஷேக்முகம்மது பாலாயெடுத்தானும்
மோவுத்துக்காரன்குத்தினகுத்து தொண்டையில்பாய்ந்தது

பாய்ந்தயீட்டியைவலதுகையிலே பற்றியெடுத்தானும்
கோபம்மிகவும்பொங்கிவந்தது மோவுத்துக்காரனுக்கு
சிவ்வென்றெழுந்துஷேக்முகம்மது கையைப்பிடித்தானும்
கத்தியெடுத்துஷேக்முகம்மது கழுத்தைவெட்டப்போனன்
அந்தவேளையிலென்னசொல்கிறன் ஷேக்முகம்மதையா

ஷேக்முகம்மது மோவுத்துக்காரனை இரங்கிக் கேட்குதல்

சலாமையாசலாமையா மோவுத்துக்காரனே
அறியாமல்சண்டைக்குவந்தேனையா மோவுத்துக்காரனே
என் தலையைக்காக்கவேணுமையா யோவுத்துகாரனே
தெய்வமும்நீரேதேசிகரு நீரே மோவுத்துக்காரனே
அடிமைஎன்னை ஆதரிக்கவேண்டும் மோவுத்துக்காரனே
என்றுவணங்கிசலாம்செய்தான் ஷேக்முகம்மதையா
அந்தப்பேச்சைகாதிலேகேட்டான் மோவுத்துக்காரனும்
பகையாளிசண்டைக்குவந்தால் பாலன்விடுவேனே
ஈட்டியெறிந்தகையைப்போ தன்னிடவாளாலே
கண்டதுண்டமாய்வெட்டியெறிந்தான் மோவுத்துக்காரனும்
கத்திபிடித்தசிப்பாய்மார்களைக் கரணையாடிவாருன்
சலாம்வாங்கியசிப்பாய்மார்களை ஓடிப்போகச்சொன்னன்
பதினெட்டுவயதுபாலனையா மோவுத்துக்காரனும்
ஒருக்காலமும்சண்டையறியான் மோவுத்துக்காரனும்
கைகளெல்லாம்ஓய்ந்துபோச்சு மோவுத்துக்காரனுக்கு
இரத்தக்கவுலுகவ்விக்கொண்டது மோவுத்துக்காரனுக்கு
களைகள்வந்துமூண்டுகொண்டது மோவுத்துக்காரனுக்கு
ராசாவிடம்போகலாமென்று குதிரையைத்திருப்பினனும்
சந்தோஷமாகதிருப்பினனையா மோவுத்துக்காரனும்
பரதநாட்டியமாடிவருகுது நீலவேணிகுதிரை
இராஜாமுன்னுக்குவாரானையா மோவுத்துக்காரனும்
அந்தவேளைக்குபதுங்கியிருந்தார் தப்பினகுண்டுக்காரர்
இரட்டைகுண்டுபோர்பண்ணி படுக்கென்றுசுட்டாராம்
படுக்கென்றசத்தம்திரும்பிப்பார்த்தான் மோவுத்துக்காரனும்
அந்தகுண்டுநெற்றியில்பட்டது மோவுத்துக்காரனுக்கு
அல்லாரேஅல்லாரேயென்று கீழேவிழுந்தானும்
அரிகோவிந்தாவென்றுசொல்லி கீழேவிழுந்தானும்
வைகுந்தபதவிசேர்ந்தானையா மோவுத்துக்காரனும்

மோவுத்துக்காரன் இறந்ததைக் கண்டு
நீலவேணி விசனப்படல்

சுற்றிசுற்றிவருகுதையா நீலவேணிகுதிரை
முகந்துமுகந்துஅழுகுதையா நீலவேணிகுதிரை

கண்களில்நீரும்பொங்கிவருகுது நீலவேணிக்கு
கடகடவென்றுபுரண்டழுதது நீலவேணிகுதிரை

மோவுத்துக்காரன் இறந்தபின்பு நவாப்பு பங்காருநாய்க்கனை
நீலவேணியைக் கொண்டுவரச் சொல்லல்

அண்ணவாடாதம்பிவாடா பங்காருநாய்க்கா
மோவுத்துக்காரன்விழுந்துபோனான் பங்காருநாய்க்கா
நீலவேணியைக்கொண்டுவரவேணும் பங்காருநாய்க்கா
அந்தப்பேச்சைக்காதில்கேட்டான் பங்காருநாய்க்கனும்
குதிரையையெல்லாம்சுற்றிப்பார்த்தது நீலவேணியும்
கனைத்துகதும்பியெழும்பிற்றுபாரு நீலவேணியும்
கரகரவென்றுசுழன்றுதையா நீலவேணியும்
இடதுசாரிவலதுசாரிவந்ததுபாரு நீலவேணியும்
வந்துபாய்ந்துஉதைத்ததுபாரு நீலவேணியும்
காலினாலேயெட்டியுதைத்தது நீலவேணியும்
வாலினாலேவீசியடிக்குது நீலவேணியும்
வீறிட்டுக்கொண்டுவிழுந்துசாகுது நவாப்புதன்குதிரை
மூலைக்குமூலைதுரத்தியுதைக்குது நீலவேணியும்
காலுதையால்விழுந்துசெத்தது ஐம்பதுகுதிரையும்
விக்கிமுக்கிட்டுச்சாகும் குதிரைகளனந்தம்
ஆயிரந்துருப்புசிப்பாய்மாரும் அடியோடேபோனார்கள்
குதிரைவிழுந்ததைகண்ணால்கண்டது நீலவேணியும்
இராஜாபக்கம்போவோமென்று நீலவேணியும்

மோவுத்துக்காரன் குதிரை தேசிங்குராஜனிடம் வருதல்

இரண்டுதாண்டில்வந்துநின்றது இராஜாமுன்பாக
கண்ணில்நிறையதண்ணீர்கலங்குது நீலவேணிக்கு
குதிரைமுகத்தைக்கண்ணாலேகண்டான் இராஜாதேசிங்கு
என்னுடன்வளர்ந்ததம்பிதானு மிறந்துபோய்விட்டான்
எந்தன்பலமும்பாதிபோச்சுது சமேதாருமாரே
குதிரையைவந்துகட்டிக்கொண்டான் இராஜாதேசிங்கு
என்னகாரியம்பண்ணினாயடா நீலவேணியே
அந்தப்பேச்சைக்காதில்கேட்டது நீலவேணியும்
இராஜன்முன்பாகநடக்குதுபாரு நீலவேணியும்

மோவுத்துக்காரன் இறந்ததைப் பார்த்து
தேசிங்குராஜன் விசனப்படல்

மோவுத்துக்காரன்முன்னேவந்தான் இராஜாதேசிங்கு
மண்டிபோட்டுஉட்கார்ந்தானையா இராஜாதேசிங்கு

வாரியெடுத்துமடிமீதில்வைத்தான் இராஜாதேசிங்கு
முகத்தோடேமுகம்வைத்தானையா இராஜாதேசிங்கு
கோடிகோடென்றுகதறியழுதான் இராஜாதேசிங்கு
என்னைவிட்டுநீஎப்படிபோனாய் மோவுத்துக்காரனே
எனக்குநல்லயிடந்தேடிவையும் மோவுத்துக்காரனே
நவாப்பைவெட்டிநானும்வாறேன் மோவுத்துக்காரனே
தனக்குத்தானேதைரியமானான் இராஜாதேசிங்கு
பெரியகுழியாய்வெட்டச்சொன்னான் இராஜாதேசிங்கு
லட்சம்பொன்னுதானங்கொடுத்தான் இராஜாதேசிங்கு
குழியில்தூக்கிவைத்தானையா மோவுத்துக்காரனை
மண்டிபோட்டுப்படுத்ததுபார் நீலவேணிகுதிரை
பட்டாயுருவிகையிலேபிடித்தான் இராஜாதேசிங்கு
இரண்டுதுண்டாகதீர்த்தானையா இராஜாதேசிங்கு

மோவுத்துக்ககாரனையும் அவன் குதிரையையும்
தேசிங்குராஜன் புதைத்தல்

குதிரையைக்கூடப்புதைத்தானையா இராஜாதேசிங்கு
பெரியகோரிகட்டச்சொன்னான் இராஜாதேசிங்கு
அந்தவேளையிலென்னசெய்கிறான் இராஜாதேசிங்கு
நாராயணாகோவிந்தாவென்றான் இராஜாதேசிங்கு

தேசிங்குராஜன் சண்டைக்குப் போகுதல்

அண்ணமாரே தம்பிமாரே சமேதாருமாரே
நானொன்றுசொல்கிறேன்கேளும் சமேதாருமாரே
நான்போகட்டாநீர்வாரீரோ சமேதாருமாரே
ஓடிப்போகிறசிப்பாய்மாரை துரத்திவெட்டவேண்டாம்
ஏழைஎளியபிச்சைக்காரரை எதிர்த்துவெட்டவேண்டாம்
உள்ளேஎதிர்த்தசிப்பாய்மாரை டாறாய்த்தீர்த்திடுங்கள்
அந்தப்பேச்சைக்காதிலேகேட்டார் சமேதாருமாரும்
ஆனால்நல்லதாகட்டுமென்றார் சமேதாருமாரும்
பன்னிரண்டங்குபடிவைத்தகுதிரை பாராசாரிகுதிரை
கனைத்துக்கதும்பியெழுந்தானையா இராஜாதேசிங்கு
பரதநாட்டியமாடிவருகுது பாராசாரிகுதிரை
குதிரைவருவதைகண்ணால்கண்டான் நவாப்புசைதுல்லா
அண்ணாவாடாதம்பிவாடா பங்காருநாய்க்கா நீ
குதிரைவருவதைக்கண்ணால்பாரும் பங்காருநாய்க்கா நீ
சல்திசல்திபீரங்கிதிருப்பு பங்காருநாய்க்கா நீ
சுருக்காபளுத்தாகொடுத்தானையா பங்காருநாய்க்கனும்
பளுத்தாசத்தங்காதிலேகேட்டது பாராசாரிகுதிரை

இரண்டாங்கணவாய்சேத்துப்பட்டு தாவுத்துக்காரனும்
குதிரைசேனைக்குசைகையூதினன் தாவுத்துக்காரனும்
ஊதினவுடனேசூழ்ந்துகொண்டார் சிப்பாய்மார்களும்
முப்பதினயிரங்குதிரைவளைந்தது இராஜாவையானும்

தேசிங்குராஜன் சண்டைசெய்தல்

அந்தக்குதிரையெல்லாஞ்சுற்றிப்பார்த்தான் இராஜாதேசிங்கு
கலகலவென்றுசிரித்தானையா இராஜாதேசிங்கு
இரண்டுகையிலேபட்டாவாங்கினன் இராஜாதேசிங்கு
ஆகாயவாணியைசாக்ஷிவைத்தான் இராஜாதேசிங்கு
பூமிதேவியைச்சாக்ஷிவைத்தான் ராஜாதேசிங்கு
சந்திரசூரியரைச்சாக்ஷிவைத்தான் இராஜாதேசிங்கு
ரங்கநாதரைச்சாக்ஷிவைத்தான் இராஜாதேசிங்கு
ராமுராமுரேதேவாவென்று போட்டானெருவெட்டு
துண்டுதுண்டாய்தூக்கிவெட்டுகிறான் இராஜாதேசிங்கு
தலைதலையாயுருட்டிபோடுகிறான் இராஜாதேசிங்கு
டாறுடாறாய்கிழித்துப்போடுகிறான் இராஜாதேசிங்கு
இணையில்லாமல்புகுந்துவெட்டுகிறான் இராஜாதேசிங்கு
வெட்டொன்றுக்குளட்டுதுண்டாய் டாறாய்விழுந்தது
ஜெயராமுகெங்காராமு புகுந்துவெட்டுகிறார்கள்
ராமுசிங்குலட்சுமணசிங்கு புகுந்துவெட்டுகிறார்கள்
சிற்றப்பதுரைதரணிசிங்கு புகுந்துவெட்டுகிறாராம்
மூன்றரைநாழிகைமூலைக்குமூலை புகுந்துவெட்டுகிறாராம்
இருபத்தொருகுதிரையோடே புகுந்துவெட்டுகிறாராம்
அத்தனைகுண்டுக்குந்தப்பிப்போகுது பாராசாரிகுதிரை
குண்டுசந்திலேநுழைந்துபோகுது பாராசாரிகுதிரை
முப்பதாயிரம்துப்பாக்கிகொண்டு முடுக்கியேவிட்டானும்
அந்தகுண்டுக்குந்தப்பிப்போகுது பாராசாரிகுதிரை
நெருப்புமாரியாய்பொழிகிறானையா தாவுத்துக்காரனும்
அந்த குண்டுக்குந்தப்பிவருகுதையா பாராசாரிகுதிரை
குண்டுக்குமேலேபறக்குதையா பாராசாரிகுதிரை
குண்டுவிழுந்துநவாப்புப்பாளையமும் கூவிமாளுதுபார்
ஒருகுதிரைமேல்ஆயிரம்குதிரை வந்துவிழுந்ததுபார்
ஒருகத்திமேலேஆயிரங்கத்தி வந்துவிழுந்ததுபார்
ஆயிரங்கத்தியைத்தள்ளிவெட்டுகிறான் இராஜாதேசிங்கு
கலகலகலகலகலகலவென்று கத்திகள்மின்னுதுபார்
மிகுமிகுமிகுமிகுமிகுமிகுவென்று கத்திகள்மின்னுதுபார்
மேல்குண்டுக்குக்கீழேபாயுது பாராசாரிகுதிரை
இத்தனைக்குந்தப்பிப்போகுது பாராசாரிகுதிரை
மருந்துபுகையிலேபுகுந்துவெட்டுகிறான் இராஜாதேசிங்கு

தென்னங்குலைபோல்புகுந்துவெட்டுகிறான் இராஜாதேசிங்கு
சோளத்தண்டைவீசினாப்போல அறுத்துப்போடுகிறான்
வாழைத்தண்டையறுத்தாப்போலே அறுத்துப்போடுகிறான்
கரகரவென்றுசுழன்றுவருகுது பாராசாரியும்
கண்டமட்டுஞ்சாடுகிறானையா இராஜாதேசிங்கு
பதினைந்துநாழிகைமிகவுமாச்சுது நவாப்புப்பாளையமும்
சோறுசோறென்றுதுடிக்குதையா நவாப்புப்பாளையமும்
பாணிபாணியென்றுதவிக்குதையா நவாப்புப்பாளையமும்
ரொட்டிரொட்டியென்றுதவிக்குதையா நவாப்புப்பாளையமும்
தாயில்லாப்பிள்ளையைப்போலதவிக்கிறார் நவாப்புப்பாளையமும்
இனியிருந்தால்பிழைக்கமாட்டோம் தேசிங்குமுன்னாலே
என்று-கள்ளக்குறிச்சிக்கோடிப்போகுது சிறிதுபாளையமும்
ஆரணிக்கோட்டைக்கோடிப்போகுது நவாப்புப்பாளையமும்
ஓடிப்போகிறஜனத்தைக்கண்டான் தாவுத்துக்காரனும்
அந்தவேளையிற்கண்ணாலேகண்டான் இராஜாதேசிங்கு
இருபதினாயிரம்துருப்புக்குதிரை ஏவியேவிட்டானும்

நவாப்பின் சேனைகள் சின்னாபின்னப்படுதல்

குதிரைவருவதைக்கண்ணாலேகண்டான் இராஜாதேசிங்கு
படபடவென்றுதுடிக்குதுமீசை இராஜாவுக்கானும்
கரகரவென்றுசுழன்றுவருகுது பாராசாரிகுதிரை
கரணைகரணையாய்விழுந்துபோகுது நவாப்புப்பாளையமும்
கால்மாடுதலைமாடாய்விழுந்துபோகிறது துருப்புக்குதிரையும்
இருபதினாயிரங்குதிரையது டாறாய்விழுந்தது
யானைவேடிக்கையைப்பார்க்கிறானையா இராஜாதேசிங்கு
இரும்புலக்கையைவாங்கியடித்தது பட்டத்துயானையும்
கரகரவென்றுசுழட்டிவருகுது யானைகளானும்
வீரிட்டுக்கொண்டோடிவருகுது யானைகளானும்
ஆனையைப்பார்க்கிலும்ஜானுயரம்பாயுது பாராசாரிகுதிரை
ஆனையின்மேலேதாண்டிவிழுகுது பட்டத்துயானையும்
பாலாவுருவிகையிலேபிடித்தான் இராஜாதேசிங்கு
குத்திக்குத்திச்சாய்த்துப்போடுகிறான் இராஜாதேசிங்கு
உலக்கைப்போட்டுசலாம்வாங்குது பட்டத்துயானையும்
மண்ணைக்கவ்விசாகிறதையா மெத்தயானைகளும்
குடல்சரிந்துசாகிறதையா சிலதுயானைகளும்
மத்தகம்பிளந்துசாகிறதையா மதங்கொண்டயானைகளும்
உதைத்துக்கொண்டுசாகிறதையா சிலதுயானைகளும்
கரகரவென்றுவுதைத்துச்சாகுது கறுத்தயானைகளும்
இரண்டாயிரம்யானையங்கே டாறாய்விழுந்தது
யானைவிழுவதைக்கண்ணால்கண்டான் இராஜாதேசிங்கு

அங்கேயிருந்ததாவுத்துக்காரனைக் கண்ணால்கண்டானும்
கலகலவென்றுசிரித்தானேயா இராஜாதேசிங்கு
இடதுகாலுக்குச்சிமிட்டாகொடுத்தான் பாராசாரிக்கு
முன்னங்காலைத்தூக்கிவைத்தது யானைத்தலைமேலே
பாலாவுருவிப்போட்டானேயா இராஜாதேசிங்கு
முன்னேயிருந்தமாவெட்டியானும் நிலத்தில்விழுந்தானும்
மாருக்குபாலாயிழுத்துப்பிடித்தான் இராஜாதேசிங்கு

தாவுத்துக்காரன் வணங்கிக் கேட்குதல்

அந்தவேளையில்சலாம்வாங்கினன் தாவுத்துக்காரனும்
நானொருசேதிசொல்கிறேன்கேளும் இராஜாதேசிங்கு
நானிப்போதேஓடிப்போகிறேன் இராஜாதேசிங்கு
அந்தவேளையில்கோபம்பிறந்தது இராஜாவுக்கானலும்
நவாப்புக்கேற்றசிநேகிதக்காரன் தாவுத்துக்காரனும்
நாராயணகோவிந்தாவென்று போட்டானேபாலாவை
சேத்துப்பட்டுதாவுத்துக்காரன் நிலத்தில்விழுந்தானும்
நிலத்தில்விழவேநவாப்புஜனம் நிமிஷமிருக்கவில்லை
கண்டபடியேஓடிப்போச்சுது நவாப்புபாளையமும்
தாவுத்துக்காரன்செத்தசேதி நவாப்புகேட்டானும்
இனியில்லாதபயம்பிடித்தது நவாப்புக்கானலும்
இனியிருந்தால்தலையேபோகுமே தேசிங்குகையிலே
ஓடிஓடிஒளித்தானேயா நவாப்புசைதுல்லா
அந்தவேளையிலென்னபண்ணுகிறான் ராஜாதேசிங்கு
இருபத்திரண்டுவயது இளம்பாலன் ராஜாதேசிங்கு
ஐம்பதினாயிரஞ்சேனைவெட்டினன் இராஜாதேசிங்கு
இரண்டாயிரம்யானைவெட்டினன் இராஜாதேசிங்கு
கைகளெல்லாம்ஓய்ந்துபோச்சுது இராஜாவுக்கானலும்
இரத்தகவுலும்கம்மிக்கொண்டது இராஜாவுக்கானலும்
நவாப்புபாளையத்தைச்சுற்றிப்பார்த்தான் ராஜாதேசிங்கு
இவனைப்பார்த்துபதுங்குகிறார்கள் சிப்பாய்மார்களும்
எடுத்தபீரங்கிளடுத்தாற்போலே போட்டுஓடுகிறார்கள்
தன்னிடஜனத்தைக்கண்ணாலேகண்டான் ராஜாதேசிங்கு
குண்டுமருந்திலிருந்துசெத்தது சேனைகளெல்லாமும்
கலகலவென்றுசிரித்தானேயா இராஜாதேசிங்கு
செஞ்சிகோட்டைக்குபோவோமென்று திருப்பினன்குதிரையை
அறுபத்துநான்குஜண்டாமரமும் டாருய்கிழிந்தது
ஐந்துகுதிரையோடுவாரான் இராஜாதேசிங்கு
சங்கராபரணிக்கரையிலேவந்தான் இராஜாதேசிங்கு
குதிரையைவிட்டுதண்ணியிற்குதித்தான் இராஜாதேசிங்கு
முழங்கால்வரையிற்றண்ணியங்கே பிடித்துவோடுகுது

கத்தியைக்கழுவிவுரையிலேபோட்டான் இராஜாதேசிங்கு
மூன்றுகைதண்ணீர்குடித்தானையா இராஜாதேசிங்கு
மரத்துநிழலிலேஉட்கார்ந்தானையா இராஜாதேசிங்கு
அந்தவேளையிலென்னபண்ணுகிறான் அவனிடதாயாதி
தேசிங்குதாயாதியையா-தன்சிங்குமகாராஜன்
ஒற்றைக்குதிரைபோட்டுக்கொண்டு ஓடிவந்தானெதிரே
ராமூராமூரேசீதாராமூரே இராஜாதேசிங்கு
நீர்-திரும்பிவந்தவயணமென்ன இராஜாதேசிங்கு
அந்தப்பேச்சைக்காதிலேகேட்டான் இராஜாதேசிங்கு
நானொருசேதிசொல்கிறன்கேளும் தன்சிங்குராஜாவே
நவாப்புசெத்துப்போனானையா தன்சிங்குராஜாவே
என்னபேச்சுபேசினீரையா இராஜாதேசிங்கு
செத்துப்போனவன் சேத்துப்பட்டுதாவுத்துக்காரனும்
மலையடிவாரமூலையோரத்தில் நவாப்புஒளித்தானும்
சொச்சத்தோடேவிட்டுப்போகாதே இராஜாதேசிங்கு
ஜல்திஜதிபுறப்படுமென்றான் தன்சிங்குராஜனும்
அந்தப்பேச்சைக்காதிலேகேட்டான் இராஜாதேசிங்கு
கலகலவென்றுசிரித்தானையா இராஜாதேசிங்கு
தனக்குவளர்த்தபாராசாரியை மூன்னுக்குவரச்சொல்லும்
பன்னிரண்டங்குபடிவைத்தகுதிரை பாருசாரிகுதிரை
மூன்னுக்குவந்துநின்றதுபாரு பாருசாரியும்
ஐந்துகுதிரையோடேவாரானையா இராஜாதேசிங்கு
இவர்-மார்பிலிருந்தரங்கநாதர் வழியிலேநின்றாராம்
அவர்-தோளிலிருந்தரங்கநாதர் தூரத்திலேநின்றாராம்
அரங்கநாதரைக்கண்டுதொழுதான் இராஜாதேசிங்கு
அரிகோவிந்தாகோவிந்தாவென்றான் இராஜாதேசிங்கு
அப்பாகேளும்அப்பாகேளும் குழந்தைதேசிங்கு
இத்தனைசண்டைபண்ணினையடா குழந்தைதேசிங்கு
இன்றையசண்டைநிறுத்திப்போடடா குழந்தைதேசிங்கு
நாளைக்குச்சண்டைவைத்துக்கொள்ளடா மகனேதேசிங்கு
நானுங்கூடவருகிறேனடா மகனேதேசிங்கு
அந்தவார்த்தையைக்காதிலேகேட்டான் சிப்பாய்தேசிங்கு
கையையெடுத்துத்தொழுதானையா இராஜாதேசிங்கு
என்னைவிட்டுநீர்பிரிந்துபோனீர் ரங்கநாதரே
என்னிடபலமும்பாதிபோச்சுது ரங்கநாதரே
நான்-முன்வைத்தகாலைபின்வைப்பேனோ ரங்கநாதரே
இன்றைக்குஞ்சாவுநாளைக்குஞ்சாவு ரங்கநாதரே
பிறந்தவன்றைக்கேசாவிருக்குது ரங்கநாதரே
நான்-போய்வருகிறேன்போய்வருகிறன் ரங்கநாதரே
ஜல்தியெனக்குவுத்தாரந்தாரும் ரங்கநாதரே

### நவாப்பு தோன்றமல்லனைத் தேசிங்குராஜனிடத்திற்கு சமாதானத்துக்கு அனுப்புதல்

இப்படிசொல்லிவருகிறுனையா இராஜாதேசிங்கு
போனராஜாதிரும்பினசேதி நவாப்புகேட்டானும்
தோன்றமல்லனையனைப்பிவைத்தான் நவாப்புசைதுல்லா
சமாதானத்திற்கனுப்பிவைத்தான் நவாப்புசைதுல்லா
மூன்றுகுதிரையோடேவருகிறுனையா தோன்றமல்லனும்
நாமத்தைப்போட்டுவருகிறுனையா தோன்றமல்லனும்
தேசிங்குமுன்னேவருகிறுனையா தோன்றமல்லனும்
குதிரையைவிட்டுக்கீழேகுதித்தான் தோன்றமல்லனும்
மண்டிபோட்டுசலாம்வாங்கினுன் தோன்றமல்லனும்
பதில்சலாமுங்கொடுத்தானையா இராஜாதேசிங்கு
நானெருசேதிசொல்லுகிறேன்கேளும் ராஜாதேசிங்கு
ஒன்பதுகோடிசீமையுமக்கு நவாப்புதாரேமென்றுர்
ஒருகொள்ளைக்குஒன்பதுகொள்ளை நவாப்புதாரேமென்றுர்

### தேசிங்குராஜன் தோன்றமல்லன்மீது கோபித்தல்

சமாதானமாய்ப்போய்வாருமையா இராஜாதேசிங்கு
அந்தப்பேச்சைக்காதிலேகேட்டான் இராஜாதேசிங்கு
கலகலவென்றுசிரித்தானையா இராஜாதேசிங்கு
என்னபேச்சுபேசினுயடா தோன்றமல்லண்ணு
இன்றைக்கிருக்கும்சமாதானம் அன்றைக்கிருக்கவேணும்
நாப்புக்கேற்றபிராணசிநேகிதன் தாவுத்துக்காரன்போனுன்
என்னுடன்வளர்ந்தமோவுத்துகாரன் அவனேபோனுனும்
இரண்டுஜீவனுக்கென்னிடஜீவன் என்னத்துக்கிருக்குது
என்கையில்பலமிருந்தால் ஆற்காடெந்தனுக்கு
ஜல்திஜல்திஓடிப்போடா தோன்றமல்லண்ணு
தப்பிப்பிழைத்தோமென்றுசொல்லி ஓடியேவாரானும்
தோன்றமல்லனைக்கண்டித்தசேதி நவாப்புகேட்டானும்
வேங்கடராயனையனுப்பிவைத்தான் நவாப்புசைதுல்லா
ஐந்நூறுகுதிரைத்தயார்பண்ணினுன் வேங்கடராயனும்
பாளையம்வந்ததைக்கண்ணுல்கண்டான் ராஜாதேசிங்கு
பட்டாவுருவிக்கையிலேபிடித்தான் ராஜாதேசிங்கு
பாளையங்குறுக்கேபுகுந்துவெட்டுகிறுன் இராஜாதேசிங்கு
மண்டைமண்டையாய்தள்ளிவெட்டுகிறுர் இராஜாதேசிங்கு
வேங்கடராயனைக்கண்ணுல்கண்டான் இராஜாதேசிங்கு
ஆனையின்மீதுஅம்பாரிவைத்து அவனுமிருக்கிறுனும்
இடதுகாலுக்குசிமிட்டாகொடுத்தான் இராஜாதேசிங்கு
முன்னங்காலைதூக்கிவைத்தது யானையின்தலைமேலே

பட்டாவுருவிவிளங்கினனையா இராஜாதேசிங்கு
ஓங்கினபட்டாவிழுந்ததானல் அவனேபோய்விடுவான்
வாய்பேச்சுபேசவில்லை வேங்கடராயரும்
மார்பிலிருந்தபூநூலைக்காட்டினன் வேங்கடராயரும்
பூநூல்போட்டபிராமணனையா வேங்கடராயரும்
போட்டிருந்தபூநூலைக்கண்டான் இராஜாதேசிங்கு
அவனைவிட்டுஅப்பாலேபோனன் இராஜாதேசிங்கு
அரிந்தரிந்துபோடுகிறனையா இராஜாதேசிங்கு
வாலிக்கோட்டைஅவுல்தாரும் டாருய்விழுந்தாரும்
மதுரைசீமைமலையாளத்தானு மிரண்டாய்விழுந்தானும்
திண்டுக்கல்லுகொலுமுகத்தானு மிரண்டாய்விழுந்தானும்
நூற்றெழுபத்திரண்டுபாளயக்காரனும் துண்டாய்விழுந்தானும்
அவரைச்சேர்ந்தபாளையமெல்லா மடியோடுவிழுந்தாரும்
ஆனையின்மேலேதொட்டில்வைத்து அவனுமிருக்கிறனும்
நவாப்பைக்கண்டுசிரித்தானையா இராஜாதேசிங்கு
இடதுகாலுக்குச்சிமிட்டாகொடுத்தான் பாராசாரிக்கு
முன்னங்காலைதூக்கிவைத்தது யானைதலைமேலே
சல்-பட்டாவுருவிபோட்டானையா சிப்பாய்தேசிங்கு
முன்னேயிருந்தமாவெட்டியானும் நிலத்தில்விழுந்தானும்
மாருக்குபாலாயிழுத்துப்பிடித்தான் இராஜாதேசிங்கு
அந்தவேளைக்குச்சலாம்வாங்கினன் நவாப்புசைதுல்லா
நானொருசேதிசொல்கிறேன்கேளும் இராஜாதேசிங்கு
நானுன்மேலேசண்டைக்குவரவில்லை இராஜாதேசிங்கு
ஒருகொள்ளைக்குஒன்பதுகொள்ளை நான் தாரேனையா
சல் நீயென்னபேச்சுபேசினயடா நவாப்புசைதுல்லா
இன்றைக்கிருக்குஞ்சமாதான மன்றைக்கிருக்கவேணும்
என்னுடன்வளர்ந்தசிநேகிதக்காரன்மோவுத்துகாரன்போனன்
எந்தன்பலமும்பாதிபோச்சுது மோவுத்துக்காரனேடே
உமக்கிசைந்தபிராணசிநேகிதன் தாவுத்துக்காரன்போனன்
இரண்டுஜீவனுக்கென்னிடஜீவன் என்னத்துக்கிருக்குது
என்கையில்பலமிருந்தால் ஆற்காடுயெந்தனது
உன்கையில்பலமிருந்தால் செஞ்சிக்கோட்டையுந்தனது
நூற்றெழுபத்திரண்டுபாலையப்பட்டு உனக்கேயானலும்
அந்த எழுபத்திரண்டுசேர்ந்ததடா செஞ்சிகோட்டையும்
செஞ்சிக்கோட்டைபணமுனக்கு குறைந்துபோச்சுதோ
இதோ-பணம்வருகுதுவாங்கிக்கொள்ளும் நவாப்புசைதுல்லா
சல் பாலாவருதுவாங்கிக்கொள்ளும் நவாப்புசைதுல்லா
ஈட்டிவருகுதுவாங்கிக்கொள்ளும் நவாப்புசைதுல்லா
தப்பித்துக்கொள்ளுதப்பித்துக்கொள்ளு நவாப்புசைதுல்லா
இடதுகாலுக்குச்சிமிட்டாகொடுத்தான் பாராசாரிக்கு

## மாவெட்டியான் குதிரையின் கால்களை வெட்டிவிடுதல்

முன்னங்காலைதூக்கிவைத்தது யானைத்தலைமேலே
ஆனைவயிற்றில்தொட்டில்கட்டி அவனுமிருக்கிறானும்
தொட்டிலிலிருந்தமாவெட்டியானும் எட்டிப்பார்த்தானும்
அவனுக்குமேலேகால்வைத்திருந்தது பாருசாரிகுதிரை
வலதுகாலைஓங்கிவெட்டினான் மாவெட்டியானும்
வலதுகாலும்விழுந்துபோச்சுது பாராசாரிக்கு
மூன்றுகாலோடேகீழேவிழுந்தது பாராசாரிகுதிரை
மூன்றரைநாழிகைசண்டைபண்ணுகிறான் இராஜாதேசிங்கு
மூவாயிரம்ஜனங்களுமங்கே டாருய்விழுந்தாராம்
இடதுகாலுக்குச்சிமிட்டாகொடுத்தான் பாராசாரிக்கு
முன்னங்காலைதூக்கிவைத்தது யானைத்தலைமேலே
இடதுகாலைஓங்கிவெட்டினான் மாவெட்டியானும்
இடதுகாலும்விழுந்துபோச்சுது பாராசாரிக்கு
நிமிஷநாழிகைகுதிரையிருந்தால் நவாப்புபோய்விடுவான்
இரண்டுகாலும்விழுந்துபோனதை இராஜாபார்த்தானும்
குதிரையைவிட்டுக்கீழேகுதித்தான் சிப்பாய்தேசிங்கு
இரண்டுகையிலும்பட்டாவுருவினான் இராஜாதேசிங்கு
குதிரையைக்கட்டியழுதானையா இராஜாதேசிங்கு
கோபம்வந்துமூண்டுக்கொண்டது இராஜாவுக்கானலும்
நவாப்புப்பாளையம்புகுந்தானையா சிப்பாய்தேசிங்கு
எங்கேயிருந்தசிப்பாய்மாரும் ஏகமாய்க்கூடினார்கள்
பதுங்கியிருந்தசிப்பாய்மாரும் பதுங்கியோடினார்கள்
கலகலகலகலகலகலவென்று கத்திசண்டைகளும்
கொக்குத்திரளில்ராஜாளிபுகுந்தாற்போல் புகுந்துவெட்டுகிறான்
வெள்ளரிக்காய்வீசினாற்போல் வீசிப்போடுகிறான்
டாருடாருய்த்தீர்த்துப்போடுகிறான் நவாப்புப்பாளயத்தை
கைப்பிடியாய்ப்பிடிக்கச்சொன்னான் நவாப்புசைதுல்லா
அதற்கவனும்பயப்படமாட்டான் சிப்பாய்தேசிங்கு
இருந்தபாளையமெல்லாம்விழுந்தது தேசிங்குகையாலே
நவாப்பின்மேலேதிரும்பினானையா இராஜாதேசிங்கு
நவாப்புவோடியொளித்தானையா நடுவானபானையத்தில்
நடுத்தண்டிலேதெரியுதுபாரு நவாப்புப்பாளயமும்
நவாப்பைச்சுற்றிவந்தானையா இராஜாதேசிங்கு
கோபம்வந்துமூண்டுக்கொண்டது இராஜாவுக்கானலும்
சல்-கொச்கரித்துதண்டில்விழுந்தான் சிப்பாய்தேசிங்கு
ஆனமட்டுஞ்சாடுகிறானையா இராஜாதேசிங்கு
நவாப்புஜனங்கள்போனவழியை நானுஞ்சொல்லமாட்டேன்
ஆனைகுதிரைசேனையெல்லாம் அடியோடேமாண்டதாம்

மண்டிபோட்டுவுட்கார்ந்தானையா இராஜாதேசிங்கு
இவனுக்கெதிரியாரையுங்காணேம் நவாப்புப்பாளையத்தில்
என்னுயிர்வாங்களனக்கெதிரி யாரையுங்காணுமே
என்னுயிரோடேசெஞ்சிக்கோட்டைக்கு நான்தான்போவேனே
சல்திசல்திசக்கரமனுப்பும் இரங்கநாதசுவாமி
இனிமேலிருக்கஞாயமில்லை இரங்கநாதசுவாமி
கோவிந்தாநாராயணவென்று கும்பிட்டென்னசெய்தான்
கத்தியைச்சுழற்றிஆகாயமெறிந்தான் இராசாதேசிங்கு
மார்பைவிரித்துமண்மேல்படுத்தான் இராசாதேசிங்கு
அப்போ-மூன்றுசத்தம்போட்டானையா இராசாதேசிங்கு
ஸ்ரீகிருஷ்ணராமாவென்றுசொல்லி கீழேவிழுந்தானும்
ஸ்ரீரங்காவென்றுசொல்லி கீழேவிழுந்தானும்

### நவாப்பு சாயபு தேசிங்குராஜனையெடுத்து மடிமீதில் வைத்து விசனப்படல்

இராஜாவிழுந்ததைக்கண்ணால்கண்டான் நவாப்புசைதுல்லா
தூக்கியெடுத்துமடியில்வைத்தான் நவாப்புசைதுல்லா
ஐயாகேளும்ஐயாகேளும் இராசாதேசிங்கு
எண்ணாயிரங்குதிரைவெட்டினாய் அப்பாதேசிங்கு
மூவாயிரங்கோடிதுரைகள்மாண்டாரே இராஜாதேசிங்கு
உயிருக்குப்பயந்துஒளிந்தேனடா அப்பாதேசிங்கு
உடனேதிரும்பிஊருக்குப்போகாமல் ஐயாதேசிங்கு
பொன்னனதிருமேனியைபொடியாக்கிவிட்டா யப்பாதேசிங்கு
தங்கத்திருமேனியைதரையில்கவிழ்த்தா யப்பாதேசிங்கு
பாவிநான்வந்துபழிகாரனுனேன் பாலாதேசிங்கு
உன்னைப்போல்சூரத்துளவருக்குமில்லை ஐயாதேசிங்கு
நீ-ஒருவனிருந்தாலுலகத்தையாள்வாய் அப்பாதேசிங்கு
நான்-பாவியிருந்துபலனென்னசொல்லு ஐயாதேசிங்கு
உலகில்நிந்தனையொருவனுனேன் இராஜாதேசிங்கு
மண்பூமிவிட்டுப்பொன்பூமிபோனுயே அப்பாதேசிங்கு
பொன்பூமியிலுந்தன்புகழ்நடக்குமோ ஐயாதேசிங்கு
இப்படிசொல்லியழுகிறானையா நவாப்புசைதுல்லா
கதறியேமெத்தவழுகிறானையா நவாப்புசைதுல்லா
களைகள்வந்துமூண்டுக்கொண்டது நவாப்புக்கானாலும்
கூடவந்தசேனைகளெல்லாம் கோவென்றழுதார்கள்
களைதெளிந்துஎழுந்துட்கார்ந்தான் நவாப்புசைதுல்லா
அண்ணாவாடாதம்பிவாடா பங்காருநாய்க்காநீ
குதிரைக்குக்கோரிகட்டச்சொல்லடா பங்காருநாய்க்காநீ
கோடிதிரவியம்தானங்கொடடா பங்காருநாய்க்காநீ
பட்டத்துபல்லக்குக்கொண்டுவாடா பங்காருநாய்க்காநீ

பஞ்சணைமெத்தைபோட்டுப்பரப்படா பங்காருநாய்க்கா
அந்தட்சணமேசெய்தானையா பங்காருநாய்க்கனும்
வாரியெடுத்துமடிமீதில்வைத்தான் நவாப்புசைதுல்லா
பார்த்தழுதுபல்லக்கில்வைத்தான் நவாப்புசைதுல்லா
நீயேவாடாநீயேவாடா தோன்றமல்லண்ணு
செஞ்சிகோட்டைக்குப்போய்விட்டுவாடா தோன்றமல்லண்ணு

தேசிங்குராஜன் இறந்ததை இராணி கேட்குதல்

அந்தசேதியைக்காதிலேகேட்டாள் ராணியம்மாளும்
அலங்கத்தின்மேலேறிப்பார்த்தாள் ராணியம்மாளும்
மார்பில்காயம்பட்டதானல் கோட்டைக்குவரச்சொல்லும்
தோளில்காயம்பட்ட தானல் திரும்பிப்போகச்சொல்லும்
அந்தப்பேச்சைக்காதிலேகேட்டான் தோன்றமல்லனும்
மார்பில்காயம்பட்டதென்று உத்தாரங்கொடுத்தானும்
கோட்டைக்குள்ளேபுகுந்தானையா தோன்றமல்லனும்
பல்லக்கையிறக்கிவைத்தானையா தோன்றமல்லனும்
சலாம்வாங்கித்திரும்பினனையா தோன்றமல்லனும்
நவாப்புக்குவந்துசொன்னன் தோன்றமல்லனும்
தப்பிப்பிழைத்தோமென்றுசொல்லி தைரியமானராம்
அலங்கத்தின்மேலிருந்தராணியம்மாள் இறங்கியேவந்தாளாம்
ஐயோதெய்வமேயென்றுசொல்லி கதறியழுதாளாம்
ராணியம்மாளழுகிறசத்தம் செஞ்சியில்கேட்டது
செஞ்சிகோட்டைஜனங்களெல்லாஞ் சேரவோடிவந்தார்
ராஜாபக்கத்தில்வந்தாளையா ராணியம்மாளும்

இராணி தேசிங்குராஜனைப் பார்த்துப் புலம்பல்

என்னசொல்லிபுலம்புறாளையா ராணியம்மாளும்
எந்தன்பேச்சுத்தடுத்துப்போனீரே எந்தன்பிராணநாதா
உந்தனெழுத்துமிப்படியிருந்ததோ எந்தன்பிராணநாதா
அக்கினிகுழியைவெட்டச்சொன்னள் ராணியம்மாளும்
சந்தனக்கட்டைகுங்குமக்கட்டை சுருக்காய்போடச்சொன்னள்
முழுகிஸ்நானம்பண்ணாளையா ராணியம்மாளும்
இனியில்லாதவுடமைபூட்டினள் ராணியம்மாளும்
தலைநிறையபுட்பஞ்சூட்டினள் ராணியம்மாளும்
ரங்கநாதனைவேண்டிக்கொண்டாள் ராணியம்மாளும்
பூமிதேவியைவேண்டிக்கொண்டாள் ராணியம்மாளும்
ஆகாயவாணியைவேண்டிக்கொண்டாள் ராணியம்மாளும்
அக்கினிகுழியைச்சுற்றிவந்தாள் ராணியம்மாளும்
கண்கள்குளிரராஜாவைப்பார்த்தாள் ராணியம்மாளும்
ராஜாவுடனேதீயில்குதித்தாள் ராணியம்மாளும்

தேவதுந்துபிமுழங்குதையா செஞ்சிகோட்டைக்குள்ளே
புஷ்பவிமானம்வந்ததையா ராஜாவுக்கானுலும்
இருவருங்கூடிஏறினாரையா புஷ்பரதந்தனிலே
புஷ்பவிமானம்வந்துநின்றது செஞ்சிகோட்டைக்குள்
வைகுந்தபதவியடைந்தார்களையா ராஜனும்ராணியும்
இரங்கர்பாதஞ்சேர்ந்தாரையா ராஜனும்ராணியும்

வாழி

தேசிங்குராஜன்கதையைப்படித்தவர் செழித்துமிகவாழி
கேட்டவர்யாவரும்சம்பத்துடன் கிளைத்துமிகவாழி
புத்திரசம்பத்துடையவராய் புகழ்ச்சியுடன்வாழி
மாடுகன்றுமனையுமுண்டாய் மக்கள்மிகவாழி
ஆல்போல்தழைத்து அறுகுபோல்வேரோடி
மூங்கில்போல்சுற்றங்கள் முசியாமலேவாழி
சந்திரர்சூரியர்களிருவருமே தழைத்துமிகவாழி
இந்திரனிந்திராணிவாழி எல்லோரும்மிகவாழி
முப்பத்துமுக்கோடி தேவர்களும்வாழி
நாற்பத்தெண்ணாயிரம்ரிஷிகள் நலமுடனேவாழி
அஷ்டதிக்கிலுள்ளோர் அஷ்டவசுக்களும்வாழி
சொன்னமொழிதவறாததேசிங்குராஜன் சுகமாய்மிகவாழி
பலகலையுணர்ந்தபாவலர்களும் பண்பாய்மிகவாழி
சிறப்புடனச்சிட்டோரெந்நாளும் செழிப்புடன்மிகவாழி
நலமுடன்இக்கதையைப்படித்தவர்கள் நன்றாய்மிகவாழி
நீடூழிநீடூழிகாலமுமாக நின்றுமிகவாழி
ஊழியுலகிலுள்ளோர் உகப்பாய்மிகவாழி
வாழிவாழியென்றுசொல்லி வரமளித்தார்ஈஸ்வரனார்.

வெண்பா

கதிர்மதியும்வாழி கலைகற்றமுனிவோர்வாழி
நதிகள்பலவும்வாழி நான்மறைவாழி—விதியுடனே
எல்லவரும்வாழிவிண் ணெல்லைகடந்திட்டவையன்
சொல்லவருமைம்புலமும் வாழியே.

கலித்துறை

சீருடனே செஞ்சிநா டாண்டவனைச் செழிக்கவைத்து
ஏருடனே வாழ்குடிகள் ஆதரித் தெந்தைரங்கர்
பேருடனே துதிசெய்தவர் பாதத்தைப் பிரியமாய்த்
காருடனேசேர் தேசிங்குராஜன் சரித்திரமும் வாழியவே.

தேசிங்குராஜன் கதை - முற்றிற்று.

ராஜாஜி பிரிண்டிங் பிரஸ், சென்னை—12.